

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பூநகரி முகாம் வீழ்ச்சியைத் தாங்க முடியாத சிறீலங்கா அரசு சென்ற ஆண்டு கார்த்திகைத் திங்களில் சர்வதேச சட்டவிதிகளுக்கு முரணான முறையில் தமிழீழமெங்கும் மக்கள் குடியிருப்புக்கள் மீதும் வழிபாட்டு ஸ்தலங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் மீதும் கண்மூடித்தனமான குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டது.

15.11.93 அன்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை மீது குண்டுவீச்சு விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதலின் போது கர்ப்பிணித் தாய்மாரும் குழந்தைகளும் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். இதனையே முன் அட்டைப் படத்திலும் இப்பக்கத்திலுள்ள புகைப்படங்களிலும் காண்கிறீர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடுகள்

# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பதின்மூன்றாம் ஆண்டு
மாசி 1994

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42


www.tamilarangam.net

# தலைவர் பிரபாகரனின் உறுதியான வழிகாட்டலில் வெற்றி நிச்சயம்

தமிழீழ விடுதலைப் போராட்டம், பிரதான எதிரியான சிறிலங்கா அரசாங்கத்துடனான ஆயுத முரண்பாட்டில், அரசாங்கத்தின் திட்டங்களை, அரசியல், இராணுவ நடவடிக்கைகளை, யுத்த தந்திரோபாயங்களை மேவிச் செல்ல ஆரம்பித்துள்ளது. தமிழீழத் தேசிய மக்களை சிறுபான்மையினராகவும், சிங்கள தேசியத்துக்குட்பட்ட ஒடுக்கப்பட்ட, இரண்டாம் தர மக்களாகவும் வைத்திருக்கும் சிறிலங்கா அரசின் குறிக்கோள் தோல்வியைத் தழுவி வருகிறது. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை நடத்திவரும் விடுதலைப் புலிகளே சமூக, அரசியல், இராணுவ, பொருளாதார பரிமாணங்களைக் கொண்ட ஆயுத முரண்பாட்டில் முன்னெடுப்புக்களை (Initiatives) மேற்கொண்டு வருவதாகவும், அம்முன்னெடுப்புக்களுக்கு ஈடுகொடுக்க முயற்சிக்கும் நடவடிக்கைகளுக்கே அரசாங்கம் பின்தள்ளப்பட்டுவிட்டதாகவும் கருதப்படுகிறது. இதற்குக் காரணமாக, சரியான அரசியல் தலைமை இல்லாமை சுட்டிக்காட்டப்படுகிறது. மேலும், யுத்த தந்திரோபாயத் திட்டத்தில் முற்று முழுதான மாற்றம் கொண்டுவரப்படவேண்டும் என்றும் சிங்களத் தேசத்தில் கூக்குரல் எழுகிறது. எத்தகைய மாற்றங்களைக் கொண்டுவந்த போதிலும் வெற்றியே பெறவேண்டும் என்று வரலாற்றால் விதிக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் போராட்டத்தை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதே உண்மையாகும்.

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களைப் பலவந்தமாக, இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் நடத்தி தமிழர் தாயகத்தின் தென்பகுதிகளைப் பிரிப்பதற்கான முன்நடவடிக்கைகளைச் செய்தல், வடபகுதியை இராணுவச் சட்டத்தின் கீழ் கொண்டுவருதல், புதிய இராணுவத் தளபதியின் கீழ், இராணுவத்தில் புதிய மாற்றங்களைக் கொண்டுவருதல், இராணுவத்திற்கு கூடுதலான ஆட்திரட்டுதல், கடற்படைக்கான நவீன ரோந்துப் படகுகளையும், இராணுவப் போக்குவரத்துக்காக MI 17 போன்ற உலங்கு வானூர்திகளையும் Y8 போன்ற பாரிய விமானங்களையும், ஆயுதத் தளபாடங்களையும் கூடுதலாக வாங்குதல் என்ற ரீதியில் இராணுவத் தீர்வுக்கான முஸ்தீபுகளை அரசாங்கம் செய்கின்றபோதிலும், இவை கூடிய பயனை அளிக்குமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ஊழல் நிறைந்த அரசியல், உறுதிகுலைந்த இராணுவம், உள் முரண்பாடு நிறைந்த இராணுவத் தலைமை, தளர்ந்த மக்கள் என்ற நிலையில் சிங்கள தேசம் இருக்கும் போது வெற்றியை கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாது.

இக்குழப்பமான நிலையையே, சில குழறுபடியான அரச முன்னெடுப்பு முயற்சிகள் காட்டுகின்றன. இந்திய இராணுவம் ஒரு அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தித் தலைவர் பிரபாகரனைக் கைப்பற்ற வேண்டும் என்று இந்திய அரசை சிறிலங்கா அரசாங்கம் கேட்டமை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசியல் யாப்பு சீர்திருத்தத்திற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குத் தீர்வுத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு விடுதலைப் புலிகளை வலியுறுத்தியுள்ளதானது கேலிக்கூத்தாகவே உள்ளது. முன்நிபந்தனைகளுடனான பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகளைச் சிறிலங்கா ஜனாதிபதி அழைத்ததானது, எப்போதும் போலான ஏமாற்று நிலைப்பாட்டையே அரசாங்கம் கொண்டுள்ளதை தெளிவுபடுத்தும் அதேவேளை, ஜனாதிபதியின் பிடி தளர்வதையும் அது சுட்டிக்காட்டுகிறது. இவ்வாறு தள்ளாடும் அரசாங்கத்துக்கு முட்டுக்கொடுக்கும் செயற்பாடுகளில், சில சர்வதேச அமைப்புக்களும் இந்திய அரசும் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்சதி மூலம், விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தை அழித்துப் போராட்டத்தை நசுக்குவதன்மூலம், சிறிலங்கா அரசாங்கத்துக்கு உதவ முன்வந்த இந்திய அரசின் நாசகாரத் திட்டம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, ஏற்படும் சூழ்நிலையைப் பயன்படுத்த சில சக்திகள் முன்வந்துள்ளன. மாத்தையா விவகாரத்தை பூதாகரப்படுத்தி, இயக்கத்தினுள் பிளவை ஏற்படுத்தலாம் என்ற நோக்கிலேயே இவை செயல்படுகின்றன. மாத்தையா சார்பான இவர்களின் நடவடிக்கைகள், சதி முயற்சி முறியடிக்கப்பட்ட பின்னரும் மாத்தையா விடயத்தை ஒரு துரும்புச் சீட்டாகப் பயன்படுத்தி, இயக்கத்தைப் பலவீனப்படுத்தும் எதிரிகளின் உள்நோக்கத்தைப் பிரதிபலிப்பவையாக உள்ளன. சிறிலங்கா, இந்திய அரசுகளின் தூண்டுதல்களின் பேரில் சில அமைப்புகளின் ஊடாகக் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள சர்வதேச ரீதியான பிரச்சாரம், சிறிலங்கா அரசாங்கத்தின் இனப்படுகொலைத் திட்டத்திற்கான உகந்த சர்வதேசச் சூழ்நிலையை உருவாக்கும் நோக்கம் கொண்டது என்பதையும் நாம் உணர்ந்துள்ளோம். இத்தகு, போராட்டத்துக்கும், விடுதலைக்கும் எதிரான, இயக்கத்தைப் பலவீனப்படுத்தும் செயல்பாடுகளில், தமிழ்த் துரோகக்குழுக்களைச் சார்ந்தோரும், சில தமிழ்ப் பத்திரிகையாளர்களும், தம்மைப் புத்திஜீவிகள் என நினைப்போரும், வியாபாரிகள் சிலரும் எதிரிகளால் பயன்படுத்தப்பட்டு வருவது குறித்தும் தமிழ் மக்கள் உசார் நிலையில் இருத்தல் அவசியம். தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் வழிகாட்டல் பிழைக்காது என்பது உறுதியின் அடிப்படையில் இதனைக் கூறுகிறோம்.

www.tamilarangam.net

# பூநகரியில் தீக்குளித்த புலிகள்



**பூநகரிச் சமர்.**

தமிழீழத்தில் நடந்த சமர்களுக்கு எல்லாம் தாய்ச் சமர்.

படை அமைத்தலில், படை இணைத்தலில், படை நகர்த்தலில் இது ஒரு புதிய பரிமாணம்.

போர் முறைக்கும், போர் யுக்திக்கும், போர்த் திறனுக்கும் இது ஒரு புதிய படிக்கல்.

புலிகளின் படையணிகள் ஒன்றிணைந்து, தேசியரீதியில் அணி சேர்ந்து, எதிரியைச் சந்தித்த பெரும் சமர்.

உலக வரலாற்று ஏட்டில் ஒப்புவமையற்ற போர் நிகழ்வாக இந்தச் சமர் பதிவைப் பெறுகிறது.

இந்தப் போர் நிகழ்வைத் திட்டமிட்டு நெறிப்படுத்திய பெருமை எமது தலைவனைச் சாரும். ஓய்வின்றி, உறக்கமின்றி, ஒருமுக நோக்குடன், ஓராண்டு காலமாகக் கட்டி எழுப்பிய திட்டம் பூநகரியில் பூகம்ப நிகழ்வாக செயல்வடிவம் எடுத்தது.

எதிரியின் இரும்புக் கோட்டைக்குள் புலிப்படை புயலாகப் புகுந்தது.

கடற்புலியாக, கரும்புலியாக, வரிப்புலியாக, பெண்புலியாக எல்லாப் புலிகளும் எல்லா முனைகளிலும் எதிரியுடன் மோதினர்.

பூநகரி கூட்டுப்படைத்தளம் ஒரு ரணகளமாக மாறியது.

ஒவ்வொரு முனையிலும் கடும் சண்டை மூண்டது. ஒவ்வொரு முனையிலும் ஒவ்வொரு தளபதி முன்நின்று வழிநடத்த, புலிப்படை வீரர்கள் முன்னேறிப் பாய்ந்தனர். வீராவேசத்துடன் போரிட்டனர். ஒவ்வொரு முனையிலும், ஒவ்வொரு அத்தியாயமாக, ஒப்பற்ற வீரகாவியம் படைக்கப்பட்டது.

எதிரிப் படையணி சீர்குலைந்தது. சிதறி ஓடியது. சிதைந்து போனது. எதிரியின் பாசறை, எதிரியின் கல்லறையாக உருமாற்றம் எடுத்தது.

சிங்கள இனவாத அரக்கர் சேனையின் ஆயிரம் தலைகள் உருண்டன. அதிலிருந்து பிரவாகம் எடுத்த இரத்த ஆறு, யாழ். நீரேரியைச் செங்கடல் ஆக்கியது.

அந்தக் காலத்தில், இந்தக் கடற்பரப்பில் சிங்கள இனவாத அரக்கர் படையின் ஆதிக்கம் இருந்தது. அப்பொழுது எல்லாம் இந்தக் கடலில் தமிழனின் இரத்தம் ஆறாக ஓடியது.

அன்று அந்த அரக்கர் படை கிளாலிக் கடலில் நரவேட்டை ஆடியது. வாள் தீட்டிவந்து இரத்தப்பலி எடுத்தது. இரவில், நடுநிசி மௌனத்தில், உடல் உறையும் குளிரில், உயிரைக் கையில் பிடித்தபடி பயணம் செய்த எமது மக்களை வழிமறித்து வெறியாட்டம் ஆடியது. அப்பாவிகள் என அவலமாகக் குரல் எழுப்பி, கைகூப்பிக் கும்பிட்டு, உயிர்ப்பிச்சை கேட்டவர்களைக் கண்டதுண்டமாக வெட்டிச் சரித்தது.

அன்று எமது மக்களின் மரண ஓலம் பூநகரி வானைப் பிளந்து அதிர்ந்தது. அந்தச் சாவோலம் கேட்டு, சதிராடி மகிழ்ந்த அரக்கர் படை பூநகரி மண்ணில் பிணங்களாய் விழுந்தனர்.

பழிக்குப் பழி எடுத்து, பகைவனைக் கொன்றழித்து, பகை முடித்த எமது வீர மறவர்களின் வெற்றி முழக்கம் இன்று பூநகரி வானில் அதிர்ந்தபடி இருக்கிறது.

பூநகரிப் பெரும் சமர் எதிரியை நிலைகுலைய வைத்தது. அரச படைத் தலைமையை அதிர வைத்தது. இராணுவவாதிகளைத் தலைகுனிய வைத்தது. சிங்களப் பேரினவாதப் பேய்க்கு முண்டு கொடுத்து நிற்பவர்களைத் திண்டாடச் செய்தது. போர்க் கலையில் எவரும் புலிகளுக்கு நிகரில்லை என உலகத்தாருக்கு உணரவைத்தது.

பூநகரியில் தீக்குளித்து, புலிகள் இயக்கம், புதிய பலத்தோடு எழுந்தது. விசைப் படகுகள், டாங்கிகள், பீரங்கிகளுடன் என்றுமில்லாப் பெருந்தொகையில் எதிரியின ஆயுதங்கள் புலிகளின் கைக்கு மாறியது.

யாழ்ப்பாணத்தின் கழுத்தை இறுக்கிய எதிரியின் பிடி தளர்ந்தது. முள்வேலி முற்றுகையின் முதுகெலும்பு உடைந்தது. கடல் நீரேரியின் கடலாதிக்கம் கடற்புலிகளின் கைக்கு வந்தது.

பூநகரி மண்ணில் பதியப்பட்ட இந்தச் சரித்திரச் சமர், புலிகள் இயக்கத்தின் புரட்சிகர ஆயுதப் போரை ஒரு புதிய படிநிலைக்கு முன்னோக்கி நகர்த்தியது. ஒரே பாய்ச்சலில், இரண்டாவது கட்ட ஈழப்போர் ஒரு புதிய வளர்ச்சிப் போக்கை எட்டிப் பிடித்தது. தமிழீழத் தாயகத்தின் விடுதலைப் பாதைக்கு ஒரு உறுதியான அடிக்கல்லையும் நாட்டிவிட்டது.

இந்த மாபெரும் வரலாற்றுச் சாதனையைப் படைத்து, பூநகரிக் களத்தில் 458 வீரவேங்கைகள் தலை சாய்த்தனர்.

சுதந்திரத் தமிழீழத்தில் எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும் என்பதற்காகத் தமது இன்னுயிரை ஈகம்செய்த இந்த மாவீரர்கள், எமது இதயக் கோவிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்.

காலத்தால் செத்துவிடாது, என்றென்றும் சுதந்திரமாய் வாழும் இந்த வரலாற்று நாயகர்களை தமிழீழத் தேசம் சிரம் தாழ்த்தி வணங்குகிறது.

*'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'*

'பூநகரிச் சமர்' வெற்றி குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவினரால் 11.12.93 அன்று வெளியிடப்பட்ட அறிக்கை இது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கருத்துலகமும் வாழ்வியக்கமும்

***கருத்துலகம் என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? அது எப்படி இயங்குகிறது?***

கருத்துலகம் என்றால் கருத்துக்களால் அமையப்பெற்ற உலகம். எண்ண உலகம். மனித சிந்தனைகள், நம்பிக்கைகள், கோட்பாடுகள், சித்தாந்தங்கள், வேதாந்தங்கள், தத்துவங்கள், இலக்கியங்கள் என்ற ரீதியில் கருத்துக்குவியல்களைக் கொண்ட உலகம். பலவகைப்பட்ட இந்தக் கருத்துருவங்களின் ஒட்டு மொத்தமான கட்டமைப்பையே இங்கு கருத்துலகம் எனக் குறிப்பிடுகிறோம்.

கருத்துக்கள் என்றால் மனிதனின் மனவுலகக் குகைக்குள் வசிக்கும் அரூபமான நிழலுருவங்கள் அல்ல. அன்றி, அவை அனுபவத்திற்கு அகப்படாத பூடகமான மானசீகப் பொருட்களுமல்ல.

கருத்துகளுக்கு இருப்புண்டு. திண்ணியமான பொருளிய வாழ்வுண்டு. கருத்துக்கள் மனித பண்பாட்டு உலகிலிருந்து பிறப்பெடுத்து மனிதர்களைப் பற்றிக்கொள்கிறது.

அன்றொரு காலம், பல யுகங்களுக்கு முன்னர், இந்தப் பூமியில் ஒரு கருத்து பிறப்பு எடுத்தது. கருத்துக்களின் மையக் கருத்தாக அது புனிதம் பெற்றது. மேலாதிக்கம் எடுத்தது. மனிதனை அது ஆழமாகப் பற்றிகொண்டது.

அந்தக் கருத்துக்கு மனிதன் பொருள் வடிவம் கொடுத்தான். மலைகளைப் பெயர்த்து, கற்பாறைகளைத் தகர்த்து, கலைவடிவம் கொடுத்தான். ஆயிரமாயிரம் ஆலயங்கள் எழுந்தன.

அந்தக் கருத்திற்கு மனிதன் விளக்கங்கள் கொடுத்தான். வியாக்கியானங்கள் கொடுத்தான். வேதங்கள் தோன்றின. சித்தாந்தங்கள் பிறந்தன. கிரிகைகள், சடங்குகள் தோன்றின. கோடானு கோடி அடியார்கள் தோன்றினர். ஆராதனைகள் நடத்தினர்.

அந்த மையக்கருத்தில் எழுந்த கருத்துலகம் மனித குலத்தை ஆட்டிப்படைத்தது.

கருத்துலகத்திலிருந்தே தனி மனித மனம் உருவாக்கம் பெறுகிறது. கருத்துலகம் மனிதனை இயக்குகிறது. மனிதனின் சமூக செயற்பாடுகளுக்கு ஆதாரமாக இருக்கிறது. நாம் கருத்துலகால் வனையப்பட்ட சமூகப் பொம்மைகள்.

நாம் பிறந்த கணத்திலிருந்தே கருத்துலகம் எம்மை விழுங்கிக் கொள்கிறது. நாம் பிறந்து விழிப்புணர்வு பெறுவதற்கு முன்னரே எமக்கு விலங்குகளை மாட்டிவிடுகிறது. விபரமறியாப் பருவத்திலேயே எமது விதியை நிர்ணயித்துவிடுகிறது. கண்திறக்காத சிசுவாக இந்தப் பூமியில் பிரசவித்த கணத்திலிருந்து எமக்கு ஒரு பெயர் சூட்டி, எமக்கு வம்சம் என்றும், சாதியென்றும், மதமென்றும், மரபு என்றும், சம்பிரதாயம் என்றும் கருத்துலகம் குத்திவிடும் சமூகக்குறிகள் சுடுகாடு வரை எம்மை பின்தொடர்கின்றன. நாம் வாழ்ந்த குடும்பம், நாம் படித்த பாடசாலை, நாம் வழிபட்ட கோவில், நாம் வாசித்த நூல்கள், நாம் பழகும் நண்பர்கள், நாம் வரித்துக்கொண்ட ஆசான்கள் என நாம் கொண்ட கருத்துறவுகளால் காலம் காலமாக எமது மூளையில் திணிக்கப்பட்ட எண்ணங்கள், நம்பிக்கைகள், சித்தாந்தங்கள், உலகப் பார்வைகளால் எமது மனமும் எமது சுயமும் தோற்றப்பாடு கொள்கிறது.

எம்மீது திணிக்கப்பட்டதும் எம்மை ஆகர்ஷித்துக்கொண்டதுமான கருத்துக்கள் எமக்கு உள்ளே இருப்புக்கொண்டு இயந்திரமாக எம்மை இயக்கிக் கொண்டிருக்கின்றன.

அந்த கருத்து ஆழமான நம்பிக்கையாக அவனை ஆட்கொண்டது. அந்தக் கோவில் விக்கிரகத்தின் முன்பாக சாஷ்டாங்கமாக விழுந்து எழுகிறான். பின்னர் பிரகாரத்தைச் சுற்றி பிரதட்சிணம் செய்துவருகிறான். நம்பிக்கை என்ற கருத்தியக்கம் அவனை இயக்கியது. அன்று காலை அரைமணி நேரமாக அந்த மத பண்பாட்டுச் சடங்குகளில் காலம் நழுவியது தெரியாதவாறு எண்ண இயந்திரம் அவனை இயக்கியது.

இந்த உலகத்தை பல உலகங்களாக வகைப்படுத்திப் பார்க்கலாம். எல்லையற்ற பிரபஞ்சமாக வியாபித்து நிற்கும் பேருலகம், சூரியமண்டலத்தில் சுற்றித்திரியும் பூவுலகம், பொருள் மயமாகக் காட்சிதரும் பொருளுலகம், மனித உறவுகளால் பின்னப்பட்டிருக்கும் சமூக உலகம் இப்படியாகப் பல உலகங்கள் உண்டு. இந்த வகையில் கருத்துலகம் என்ற ஒரு உலகமும் உண்டு.

பிரம்மஞானி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருவனது நடத்தை, அவனது செயற்பாடு, அவன் நாளாந்தம் நடத்தும் வழிபாடுகள், மற்றவர்களுடன் சேர்ந்து அரங்கேற்றும் சம்பிரதாயச் சடங்குகள், உறவு முறைகள் எல்லாமாக அவனது சமூகநடைமுறைச் செயற்பாடுகள் அனைத்தையுமே கருத்துலகம் நிர்ணயித்துவிடுகிறது.

மனிதர்கள் தம்மை அடையாளம் காணவும், சமூகப் பிறவிகளாக தம்மை உருவாக்கிக் கொள்ளவும், மற்றவர்களுடன் உறவுகொண்டு பண்பாட்டு வாழ்வில் பங்குகொள்ளவும் கருத்துலகம் வழிசெய்து கொடுக்கிறது. இந்த வகையில் தனிமனித வாழ்விற்கும் சமூக சீவியத்திற்கும் கருத்துலகம் ஆதாரமாக இருக்கிறது.

கருத்துக்கள் சமூக உலகம் சார்ந்தவை. கருத்துலகமானது சமூக உலகத்தின் ஒரு உலகமாக, சமூகக் கட்டமைப்பின் ஒரு அமைப்பாக, மனித வாழ்வியக்கத்தை ஊடுருவி நிற்கிறது.

கருத்துலகத்தை சமூக உலகமே படைக்கிறது. சமூக நிறுவனங்களே கருத்துலகை உருவாக்கம் செய்கின்றன.

குடும்பம், பாடசாலை, பல்கலைக்கழகம், கோவில், கட்சி, தகவல் தொடர்பு ஸ்தாபனங்கள் என்ற ரீதியில் கருத்து உற்பத்தி நிறுவனங்கள் உள்ளன. பேச்சாக, எழுத்தாக, பாடமாக, போதனையாக, பிரசங்கமாக, பிரச்சாரமாக, செய்தியாக, தகவலாக, பல்வேறு வழிகளில், பல்வேறு வடிவங்களில் கருத்து உற்பத்தி நிகழ்கிறது. குழந்தைப் பருவத்திலிருந்து வாலிபப் பிராயம் வரை வீட்டிலும் பள்ளியிலுமாக நீண்ட நெடுங்காலம் ஒருவனுக்கு கருத்துத் திணிப்பு நடக்கிறது. அந்தக் கருத்துலக அழுத்தத்தில் அவனது ஆளுமை பிறந்து வளர்கிறது. மூளைக்குள் கொட்டப்பட்ட கருத்துகளின் தன்மையைப் பொறுத்ததாக அவனது சிந்தனையும், செயற்பாடும், சீவியமும் அமைந்துவிடுகிறது.

கருத்துகளைப் படைத்து, அந்தக் கருத்துகளை வெகுசன அரங்கில் பரப்பி, சமூகக் கருத்தோட்டத்தைக் கட்டி வளர்த்து, சமூக சிந்தனைப் போக்கை நெறிப்படுத்தி, சமூகக் கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதில் கருத்து உற்பத்தி நிறுவனங்களின் பங்கு முக்கியமானது. இந்த வகையில் மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி, அவர்களைக் கட்டுப்பாட்டுடன் ஆளுவதற்கு கருத்துலகம் அவசியமானது என்பதால் உலகத்திலுள்ள பல்வேறு அரசுகளும், ஆளும்வர்க்கங்களும் கருத்து உற்பத்தி நிறுவனங்களை தமது அதிகாரக் கட்டுப்பாட்டின்கீழ் வைத்துள்ளன.

ஒரு அரசு என்றாலும் சரி, அல்லது அந்த அரசுக்கு முண்டு கொடுத்து நிற்கும் ஆளும்வர்க்கம் என்றாலும் சரி, கருத்துலகம் வாயிலாகவே தனது ஆட்சியை நியாயப்படுத்தி நிலைநிறுத்த முயற்சிக்கிறது.

கருத்துகளை மக்கள்மீது திணித்து, மக்களின் விழிப்புணர்வை மழுங்கடித்து, மக்கள் மனவரங்கில் ஒரு பொய்யான பிரக்ஞையை உருவகித்து, கருத்தாதிக்கம் மூலம் தனது ஆட்சியை வலுப்படுத்துகிறது. இந்த வகையில் கருத்துலகமானது மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் ஒரு அடக்குமுறைக் கருவி

புள்ளினம் சிறகினை விரித்தன, வரம்பின்
புற்களும் தலைகளை நிமிர்த்தின, வாய்க்கால்
தெள்ளிய நீரினில் குதித்தன மீன்கள்
தேவியர் வாயிதழ் சிரித்தன, பூவில்
கள்ளினைக் குடித்தபொன் வண்டுகள் பாடிக்
களித்தன, தமிழனே! இன்னுமா உறக்கம்?
பள்ளிகொள் கின்றனை பகைவனுன் வீட்டுப்
படலையில் வந்துளான் பாயைவிட் டெழுவாய்.

எங்கணும் கதிரொளி எழுந்தது பாராய்
இருளவன் பிடியிருந் தகன்றது வையம்
மங்கலச் சங்கொலி காற்றினில் பரவி
மனதிடை புத்துணர் வேற்றுதல் அறிவாய்
பங்கயம் மலர்ந்தது, பசுமடி நிறைந்து
பாலெலாம் ஊற்றெனப் பாய்ந்தது, வீரம்
பொங்கிடப் புலிப்படை புகுந்தது களத்தில்
போர்முர சதிர்ந்தது பாயைவிட் டெழுவாய்.

கோழிகள் கூவின, முருகனின் கோவில்
கோபுர மணிகளும் அசைந்தன, தமிழில்
வாழிய பாடியோர் புலவனுன் வாசல்
வரையிலும் வந்துளான் கேட்டுநீ எழுவாய்
பாழிருட் டகன்றது வேங்கைகள் சேனை
பகைமுடித் தாடிய படிவரும் சத்தம்
ஆழியின் பேரலை அடிப்பது போன்று
அண்மையில் கேட்குது பாயைவிட் டெழுவாய்.

மாலிகா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாகப் பாவிக்கப்படுகிறது.

அன்றொருகாலம், காலனித்துவப் பேரரசுகள் இந்தப் பூமிமீது தமது வல்லாதிக்கத்தை விரிவுபடுத்தியபோது ஆயுத வன்முறையை மட்டும் பாவிக்கவில்லை. கருத்தாதிக்கத்தையும் ஒரு அடக்குமுறைக் கருவியாக அவர்கள் பிரயோகிக்கத் தவறவில்லை. மதம், மொழி, தத்துவம், தார்மீகம், அரசியல் என்ற ரீதியில் அந்நியப் பண்பாட்டுக் கருத்துருவங்கள் சுதேசிய மக்கள் மீது திணிக்கப்பட்டன. நிலத்துடன் நின்றுவிடாது மக்களின் மனவுலகமும் ஆக்கிரமிக்கப்பட்டது.

கருத்து விலங்கிட்டு மனித மனங்களை சிறைகொள்வது ஒரு நுட்பமான அடக்குமுறை யுக்தி. உலகெங்கும் அடக்குமுறையாளர்கள் இந்தக் கருத்தாதிக்க யுக்தியையே கடைப்பிடிக்கிறார்கள். பொய்யாக, புரட்டாக, புனைகதையாக, புராணத்துப் புதிர்களாக மெய்மையைத் திரித்து, கருத்துலக மாயைக்குள் மனித மனங்கள் புதைக்கப்படுகின்றன. மனிதர்களை விழித்தெழச் செய்யாது, அவர்களை நித்திய உறக்கத்தில் ஆழ்த்துவதற்கு ஏகாதிபத்தியவாதிகளும் சரி, பேரினவாதிகளும் சரி, இந்த எண்ணப் போதையையே பாவித்து வருகின்றனர். மக்களின் கிளர்ச்சியை நசுக்க, புரட்சியை முறியடிக்க, விடுதலை உணர்வை கொன்றுவிட கருத்து ஒரு கனரக ஆயுதமாகப் பிரயோகிக்கப்படுகிறது.

முதலாளித்துவ உற்பத்தி உலகம் தனது அநீதியான சுரண்டல் முறையை நியாயப்படுத்த மிகவும் சாதுரியமான முறையில் கருத்துலகத்தைப் படைத்திருக்கிறது. இந்த அநீதியான உலகில்தான் நீதிபற்றிய கருத்துகள் மிகவும் அழகான ஆடைகள் அணிந்து கவர்ச்சிகரமாகத் தோற்றமளிக்கின்றன.

இங்குதான் மனித சுதந்திரம், மனித உரிமை, மனித தர்மம், மக்கள் ஆட்சி எனப் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட கருத்துருவத் திரைக்குப் பின்னால் மிகவும் கொடூரமான ஒடுக்குமுறை தாண்டவமாடுகிறது. இந்தப் புனிதமான கருத்துருவக் கோஷங்களை எழுப்பியபடிதான் உலக முதலாளித்துவ அரசுகள் பூமியின் இரத்தத்தை உறுஞ்சிக்கொண்டிருக்கின்றன. முதலாளித்துவ உற்பத்தி உலகில் தான் கருத்துலக மாயைக்கும் நடப்பியல் எதார்த்தத்திற்கும் மத்தியில் எவருமே கண்டுகொள்ள முடியாதவாறு முரண்பாடுகள் மூடிமறைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு தான் உழைக்கும் மக்களுக்கு கருத்துப் போதையும் உழைப்பை சுரண்டுபவனுக்கு நிகரலாபமுமாக சனநாயக சமத்துவம் தழைத்தோங்கி நிற்கிறது

எந்தவொரு காலத்திலும், எந்தவொரு சமூகத்திலும் அதிகார மேலாண்மையும் கருத்துநிலை மேலாதிக்கமும் ஒன்றோடொன்று தொடர்புடையதாக, ஒன்றுக்கொன்று முண்டுகொடுப்பதாக இயங்கிவருகிறது. அன்றும் சரி, இன்றும் சரி, சமூகத்தில் அதிகார ஆதிக்கம் பெற்ற சக்திகளே கருத்து நிலையிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. முதலாளித்துவ உற்பத்தி உலகில் ஆளும் வர்க்கத்தின் கருத்துநிலை மேலாதிக்கமானது, ஆட்சி அதிகாரத்தை நியாயப்படுத்தி நிலைநிறுத்துவது மட்டுமல்லாது பொருள் உற்பத்தி உறவுகளை மீளாக்கம் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது. இந்தக் கைங்கரியத்தை கருத்து உற்பத்தி நிறுவனங்களே நிறைவுசெய்கின்றன. கருத்து உற்பத்தியின் மையமாக விளங்கும் கல்வி நிறுவனங்களே இதில் முக்கிய பங்கு வகிப்பதாக அல்தூசர் என்ற சிந்தனையாளர் சுட்டிக்காட்டியிருக்கிறார். இங்குதான் முதலாளித்துவத்தின் தொழிலாக்க சக்தியாக தொழிலாளர் படையும், தொழில்நுட்ப நிபுணர்கள், நிர்வாகிகள், முகாமையாளர்களும் உருவாக்கப்படுகின்றனர். சட்டம், அரசியல், சமூக விஞ்ஞானம், தத்துவம் போன்ற பாடத்திட்டங்கள் முதலாளித்துவ ஆட்சியமைப்பின் சித்தாந்தக் காவலர்களை உருவாக்கிக் கொடுக்கிறது. இப்படியாக முதலாளித்துவம் தனது ஆட்சியதிகாரத்தை நீடிக்கவும், பொருள் உற்பத்தி உறவுகளை மீளாக்கம் செய்யவும் கருத்துலக நிறுவனங்களைப் பயன்படுத்துகிறது.

சரிந்துபோன சோசலிச சர்வாதிகார உலகமும் 'அரச சித்தாந்தம்' என்ற பெயரில் கருத்தாதிக்கம் வாயி



## புகைப்படக் கண்காட்சி

**சிங்கள இனவாத அரசின் பொய்ப் பிரச்சாரங்களை முறியடிக்கும் நோக்குடன்...**

**தமிழீழத்தில் சிறிலங்காவின் முப்படைகளும் நடாத்திவரும் கண்மூடித்தனமான தாக்குதல்களையும், இராணுவம் சந்தித்த, சந்தித்துவரும் தோல்விகளையும் சித்தரிக்கும் புகைப்படக் கண்காட்சி ஒன்றினை கொழும்பில் நடாத்த 'ராவய' என்ற சிங்களப் பத்திரிகை நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.**

**வட தமிழீழ நிலைமை குறித்து சிறீலங்கா அரசு வெளிக்கொண்டு வருகின்ற பொய்ப் பிரச்சாரங்களை தென்பகுதியில் உள்ள மக்களுக்கு புரிய வைப்பதற்கான நோக்கத்துடனேயே இக்கண்காட்சி நடாத்தப்படுவதாகத் தெரிகிறது.**

**இக்கண்காட்சியில் புலோப்பளை வரலாற்றுச் சமரில் இராணுவம் சந்தித்த பாரியதோல்விகளைப் படம்பிடித்துக்காட்டும் புகைப்படங்களும் 'ராவய' பத்திரிகையாளர்களால் எடுத்துச் செல்லப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லாகவே மக்களைக் கட்டுப்படுத்தி, நெறிப்படுத்த முனைந்தது. மார்க்சிய மரபுவாத்தை மெய்யுண்மைத் தத்துவமாகச் சித்தரித்து ஆட்சியதிகாரத்தை மக்கள்மீது திணித்தது. இன்றைய மூன்றாம் உலகத்திலும், அரசுகள், கருத்துத் திணிப்பை அடக்குமுறைக் கருவியாகப் பயன்படுத்துகின்றன. மேற்குலக 'சனநாயக' பாரம்பரியத்தையும் முதலாளித்துவ பொருளுற்பத்தி முறையையும் தழுவிக்கொண்டுள்ள இந்தியா, சிறீலங்கா போன்ற நாடுகளிலும் இதே நிலைமையைக் காணலாம்.

இந்தியாவில் பிராமணிய கருத்துலகம் மேலாண்மை பெற்று நிற்கிறது. பாரத பூமியில் ஆரியர் பாதங்களைப் பதித்த யுகத்திலிருந்து, வேதங்கள் என்றும் இதிகாசம் என்றும் மனுநீதி சாஸ்திரங்கள் என்றும், மனித தர்மங்கள் என்றும் பார்ப்பானியம் படைத்துவிட்ட கருத்துலகம், பூதாகரமாக வளர்ந்து, ஆழவேரோடி, அரசியல் கிளை பரப்பி, ஒரு இந்து சாம்ராஜியமாக இன்று மேலோங்கி நிற்கிறது.

பஞ்சம், பட்டினிச்சாவு, ஏழ்மை, வறுமை, அநீதி, அடக்குமுறை, இரத்தத்தை உறுஞ்சும் சுரண்டல்முறை, எல்லாவற்றையுமே ஏற்புடையதாக, இயல்பானதாக, சாதாரண வாழ்வின் சாதாரண நிகழ்வுகளாக, முற்பிறவி வினையாக, பிரம்மலோக தர்மமாக நியாயப்படுத்தவல்ல மாபெரும் கருத்தாதிக்க சக்தியாக பிராமணியம் செயல்படுகிறது. துறவிகளின் ஆச்சிரமத்திலிருந்து சினிமா உலகம்வரை, பத்திரிகைத்துறையிலிருந்து பல்கலைக்கழகம் வரை, எல்லா விதமான கருத்து உற்பத்தி நிறுவனங்களிலும் பார்ப்பானிய ஆதிக்கம் ஊடுருவிநின்று பரந்துபட்ட இந்திய வெகுசனம் மீது மேலாதிக்கம் செலுத்திவருகிறது. இந்த மேலாதிக்க கருத்துநிலையானது, இந்திய மேல் தட்டுவர்க்க சக்திகளின் அதிகார உறவுகளுடன் ஒன்றிணைந்ததாக பிராமணிய ஆட்சியமைப்பு கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது. இந்தப் பிராமணிய மேலாண்மை (HEGEMONY) இந்திய தேசிய இனங்களின் தேசியவாத கருத்தோட்டங்களையும் படிப்படியாக ஏப்பம் விட்டுவருகிறது.

கருத்துலகமானது மார்க்சிய மரபுவாதிகள் கருதியதுபோல பொருளாதார அடித்தளத்திலிருந்து மேலெழும் பிரதிபிம்பங்கள் அல்ல. அன்றி 'பனிமூட்டம்' போன்ற பொய்யான கற்பனாவாத பிரமைகளும் அல்ல. கருத்துலகமானது மனித வாழ்வையும் சமூக இயக்கத்தையும் நிர்ணயிக்கும் ஒரு மாபெரும் சக்தி. கிராம்ஸி என்ற தத்துவ அறிஞன் கூறியதுபோல, 'ஒரு பொருளாய வரலாற்று சக்தி' சமூக மாற்றத்தை ஏற்படுத்தவல்ல சக்தி.

பொருளாதார கட்டுமானத்தின் மீது கருத்துலகம் கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது என்றும் பொருள் உற்பத்தி உறவுகளில் அடிப்படையான மாற்றங்கள் நிகழ்ந்து சமூக மாற்றம் ஏற்படும்பொழுது, கருத்துலகிலும் தன்னிச்சையாகவே மாற்றங்கள் ஏற்படுமெனவும் மரபுவாத மார்க்சியம் கருதியது. இது ஒரு தவறான கண்ணோட்டம் என்பதை வரலாறு நிரூபித்திருக்கிறது.

கருத்துலகமானது, சமூக உலகத்தின் ஒரு உலகமாக, சமூக வாழ்வியக்கத்துடன் பின்னிப் பிணைந்து இயங்கியபோது, அதற்கொரு தனித்துவமுண்டு. தன்னியல்பான வாழ்வுண்டு. பொருளாதார மாற்றங்களினால் கருத்துநிலையில் தன்னிச்சையாக மாற்றம் நிகழ்வதில்லை.

கருத்துலக மாற்றம் கருத்துப் புரட்சியால் ஏற்படுகிறது. கருத்துப் போராட்டத்தால் நிகழ்கிறது. ஆழமான விழிப்புணர்வால் ஏற்படுகிறது.

பழைய கருத்துகளுக்குப் பதிலாக புதிய கருத்துகளை திணிக்க முயல்வது கருத்துப் புரட்சி ஆகாது. அது கருத்துலக மாற்றத்தை கொண்டுவரப் போவதில்லை. சீனக் கலாச்சாரப் புரட்சி கருத்துலகை மாற்றவில்லை. எதிர்ப்புணர்வையே தோற்றுவித்தது.


புதிய கருத்துகள், புரட்சிகரமான கருத்துகள் மக்களின் மனதைப் பற்றிக்கொள்ளும் பொழுதே கருத்து மாற்றம் நிகழ்கிறது.

அந்தக் கருத்துகள், மக்களின் மண்ணுக்கு நீர்பாய்ச்சி, அவர்களின் வரலாற்று வேருக்கு உரமூட்டி, அவர்களின் சமூக பண்பாட்டு வாழ்வை மேம்படுத்தி, ஒளிமயமான எதிர்காலத்தை குறியிட்டுக் காட்டுவதாக அமையும்பொழுதே அவை மக்களைப் பற்றிக்கொள்கின்றன.



## இவ்வளவு இழப்பின் மத்தியிலும் யுத்தத்தை நடத்தத்தான் வேண்டுமா?

கடந்த பத்து ஆண்டு காலப் போரில் 336 படை அதிகாரிகள், 9718 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்; 5000 படையினர் காணாமல் போயுள்ளனர் என பாதுகாப்பு அமைச்சினால் கூறப்படுகிறது. இவ்வளவு இழப்பின் மத்தியிலும் யுத்தத்தை நடாத்த வேண்டுமா? கடந்த பத்து ஆண்டுகளில் ஏழு இராணுவத் தளபதிகள் பதவி வகுத்துள்ளனர். ஐந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்கள் பதவி வகுத்துள்ளனர். மூன்று பாதுகாப்பு அமைச்சர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆனாலும் யுத்தம் தொடர்கிறது என கம்யூனிஸ்ட் கட்சி உபதலைவர் டி.யூ. குணசேகரா கூட்டமொன்றில் கேள்வி எழுப்பியுள்ளார்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மொஹஞ்சதாரோ வண்டி

## இந்துநதிப் பள்ளத்தாக்கில் திராவிட நாகரிகம் செழித்தோங்கியிருந்தது.



### புதைபொருள் ஆய்வுகள் சான்றுகளுடன் நிறுவுகின்றது.

யாழ்ப்பாணத் தெருக்களில் இன்று மாட்டு வண்டிகளை நித்தம் காணலாம். இவை போன்ற வண்டிகளை இற்றைக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் இந்துநதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்களும் உபயோகித்தனர். அங்கு சிதைவுகளாகக் கண்டெடுக்கப்பட்ட விளையாட்டுப் பொருட்களிடையே களிமண்ணால் செய்யப்பட்ட வண்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. எனவே, அப் பழையகால நாகரிக மக்கள் இத்தகைய வண்டிகளை உபயோகித்துள்ளனர் என்பது தெளிவாகின்றது.

இந்தியத் துணைக்கண்டத்தில் வடமேற்குப் பகுதியில் ஓடும் மிக முக்கிய நதி இந்து நதியாகும். இது இன்று பாகிஸ்தானுக்குச் சொந்தமானது. இமயமலையில் உற்பத்தியாகும் ஜீலம், செனாப், ரவி, பியர்ஸ், சட்லெச் ஆகிய கிளைகள் ஐந்தையும் கொண்ட இந்துநதி, கராச்சித் துறைமுகத்துக்கருகில் அராபிக் கடலில் விழுகிறது. இந்த இந்துநதிப் பள்ளத்தாக்கில் மிக ஆதிகாலம் தொட்டு மக்கள் குடியிருந்தனர்.

கி.பி. 1921ஆம் ஆண்டு தயாராம் ஷனி என்ற புதைபொருள் ஆராய்ச்சியாளர் பஞ்சாப்பில் ரவி நதிக்கண்மையில் ஹரப்பா என்ற நகரத்தின் சிதைவுகளைக் கண்டுபிடித்தார். 1922 ஆம் ஆண்டு ஆர்.டி. பனர்ஜி என்ற புதைபொருள் ஆராய்ச்சியாளர் இந்துநதியின் கீழ்ப்பகுதியிலுள்ள சிந்துப் பிரதேசத்தில் மொஹஞ்சதாரோ என்ற பண்டைய நகரின் சிதைவுகளைக் கண்டுபிடித்தார். இவற்றைத் தவிர இந்துநதி நாகரிகத்துடன் சம்பந்தப்பட்ட வேறு 70 இடங்களையும் வேறு புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர். இவற்றுள் சில இந்துநதியின் மேற்பகுதியிலும், சில கங்கைநதியின் மேற்பகுதியிலும், வேறு சில குஜராத்திலும், நர்மதா நதி ஆற்றுமுகத்துக்கருகிலும் அமைந்துள்ளன. இவற்றிலிருந்து இம்மக்கள் இந்துநதிப் பள்ளத்தாக்கிலும் இந்தியாவின் ஏனைய பிரதேசங்களிலும் பரவியிருந்தனர் என்பது தெளிவாகிறது.

புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் மொஹஞ்சதாரோவிலும் ஹரப்பாவிலும் மாபெரும் நகரங்களைக் கண்டுள்ளனர். இந்நகரங்களில் பதிந்த மதிற் சுவர்களுக்குள் அமைந்த உள் நகரங்கள் இருந்தன. பிரதான கட்டிடங்களெல்லாம் உள் நகரத்திலேயே அமைந்திருந்தன. மதிலுக்கப்பால் அமைந்திருந்த வெளி நகரில் சாதாரண குடிமக்கள் வாழ்ந்தனர். கட்டிடங்களும், மதில்களும் ஒரேமாதிரியான கற்களால் கட்டப்பட்டிருந்தன. சில உலர்ந்த செங்கற்களினாலும் பெரும்பாலானவை சுட்ட செங்கற்களினாலும் அமைக்கப்பட்டிருந்தன. இவ்விரு நகரங்களிலும் பெரிய தானியக் களஞ்சியங்கள் அமைந்திருந்தன என்பது சிதைவுகளிலிருந்து புலனாகிறது. அவர்களுடைய பிரதான உணவு கோதுமையாக இருந்த போதும், வாற்கோதுமை, எள் ஆகிய தானியங்களையும் பயிரிட்டுள்ளனர். ஆடு, மாடு, எருமை, பன்றி. செம்மறி, கழுதை ஆகிய விலங்குகளை வளர்த்துள்ளனர். கோழிகளும் நாய்களும் வளர்க்கப்பட்டுள்ளன.

ஆண்களும் பெண்களும் பருத்தியிலான மென்மையான உடைகளை அணிந்துள்ளனர். தங்கம், வெள்ளி, செம்பு, யானைத் தந்தம் ஆகியவற்றைக்கொண்டு செய்த காப்பு, மாலை, காதணி, மூக்கணி, நெற்றிப்பட்டம், கணையாழி ஆகிய அணிகளை அணிந்துள்ளனர். இந்நாகரிக மக்களது வீடுகளில் குளியலறைகள் இருந்துள்ளன. வீதிகள், வடிகால்கள் இந்நகரங்களில் நன்கு அமைந்திருந்தன. சித்திர எழுத்துக்களை இந்நாகரிக மக்கள் பயன்படுத்தியுள்ளனர். இங்கு அகப்பட்ட சிலைகள், சின்னங்கள் என்பவற்றைக் கொண்டு இங்கு திராவிட நாகரிகம் செழித்திருந்துள்ளது எனக் கணிக்கின்றனர்.

**நன்றி:**
**அறிவுக்களஞ்சியம், தமிழீழம்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழினத்தின் முகவரி பிரபாகரன்



"தமிழ் நாடு தமிழருக்கே!" என்ற
பெரியாரின் எண்ணத்திற்கு
"புலிகளின் தாகம்
தமிழீழத் தாயகம்" என்று
செயல் வடிவம் கொடுக்கின்ற
தமிழினத்தின் எழுச்சி வடிவமே...

பிரபாகரனே! நீ
வரலாற்றைப் படித்தவன் மட்டுமல்ல
இன்று
வரலாறு படைப்பவன்
அதனால்
வரலாறாய் வாழ்பவன்.
உனக்கென்று வரலாறு
எதுவுமில்லை
தமிழினத்தின் விடுதலை வரலாறே
உன் வரலாறு தான்.

முப்படைகளும் சேர்ந்து
யாழ்தேவியாய் எதிர்த்தாலும்
உனக்கு
"மக்களே ஆயுதம்
மக்களே கேடயம்" என்றானபோது
சிங்கள இனவெறி அரசால்
உன் காலடிச் சுவட்டைக் கூட
காணமுடியாது.
காலச் சுவட்டில்
உன் பெயர் இனி
மறைக்கப்பட முடியாது.
பூநகரிப் போர்
புலிப்படையின்
கொரில்லாப் போரின்
வரலாற்றுக் கல்.

கூலிப்படைகளுக்கும்
விடுதலைப் படைகளுக்கும்
வேறுபாடுகள் உண்டு
எதிர் பதமாய்.

விதையை புதைத்து
அழிக்க நினைக்கும்
முட்டாள்களே...

புலிகளைக் கொல்லமுடியுமே தவிர
வெல்லமுடியாது.

ஈழத் தமிழ்க் குருதியில்
இலங்கைப் புத்தன்
குளித்த பின்னர்
இங்கென்ன பேச்சு
தமிழீழமே பேச்சு.

கிட்லரின்
உருவங்கள் மட்டுமல்ல
பெயர்களும் மாறுகின்றன.
இலங்கை தீவில்
ஈழமண்ணில்
பண்டார நாயக்கா
செயவர்த்தனே
லலித் அத்துலத் முதலி
பிரேமதாசா
இப்படி... இப்படியாக
மாறி... மாறி
வாழுகின்றனர் இன்றும்.

பிரபாகரனே,
தனக்கென வாழாது
தமிழீழம் மீட்கின்ற
தளபதியே...
களப்பலிகள் தொடர்ந்தாலும்
காண்போம் தமிழீழம்.

பிரபாகரனே நீ
தாடி இல்லாத பெரியார்
தடிக்குப் பதிலாய்
ஏ.கே.47.
பெரியார் இன்றிருந்தால்
ஏ.கே.47. தான் வைத்திருப்பார்
ஏனெனில்,
அவர் பெரியார்.

உன் பிறந்தநாள்
வீரம் பிறந்த நாள்
மானம் பிறந்த நாள்
சூடும், சுரணையும்
தமிழினக் குருதியில் ஏறிய நாள்.

உலகத் தமிழினமே....
தமிழீழ உரிமைத் திருநாட்டை
எதிர்பார்த்திருக்கிறது
வென்றே தீருவீர்...
இன்றோ..? நாளையோ..?
வென்றே தீருவீர்.

வீரத்தின் விளைநிலமாய்
தமிழீழம் இன்று.
புலிமறவர் கைகளில் துவக்கு
உடைபடும்
தமிழினத்தின் அடிமை விலங்கு
தமிழீழமே இலக்கு
பிரபாகரனே,
தமிழின அடிமை காரிருளை நீக்குகின்ற
விடுதலை விளக்கு.

முகவரியில்லாத தமிழினத்தின்
முகவரி
பிரபாகரன்.

***

புதுவை தமிழ்நெஞ்சன்
தமிழ்நாடு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓவியக் கலை

**மனித நாகரிகம் தோன்றுவதற்குப் பன்னெடுங் காலத்தின் முன்பே, மனிதன் குகையில் வாழ்ந்த காலத்திலேயே, தோன்றிவிட்டது.**

ரஜனி



கட்புலனாகும் பொருட்களையும், கருத்திற்படும் எண்ணங்களையும் கவினுறத் தீட்டும் கலையே ஓவியக் கலையாகும். இக்கலை மனித நாகரிகம் தோன்றுவதற்குப் பன்னெடுங் காலத்தின் முன்பே, மனிதன் குகையில் வாழ்ந்த காலத்திலேயே, தோன்றிவிட்டது.

குகைகளில் அவன் வரைந்த ஓவியங்கள் இதற்குச் சான்றாகும்.

சிந்துவெளி நாகரிகக் காலத்தில் இக்கலை சிறந்த நிலையில் வளர்ந்திருந்ததை அங்கு அகழ்ந்தெடுக்கப் பெற்ற பொருட்களில் காணப் பெறும் ஓவியங்கள் காட்டுகின்றன என்பர்.

கண்ணிற் பட்டவற்றை வரை கோடுகளால் தொடக்கத்தில் புலப்படுத்திய மனிதன் காலப்போக்கில் கருத்திற் பட்டவற்றையும் கவினுறத் தீட்டக் கற்றுக்கொண்டான். அவற்றை அழகு படுத்த வண்ணங்களையும் கண்டு பயன்படுத்தினான்.

பழந்தமிழ் நூல்கள் ஓவியம் பற்றிக் கூறுகின்றன. ஓவு, ஓலம், ஓவியம், படம், படாம், சித்திரம், வட்டிகைச் செய்தி எனப் பல பெயர்களால் இக்கலை அழைக்கப் பெற்றது. இதனைத் தீட்டுபவர் ஓவமாக்கள், ஓவியமாக்கள், ஓவியப் புலவர், ஓவியர், கண்ணுள் வினைஞர் எனப்பலவாறு அழைக்கப்பெற்றனர்.

குகைகளில் முதலில் எழுதப் பெற்ற புனையா ஓவியங்கள் பின்னர் வண்ண ஓவியங்களாக மலர்ந்த பொழுது, அரண்மனை மண்டபங்களிலும், வளமனை மாளிகைகளிலும், ஆடல் அரங்குகளிலும், தந்தங்களிலும், கண்ணாடிகளிலும், தாளிலும் வரையப் பெற்றன.

வண்ணம் திட்டும் கோல் துகிலிகை, துரிகை எனவும், வண்ணம் குழைக்கும் பலகை வட்டிகைப் பலகை எனவும் வழங்கப் பெற்றன.

மக்கள் போலவே மன்னரும் இக்கலையைப் போற்றினர். பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் சித்திரக்காரப் புலி எனப் புகழ் பெற்றான். பல்லவர் கால ஓவியங்களுக்கு எடுத்துக்காட்டாகப் பனைமலைக் கோவிலிலும், திருமலைக் கோவிலிலும் மாமண்டூர்க் கோவிலிலும் காஞ்சி கயிலாசநாதர் கோவிலிலும் தீட்டப் பெற்றவற்றைக் கூறுவர். பல்லவர் கால ஓவியங்களில் தெய்வ உருவங்கள் சிறப்பிடம் பெற்றன.

இவர் போலவே பாண்டியரும் ஓவியக் கலையை வளர்த்துப் பெருமைப்பட்டனர். இவர் கால ஓவியங்களில் இயற்கையும், மனிதனும், தெய்வமும் போற்றப்பட்டன.

சேரர் காலத்தில் இக்கலை போற்றப் பெற்றதை திருவள்ளரா திருநந்திக் கரைக் குகைக் கோவில் ஓவியங்கள் காட்டுகின்றன.

சோழர் கால ஓவியங்கள் புராணக் காட்சிகளை மிகுதியாகக் கொண்டிருந்த பொழுதும் ஆடல் மகளிர், அவர்தம் அணிமணிகள், இசைக்கருவிகள் போன்றவற்றையும் சித்தரித்துக் காட்டுகின்றன.

இக்கலை காலமாற்றத்துக்கேற்ப வளர்க்கப் பெற்று வருகின்றது. மேலைநாட்டுத் தொடர்பு ஏற்பட்டுள்ள இக்காலத்தில் ஓவியக் கலையிலும் காலத்தின் கோலத்தைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இக்கலையானது இன்று கல்லூரிகளிலும் தனியார் நிலையங்களிலும் போற்றப் பெறுகின்றது. வரைகோட்டுச் சித்திரங்களும் வண்ண ஓவியங்களும் இன்று சிறப்பிடம் பெறுகின்றன. இயற்கைக் காட்சிகளைக் காட்டும் ஓவியம், இயற்கைப் பொருட்களைச் சித்தரிக்கும் ஓவியம், கருத்து வெளிப்பாட்டு ஓவியம், உயிரோவியம், அணியோவியம் எனப் பலவகை ஓவியங்கள் உண்டு. இவற்றிற்கு நீர் வண்ணமும், நெய்வண்ணமும் பயன்படுத்தப்படுகின்றன.

ஓவியங்கள் மூலம் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் புலப்படுத்தும் ஓவியன் தன் ஆளுமையையும் அவற்றுடன் வெளிப்படுத்தும் பொழுது அவனுடைய தனித்தன்மை மிளிர்கின்றது.

நன்றி:
அறிவுக் களஞ்சியம், தமிழீழம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

## நூல்கள் அறிமுகம்

# யாழ்ப்பாணம் திரும்புதல்

## 'RITORNARE A JAFFNA'

**இத்தாலியில் "பிலிப்போ ஜிகாந்தி" என்ற இத்தாலியரால் 'RITORNARE A JAFFNA' (யாழ்ப்பாணம் திரும்புதல்) என்ற நூல் எழுதப்பட்டுள்ளது.**




350 பக்கங்களில் எழுதப்பட்ட 'RITORNARE A JAFFNA' நூலின் முன் அட்டைப்படம்

இந்நூலை எழுதிய நூலாசிரியர் இந்நூலில், இலங்கையில், தமிழ்த் தேசிய இனம் நடத்திவரும் போராட்டம் சம்பந்தமான உண்மைச் செய்திகள் யாவும் இனவாத அரசினால் திரிபுபடுத்தப்பட்டு, தமிழர்கள் பயங்கரவாதிகள் என்று மிகைப்படுத்தப்பட்ட செய்திகளே வெளிநாடுகளுக்கு கூறப்படுவதைச் சுட்டிக்காட்டியுள்ளார். இத்தகு பொய்ப் பிரச்சாரத்தால் இத்தாலிய மக்கள் உண்மை நிலையைத் தெரிந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பதாலும், அதிகமான இத்தாலிய மக்கள், ஈழத்தமிழ் மக்கள் எல்லோரும் தமது நாட்டின் வறுமையின் காரணமாகவும் தொழிலுக்காகவுமே இங்கு வந்துள்ளார்கள் என்று நினைப்பை நீக்கும் எண்ணத்துடனும் இந்நூலை எழுதியுள்ளார். தமிழ் மக்கள் தமது நாட்டில் நடக்கும் அடக்குமுறைக்கெதிராகவும், இழந்த பூமியை மீட்டெடுக்கவுமே போராடிக்கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மை நிலையை இத்தாலி மக்களுக்கு தெளிவுபடுத்தும் கைங்காரியத்தை இந்நூலில் செய்துள்ளார். இந்நூலாசிரியர், 6 வருடங்களுக்கு முன்பு தன்னிடம் வேலை செய்வதற்கு ஒரு தமிழ் இளைஞர் வந்ததாகவும், அவரின் நல் நடத்தை, ஒழுக்கம், நேர்மை, நட்பு, பாசம் காரணமாக தான் தமிழ் இனத்தை ஆராயமுற்பட்டதாகவும், அவர் மூலம் அங்கு நடக்கும் இனப்படுகொலைகளையும், ஒரு நல்ல இனம் திட்டமிடப்பட்டு அழிக்கப்படுவதையும் அறிந்து கொண்டதாகவும் கூறுகிறார்.

பல இடங்களிலும் வாழும் பலதரப்பட்ட பாதிக்கப்பட்ட தமிழ் மக்களையும் பேட்டிகண்டு அவர்களுக்கு நடந்த துயரநிகழ்வுகளையும் இந்நூலில் எழுதியுள்ளார்.

இந்தியா அமைதிப்படையாக வந்து தமிழ் மக்களைக் கொன்று குவித்ததையும், இவ்வளவு கொடுமைகளுக்கும் காரணமான ராஜிவ் காந்தி கொலைசெய்யப்பட்டதையும் எடுத்துரைத்துள்ளார். ராஜிவின் அமைதிப்படை செய்த அட்டூழியங்களை சுட்டிக்காட்டிய அவர், ஏன் இன்னமும் பிரேமதாசா விட்டுவைக்கப்பட்டுள்ளார் என்ற கேள்வியையும் இந்நூலில் எழுப்பியிருந்தார். சர்வதேச சமூகம், ஐ.நா.சபை, ஐரோப்பிய நாடுகள் ஆகியவை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தமிழரின் தேசிய எழுச்சி நாளான மாவீரர் நாளில் பிலிப்போ ஜிகாந்தி தான் எழுதிய நூலை வெளிட்டுவைத்துப் பேசும் பொழுது.**




மற்றைய நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவதாகவும் ஏன் தமிழர்களின் பிரச்சினைகளில் தலையிடாமல் உள்ளன என்றும் கேட்டுள்ளார்.

தமிழ்மொழியில் கொண்டுள்ள பற்றுதலினால், தமிழ் கொஞ்சம் பேசவும் கற்றுள்ள இந்நூலாசிரியர், தமிழ் மக்களின் அநேக சம்பிரதாயச் சடங்குகளில் கலந்துகொண்டு எமது உணவு, உடை, கலைகள், பண்பாடுகள் பற்றியும் தமிழ் மக்கள் எப்படியானவர்கள், அவர்களின் பாச உணர்வுகள் எப்படி என்பது பற்றியும் எழுதியுள்ளார். இதைத் தனது சொந்த முயற்சியாக மேற்கொண்ட அவர் இந்நூலை எழுத 1 வருட காலத்தையும் செலவழித்துள்ளார். இறுதியாக தமிழ் மக்களது நீதியான, நேர்த்தியான போராட்டம் வெற்றி பெற்று விரைவில் அவர்கள் எல்லோரும் சந்தோசமாக வாழ்வார்கள் என்றும் தெரிவித்துள்ளார். பின் குறிப்பாக தமிழ்மக்களின் பேட்டிகளையும் இணைத்துள்ளார்.

**இந்நூல் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ மொழிபெயர்க்கப்பட்டு அனைவராலும் வாசிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.**

## ‘மனவடு’

### போர்க்காலச் சூழலில் வாழும் மக்களுக்கு பெரிதும் பயன்படும் நூல்.

**நெருக்கடி காலத்தில் மக்களுக்கு ஏற்படும் உளவிளைவுகளையும் அவற்றை எதிர்கொள்ளும் முறைகளையும் திட்டமிட்டு உள மருத்துவத்துறைத் தலைவர் வைத்திய கலாநிதி க. சோமசுந்தரம் அவர்கள் எழுதிய ‘மனவடு’ எனும் நூல் தமிழீழத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்நூல் பொதுமக்களுக்கு பெரிதும் பயன்படும் வகையில் போர்க்கால நெருக்கடிச் சூழ்நிலையின் பாதிப்புக்களை சிறப்பாக ஆய்ந்து விளக்குகிறது.**

## ‘ஈழத்து தமிழ் நாடக அரங்கு’

### ஈழத்து தமிழ் நாடக அரங்கக் கலையினை கூறும் நூல்.

**கிழக்கு பல்கலைக்கழகத்துக் கலை பண்பாட்டு பீடாதிபதி கலாநிதி சி. மௌனகுரு அவர்களின் ‘ஈழத்து தமிழ் நாடக அரங்கு’ எனும் நூல் வெளிவந்திருக்கிறது. இது யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மலைநாடு ஆகிய பிரதேசங்களுக்குரிய நாடக அரங்கக் கலையின் வரலாற்றைக் கூறுவதாக உள்ளது.**

## ‘பூநகரி தொல்பொருள் ஆய்வு’

### ஆதிகாலம் தொட்டு ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரை தொல்பொருள் ஆய்வு

**வரலாற்றுத் துறைச் சிரேஸ்ட விரிவுரையாளர் பரமு. புஸ்பரெட்ணம் அவர்களால் எழுதப்பட்ட ‘பூநகரி தொல்பொருள் ஆய்வு’ எனும் நூல் வெளிவந்துள்ளது.**

**ஆதிகாலம் தொட்டு ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரையுள்ள பூநகரியின் நீண்டகால வரலாற்றை தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில் இந்நூல் விளக்குகிறது. அண்மைக் காலத்தில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்களின் நூற்றுக்கணக்கான புகைப்படங்களுடன் இது விளங்குகிறது.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் மக்களின் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு செய்யப்பட வேண்டிய கூறுகள்

தமிழீழ மக்களின் நாட்டார் வழக்காற்றியலிலே அவர்களுடைய பாடல்களும் கூத்துகளுந்தான் இதுவரை அறிஞர்களுடைய நுண்ணாய்வுக்குட்பட்டு வந்துள்ளன. நாட்டார் வழக்காற்றியல் பல கூறுகளைக் கொண்டன. அவையாவன: பாடல்கள், கூத்துகள், கதைப் பாடல்கள், கதைகள், விடுகதைகள், பழமொழிகள், இசைக்கருவிகள் இசைத்தல், கைவினைக் கலைப் பொருள் ஆகியன.


எம்முடைய நாட்டார் பாடல்கள், கூத்துகள் தொடர்பாக அறுபதுகளிலிருந்து தொடர்ச்சியான ஆய்வுகள் நடைபெற்று வந்துள்ளன. வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம், பேராசிரியர் சு. வித்தியானந்தன், பண்டிதர் வீ. சீ. கந்தையா, பேராசிரியர் கா.சிவத்தம்பி ஆகியோர் தொடக்க காலங்களில் இம்முயற்சியில் ஈடுபட்டோராவர். கொழும்பு வித்தியாலங்கார, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களிலே தமிழ் நாட்டார் வழக்காற்றியல் ஒரு பயில் நெறியாகத் தொடங்கியபொழுது புலமைசான்ற ஆய்வுகளும் நடைபெற வாய்ப்பு ஏற்பட்டது. இ. பாலசுந்தரம், சி. மௌனகுரு, காரை. சுந்தரம்பிள்ளை ஆகியோர் கலாநிதிப்பட்டத்துக்காக ஆய்வேடுகளை எழுதினார்கள். இம்மூவருமே நாட்டார் பாடல்கள், கூத்துக்கள், இசை நாடகங்கள் ஆகியவற்றிலேயே

**எம்முடைய மண்ணுக்குச் சொந்தமான நாட்டார் கதைகள் பற்றியும் நாம் போதுமான கவனஞ்செலுத்தவில்லை. எம்முடைய பாரம்பரிய நாட்டார் கதைகள் பல மேலைத் தேயத்தவருடைய ஆட்சியினாலே மறைந்துபோயிருக்கக்கூடிய வாய்ப்பு உண்டு.**

கவனஞ்செலுத்தினர். இவை தவிர்ந்த ஏனைய நாட்டார் வழக்காற்றியற் கூறுகளிலே இதுவரை யாரும் ஆழமான நோக்கினைச் செலுத்தவில்லை என்றே கூறவேண்டும்.

எம்மிடையேயுள்ள கதைப் பாடல்கள் யாவை? கண்ணகி வழக்குரை, கோவலன் கதை, வேலப் பணிக்கன் ஒப்பாரி, பன்றிப் பள்ளு, குருவிப்பள்ளு என்பன நாம் இதுவரை அறிந்த கதைப் பாடல்களாகும். இவை தவிர வேறு கதைப் பாடல்கள் எம்மிடையே இருந்திருக்க வேண்டும். இவற்றைக் கிராமங்களிலுள்ள முதியோர்களை அணுகி அவர்களுடைய உதவிமூலம் சேகரிக்க வேண்டிய ஒரு பணி எமக்கு உள்ளது. இம்முயற்சியிலே ஈடுபடுகின்ற அதேவேளை, இதுவரை கிடைத்த கதைப்பாடல்களைப் பகுப்பாய்வு செய்து அவற்றின் பொருள், அவை புலப்படுத்தும் சமூக, வரலாற்று, பண்பாட்டுச் செய்திகள் ஆகியனவற்றை அறியும் அதேவேளையில், அவற்றின் தற்காலப் பயன்பாட்டினைப் பற்றியும் எண்ணலாம். சிங்கள மொழியில் வழங்குகின்ற கோவலன் கதையினையும், பத்தினி வழிபாட்டையும் இணைத்து பேராசிரியர் கணநாத் ஒபயசேகர செய்த சமூக, பண்பாட்டு, மானிடவியல் ஆய்வு போன்று தமிழிலே கண்ணகி வழக்குரை, கோவலன் கதை பற்றி விரிவான ஆய்வு செய்யப்படவில்லை. ம. சற்குணம், கண்ணகி வழக்குரை பற்றி விரிவான ஆய்வு செய்துள்ளார். சரளா ராஜகோபாலன் சிலப்பதிகாரத்தையும் கண்ணகி வழக்குரையையும் ஒப்பிட்டு அவற்றின் அமைப்பியல் பற்றி எழுதியுள்ளார் ("சிலம்பும் கண்ணகி வழக்குரையும் ஓர் ஒப்பீடு" புலமை, 1984). சிலப்பதிகாரத்தையும் கண்ணகி வழக்குரையையும் ஒப்பிட்டு அவற்றின் அமைப்பியல் பற்றி நான் ஒரு கட்டுரை எழுதியுள்ளேன் ("சிலப்பதிகாரமும் கோவலன் கதையும்" வற்றாப்பளைக் கண்ணகையம்மன் கோயில் மலர், 1989). ஆனால் இவையெல்லாம் பாரிய அளவிலான ஆய்வு என்று கூறுவதற்கில்லை. சிலப்பதிகாரம், கண்ணகி வழக்குரை, கோவலன் கதை


**தமிழர்களின் தோல்வாத்தியங்கள் சில**



ஒருகட்பறை



மும்முகப் பறை (புஷ்கரம்)




சுத்தமத்தளம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகிய மூன்றினையும் ஒப்புநோக்கி, அவற்றைத் தமிழ்நாட்டுக் கோவலன், கண்ணகி கதை ஆகியவற்றுடனும் ஒப்பிட்டு ஆய்வு செய்ய வேண்டும். ஏனைய கதைப் பாடல்களையும் சமூக, பண்பாட்டு, மானிடவியற் பின்னணியிலே பகுப்பாய்வு செய்ய வேண்டிய தேவையும் உண்டு.

எம்முடைய மண்ணுக்குச் சொந்தமான நாட்டார் கதைகள் பற்றியும் நாம் போதுமான கவனஞ் செலுத்தவில்லை. எம்முடைய பாரம் பரிய நாட்டார் கதைகள் பல மேலைத்தேயத்தவருடைய ஆட்சியி னாலே மறைந்துபோயிருக்கக்கூடிய வாய்ப்பு உண்டு. எனினும் வரலாறு, சமயம், பண்பாட்டுக் கூறுகள், பிறநாட்டவர் தொடர்பான பல் வேறு கதைகள் கிராமங்களிடையே மறைந்திருக்கின்றன. இவற்றையெல் லாம் தேடிப்பிடித்துத் தொகுதிக ளாக வெளிக்கொணர வேண்டியது நாம் முதற்கண் மேற்கொள்ள வேண்டிய முயற்சியாகும். எழுபது களில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பயின்ற முத லாண்டு மாணவர்களை "எங்கள் கிராமத்துக் கதைகள்" என்ற பொருளிலே அறிக்கை தயாரித்துச் சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டது. பல மாணவர்கள் அத்தகைய அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர். இவை தமிழ்த் துறையிலே சேகரித்து வைக்கப்பட்டன. இந்திய இராணுவ நடவடிக்கையின் போது பல்கலைக் கழக கலைப்பீடக் கட்டிடம் அழிபாடுற்றபொழுது இவையும் அழிந்துபோய்விட்டன. எனினும் தொடர்ந்து இத்துறையிலே புதிய முயற்சியை மேற்கொள்ளலாம். இவ்வாறு தொகுக்கப்படும் கதை களைப் பின்னர் பகுப்பாய்வு



செய்து அவற்றின் நாட்டாரியற் பண்புகள், சமூக, வரலாற்றுப் பண்பாட்டுச் செய்திகள் ஆகியன வற்றை அறிந்து கொள்ளமுடியும்.

எம்முடைய விடுகதைகள் அல்லது நொடிகள், பழமொழிகள் ஆகியனபற்றி வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் போதிய கவனஞ் செலுத்தியுள்ளார். அவர் தன்னள விலே முயன்று அவற்றை ஓரளவு தொகுதிகளாகவும் சேர்த்துத் தந் துள்ளார். இந்நாட்டாரியற் கூறுகள் பற்றியும் அறிஞர்கள் தீவிர நாட் டஞ் செலுத்தவில்லை. விடுகதை களும், பழமொழிகளும் ஊர்மக்களு டைய பட்டறிவினையும், எளிமை யான கற்பனையினையும் புலப் படுத்தவல்லன. எடுத்துக்காட்டாக, வேளாண்மை தொடர்பான பழ மொழிகளைக் கீழே தருகின்றேன்.


1. அகல உழுவதைவிட ஆழ உழு.
2. அறிவிலே விளையாதது எருவிலே விளையும்.
3. அறுக்கமாட்டாதவள் இடுப்பிலே ஐம்பத்தெட்டு அரிவாள்.
4. ஆடி அவரை தேடிப் போடு.
5. ஆட்டெரு அவ்வருடம் மாட்டெரு மறுவருடம்.
6. ஆற்று மண்ணுக்கு வேற்றுமண் உரம்.
7. வாழை நடுகில் தாழ நடு.



கிராமிய டோலக்



தப்பு



பஞ்சமுக வாத்தியம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**8. உழுகிற காலத்தில் ஊரைவிட்டுப் போகாதே.**

**9. சீனிக்கிழங்கு திண்ட பண்டியைச் செவியறுத்தாலும் விடாது.**

**10. சூடு மிதிக்கிற மாட்டின் வாயைக் கட்டலாமா?**

இப்பழமொழிகளுடாக வேளாண்மை செய்வோருடைய பட்டறிவு புலப்படுத்தப்படுவதைத் தெளிவாக நாம் காணமுடிகின்றது. இவ்வாறு நாட்டுமக்களுடைய உணவு, உடை, வீடு, உறவு, அறிவுரை ஆகியன தொடர்பாகப் பழமொழிகள் உண்டு. ஒவ்வொரு பழமொழியும் ஒவ்வோர் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இத்தகைய அனுபவங்களை அம்மக்கள் பெறுவதற்குரிய சமூக, பண்பாட்டு, பொருண்மிய, சமயச் சூழல் எவ்வாறிருந்தது என்பதை மீட்டுருவாக்கத்தின் மூலம் கண்டு கொள்ள முயற்சிக்கலாம். தமிழீழ மக்களின் பழமொழிகளை விரிவான ஆய்வுக்குட்படுத்தவேண்டும்.

தமிழ் மக்களுடைய விடுகதைகளைத் தொகுத்துத்தந்துள்ளார், வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம். விடுகதைகளில் பெரும்பாலும் முரண்பாடு அமைந்திருக்கும்; சில வேளைகளில் உருவகம் அமைந்திருக்கும். முரண்பாட்டை விளங்கி அதனை நேராக்கித் தெளிவடைதலும், உருவகத்தை நன்கு விளங்கிக் கொள்ளுதலும் ஆகியன விடுகதைகள் மூலமாக நடைபெறுகின்றன.

**முத்துக்குமரனைப் பிடியுங்கள்**
**முதுகுத்தோலை உரியுங்கள்**
**பச்சை வெண்ணெய்யைப் பூசுங்கள்**
**பாங்கான கிணற்றில் தள்ளுங்கள்**

என்பது ஒரு விடுகதையாகும். 'வெற்றிலை போடுதல்' இவ்விடுகதைக்குரிய மறுமொழியாகும். வெற்றிலையை முத்துக்குமரனாகவும், வெற்றிலையின் முதுகுப்புறக் காம்பை உரித்தல் முதுகுத் தோலை உரித்தலாகவும், சுண்ணாம்பு பூசுதலைப் பச்சை வெண்ணெய்யைப் பூசுவதாகவும், வாய்க்குள்ளே வைத்தலைக் கிணற்றிலே தள்ளுவதாகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த உருவகத்தை உடனடியாக விளங்கி மறுமொழி கூறாவிட்டாலும், சரியான மறுமொழியைக் கேட்டவுடன், அவ்வுருகத்தை நாம் விளங்கிக் கொள்ளும் ஆற்றல் பெற்று மகிழ்ச்சியடைவோம். இவ்வாறு அமையும் விடுகதைகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டு நுண்ணாய்வுக்குட்படுத்தப் படவேண்டும்.

எம்முடைய கிராமிய இசைக் கருவிகளை மீட்கும் பணி இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. உடுக்கு, தாளம், மத்தளம், பறை ஆகியன இத்தகைய கருவிகளாகும். பறை முழக்குதல் பண்டைய கால முதல் எம்மிடையே இருந்து வரும் ஒரு கலை முயற்சியாகும். வருந்தத்தக்க வகையில் இது அமங்கலத்துக்கு மட்டுமான கருவியாக ஆக்கப்பட்டு விட்டது. கரகம், காவடி ஆட்டங்களுக்கு இப்பறைமேளம் அணிசெய் கருவியாக அமைவதை நாம் இன்றும் காணுகின்றோம். பறை நெய்தற் பறையாகவும், குறிஞ்சிப் பறையாகவும் அமைந்திருந்த உண்மையினை நாம் மறந்துவிடக் கூடாது. 'பறைமேளக் கூத்து' எம்முடைய கிராமியக் கலைகளில் ஒன்றாக இருந்துவந்தது. இக்கூத்திலே பறையின் நுணுக்கமான ஒலிகளையும், பறைமுழக்குவோருடைய துரித ஆட்டங்களையும் காண்பவர் வியப்படையாமல் இருக்கமுடியாது. இக்கலையும் மீட்டெடுக்கவேண்டிய தொன்றாயுள்ளது.

கிராமிய வளத்தினை அதாவது எம்முடைய மண்ணின் மூலவளத்தினை மட்டுமே உபயோகித்து எத்தனையோ கலைப்பொருள்களைப் படைக்கும் கலைஞர்கள் வாழ்ந்துவந்துள்ளனர். நாள்தோறும் பயன்பட்டுவந்த பெட்டி, பாய் ஆகியவற்றிலே செறிந்த அவர்களுடைய கைவண்ணம் வேறு பொருட்களுக்கும் பயன்படக்கூடியது. இத்தகைய கிராமியக்கலையும் நுணுகிய ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியதொன்றாகும்.

முடிவாக, நாட்டார் பாடல்களும் நாட்டுக் கூத்தும் மட்டுந்தான் எம்முடைய நாட்டார் வழக்காற்றியற் கூறுகள் அல்ல. வளம்மிக்க எம்முடைய பண்பாட்டுப் பாரம்பரியத்தை விளக்கஞ்செய்யத்தக்க பல கூறுகள் உள. நாட்டார் கதைப் பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள், இசைக்கருவிகள், கைவினைப்பொருட்கள் ஆகிய கூறுகள் அறிஞர்களாலே மீட்டெடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட வேண்டியன. நிகழ்காலப் பயன்பாட்டுக்கு அவை எவ்வெவ் வழிகளிலே உதவவல்லன என்பதையும் நன்கு தெளிவுறுத்தவேண்டும்.

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**



# போர்க்கூத்து

**சிங்கள அரசு எமது விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகத் தொடுக்கும் எந்தவித இராணுவ அரசியல் அழுத்தங்களையும் தகர்த்தெறிந்து வெற்றிகொள்ள அனைத்து மக்களும் அணிதிரளுங்கள் என்ற கருத்தினைக் கொண்ட போர்க்கூத்து ஒன்று யாழ். மாவட்ட கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் தமிழீழமெங்கும் நிகழ்த்தப்பட்டு வருகிறது.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இசையும் ஆக்கச் செயல்முறையும்

பூர்வீகமானதும், உள்ளார்ந்த வலுவுடையதுமான இசையின் ஆக்கச் செயல்முறையானது, உளவியலாளரின் கவனத்தை ஈர்த்து வந்துள்ளது. சமூகச் செயல்முறை, இசையின் ஆக்கச் செயல்முறை என்பவற்றுக்கிடையே தொடர்ச்சியான இடைவினைகள் காணப்படும்.

செவிவழித் தொடர்பு ஊடகமாகும் இசை, சுரஒழுங்கு, சந்தம், உள்ளார்ந்த இசைவு, தொனி, வண்ணம் முதலிய தனிமங்களைக் கொண்டது.

உளச்சலனங்களுக்கும், சுர ஒழுங்கமைப்புக்குமிடையே நேரடியான இணைப்புண்டு. ஒவ்வொரு விதமான சுர அமைப்பும் ஒவ்வொரு விதமான உளச்சலனங்

**இசையும், கருத்துக்களும் மிக வலிமையாக ஒன்றிணையும் இன்றைய காலகட்டத்திலே இவ்வாறான "அடிப்படை" ஆய்வுகள் மீது கவனம் செலுத்துதல் சிறந்த படைப்புக்களை உருவாக்குவதற்குரிய ஒரு "தள அமைப்பு" வேலையாக அமையும்.**

நோக்கலை ஈர்த்து வந்துள்ளன.

மனித வளர்ச்சியைப் பிரிவுகளாகப் பிரிக்கும் மரபு வளர்ச்சியடைந்த காலத்திலே சுரவரிசை

பொருளியல், சமூகவியல் நிலைப்பட்ட முரண்பாடுகளின் மத்தியிலே ஒத்திசைவை ஏற்படுத்துதல் சமூகத்தின் தேவையாக இருந்தது. ஒத்திசைவு, சமூக இயக்கத்தைச் சீர்ப்படுத்தியது.

இசை ஆய்வாளர்கள் பூர்வீக ஒத்திசைவுகளுக்கும், நவீன ஒத்திசைவுகளுக்குமிடையே வேறுபாடுகள் புலப்படுவதைச் சுட்டிக்காட்டியுள்ளனர். சமூகச் செயல்முறை வேறுபாடுகளின் அடிப்படையில் இதனை நோக்குதல் தெளிவு தருவதாக அமையும்.

இசையின் ஆக்கச் செயல் முறையின் மூலக்கூறாக அமைவது "இசைக் கருத்துவம்" (Musical idea) ஆகும். இசைக் கருத்துவம்

களைத் தூண்டும். வாழ்வியல் அனுபவங்களின் சேமிப்புக் களஞ்சியமாக "உள்ளம்" விளங்குகின்றது. அனுபவங்கள் ஒவ்வொன்றினதும் செறிவும், வீச்சும் தனித்துவமானவை. இவற்றை வெளிக் கொண்டு வருவதற்குரிய வலிமையானதும், இதமானதுமான தூண்டியாக, சுர ஒழுங்கமைப்பின் வழியாக உருவாக்கப்படும் ராகங்கள் விளங்குகின்றன.

சுர ஒழுங்கமைப்பானது தற்செயலாகவோ, எழுந்தமானமாகவோ உண்டாக்கப்படவில்லை. மனித வளர்ச்சி பல படிமுறைகளைக் கொண்டது. குழந்தை, கட்டிளமை, இளமை, முதுமை என்ற படிநிலைகளை வகுத்துக் கூறலாம். படிநிலை வளர்ச்சியில் வாழ்க்கை அனுபவங்களும் வேறுபடுகின்றன. சமூகப் பின்புலத்தில் மனிதனது படிநிலை வளர்ச்சியை ஆதாரமாக வைத்தே சுரவரிசைகள் உருவாக்கப்பட்டிருக்கலாம். மனித வளர்ச்சிப் படிநிலைகளும், படிநிலைகளுக்குரிய அறிகை வேறுபாடுகளும் உணர்ச்சி வேறுபாடுகளும் உளவியலாளரின் உற்று

களும் உருவாக்கப்படலாயிற்று. "உள்ளம்" என்பதன் வளர்ச்சியும், மனிதனது ஆக்கத்திறன் வளர்ச்சியும் ஒன்றிணைந்திருந்தன.

சுர ஒழுங்கமைப்பு ஆக்கப்படுவதற்கு முன்னர் "சந்தம்" என்பதன் மீதே அதீத கவனம் செலுத்தப்படலாயிற்று. இசை வரலாற்றை அறிந்தவர்கள் இது ஓர் அகிலப் பண்பாக விளங்குவதைச் சுட்டிக் காட்டியுள்ளனர். மனித உடல் உழைப்பின் வழியாக எழுந்த தசை நார் அசைவுகளுக்கும், சந்த ஒழுங்கமைப்புக்குமிடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. ஒரே செயலை மீண்டும் மீண்டும் செய்தல் உடல் உழைப்பின் ஒரு பிரதான பண்பு. ஒரே ஒலியை மீண்டும் மீண்டும் ஒழுங்கமைத்தல் சந்தத்தின் பண்பு.

"உள்ளார்ந்த இசைவு" என்பது மனித நுண்மதிச் செயற்பாடுகளுடன் இணைந்தது. இசை வளர்ச்சியின் போது பிற்காலத்தில் ஏற்பட்ட ஒரு பண்பாக உள்ளார்ந்த இசைவு கொள்ளப்படுகிறது.

சொல்வடிவாகவோ, குறியீட்டு வடிவமாகவோ தோன்றலாம். இசைக்கருத்துவத்தை சொற்கட்டு, இராகம், தாளம் என்ற அமைப்பினுள் கொண்டு வருதல் படிமலர்ச்சியின் அடுத்த கட்டமாகும்.

இசையின் ஆக்கச் செயல் முறையில் ஈடுபடுவோர் நான்கு பிரிவாக வகுக்கப்படுகின்றனர்.

**அ) எப்பொழுதும் இக்கருத்துவங்களால் தூண்டப்படுபவர்கள்; வாழ்க்கையின் ஒவ்வொரு கணங்களையும் இசையுடன் தொடர்புபடுத்துபவர்கள் இப் பிரிவில் அடக்கப்படுவார்கள். இவர்களின் ஆக்கங்கள் சில சமயங்களில் அவ்வப்போது தோன்றி முழுவடிவம் பெறாது மறைந்து விடுதலும் உண்டு.**

**ஆ) திட்டமிட்டு இசை வடிவங்களை ஆக்குவோர் இரண்டாவது வகையில் இடம்பெறுவர். குறிப்புகளைத் தொடர்புபட எழுதிப் படிப்படியாக அதை வளர்த்து முழுவடிவம் ஆக்கும் திறன் இங்கு காணப்படும். மேலைத்தேய இசையில் பீத்தோ**

தமிழ்த் தேசிய ஆவண அவைகள்

www.tamilarangam.net

வனது ஆக்கங்களை இப்பிரிவில் அடக்கலாம்.

இ) வளர்ந்து வரும் இசை வடிவத்தை முழுமையாக்கும் ஒரு செயல்முறையில் ஈடுபடுவோர் இப்பிரிவில் இடம்பெறுவர். கர்நாடக இசையின் மும்மூர்த்திகள் இதற்கு எடுத்துக்காட்டாக கூறத் தக்கவர்கள்.

ஈ) புதிதாக ஒரு இசைக் கோலத்தை ஆரம்பிக்கும் முன்னோடிகளாக விளங்குவோர் இப்பிரிவில் இடம்பெறுவர். இந்துஸ்தானி இசை, வங்காளத்தின் நாட்டார் இசை என்பவற்றினை ஒன்றிணைத்து "இரவீந்திர சங்கீதம்" உருவாக்கப்பட்டமை இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறாக இசையின் ஆக்கச் செயன்முறையை ஆராயும்பொழுது, குறித்த காலகட்டங்களுக்குரிய சமூக இயல்பையும் இருப்பையும் தொடர்புபடுத்திப் பார்க்காத விடத்து, இசை பற்றிய முழுமையான தரிசனத்தைப் பெறமுடியாது.


பூர்வீகப் பொதுவுடமையில் கூட்டிசையின் ஆக்கம் மேலோங்கியிருந்தது. பாடலும், ஆடலும், தொழில் புரிதலும் ஒன்றிணைந்

## எதிரியால் ஏற்படுத்தப்பட்ட எரிபொருள் தடையை எதிர்த்து

எதிரியால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் தடையை எதிர்கொள்ளும் வழிகளில் ஒன்றாக பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட இரட்டைச் சூட்டடுப்பின் முக்கியத்துவம் மக்களால் உணரப்பட்டு அதிகமானோரின் பாவனைக்கு வந்துள்ளது.

❊❊❊

விறகுத் தட்டுப்பாடு நகர்ப்புறத்தில் வாழும் மக்களுக்கு பெரும் பிரச்சினையாக உள்ளது. இப்பிரச்சினையை எதிர்கொண்டு நிற்கும் மக்களில் சிலரை நீங்கள் படத்தில் காண்கிறீர்கள்.







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருந்தன. உழைப்பின் ஒன்றிணைந்த கூறாக இசை விளங்கியது.

நிலைபேறு கொண்ட பயிர்ச் செய்கை முறையும், கிராமிய வாழ்க்கையும் உடல் உழைப்பினால் பயிர்ப்பெருக்கத்தை ஏற்படுத்திய பொருளாதாரச் செயற்பாடுகளும் வரன்முறையான பல்வேறு இசைவடிவங்கள் வளர்வதற்குத் தூண்டுதல் தந்தன.

தனிமனித முனைப்புக்கள் மேலோங்கத் தொடங்க, தனிமனித எதிர்பார்ப்புக்களும், திருப்திகளும் இசை ஆக்கச் செயல்முறையிலே செல்வாக்குச் செலுத்தின. பூர்வீகப் பொதுவுடமையில் உடல் இயக்கங்களுடன் இணைந்த இசையானது, "உள" ஆற்றல்களின் வளர்ச்சியோடு மனத்துக்கினிய பொருளாக மாற்றப்பட்டது.

சமூக வளர்ச்சியோடு இசைக் கல்வி நிறுவனமயப்பட்டு வளரலாயிற்று. இசையை ஆக்குபவர், வியாக்கியானம் செய்பவர், கேட்பவர் என்ற காரணிகளாவோர் விருத்தியடைந்தனர். இசையானது ஆக்குபவருடன் தொடங்கி வியாக்கியானம் செய்பவர்களாற் பரப்பப்பட்டு கேட்போரைச் சென்றடையும் விரிவுபெற்றது.

இசையை ஆக்குபவர் ஒரு காலப் பெட்டகமாகக் கருதப்படுபவர். காலத்தின் ஆளுமையும் தனிமனித ஆளுமையும் ஒன்றிணைந்து இசையாக்கம் நிகழ்கிறது. இவற்றின் அடிப்படையாகவே இசைத் தனித்துவம் எழுகின்றது. இசையாசிரியனுக்கு ஏற்படுகின்ற வயது, அனுபவ முதிர்ச்சிகளும் இசை ஆக்கத்திலே செல்வாக்குச் செலுத்துகின்றன. உதாரணமாக, பீத்தோவனுடைய முதலாம் சிம்போனி, ஒன்பாதாம் சிம்போனி முதலியவற்றை ஒப்பிட்டு ஆராய்பவர்கள் முதிர்ச்சி நிலைமைகளைத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இசைமரபுகள், அவரது ஆரம்பகால இசையாக்கங்களிலே ஆழ்ந்த செல்வாக்குச் செலுத்தியது. அவரது பிற்காலத்தைய ஆக்கங்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இசைமரபுகளில் இருந்து விடுபடும் செல்நிலைகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறன.

இசைவடிவங்களை ஆக்குவோருக்கும், பெறுவோருக்குமிடையே நடுநின்று தொடுப்பவராக, வியாக்கியானம் செய்வோர் விளங்குகின்றனர். இந்நிலையில் எழுத்தாக்கங்களுக்கும் இசையாக்கங்களுக்குமிடையே அடிப்படை வேறுபாடுகள் காணப்படுகின்றன. எழுத்தாளனை அவனது எழுத்துக்கள் வாயிலாக வாசகன் நேரடியாகவே சந்திக்கின்றான். ஆனால் இசையைப் பொறுத்தவரை, இசை ஆசிரியரது ஆக்கங்களை வியாக்கியானம் செய்பவர் (பாடுபவர்) ஊடாகவே தரிசிக்கவேண்டியுள்ளது. செவிவழித் தொடர்பியலில் இது ஒரு பிரதான பண்பாகக் கொள்ளப்படுகின்றது.

இதன் பொருட்டுத்தான் வியாக்கியானம் செய்பவர், ஆழ்ந்த இசைஞானம் கொண்டவராக இருத்தல் வேண்டும் என வற்புறுத்தப்படுகின்றது. இசையை ஆக்கியவரது ஆக்கத்திறன் சுர அமைப்புக்களினால் வெளிப்படுத்தப்படுகின்றது. இசை ஆக்கியோனது செய்தியை வெளிப்படுத்துநராகவே வியாக்கியானம் செய்பவர் விளங்குகின்றார்.

இசை உருப்படிகள் உயிரோட்டமுள்ளவை. பாடுவோரின் இயல்புக்கும், ஆளுமைக்கும் ஏற்றவாறு அவற்றிற்குரிய வியாக்கியானம் வேறுபடும். வியாக்கியானம் மூல ஆக்கத்தைத் திரிபுபடுத்துவதாக இருத்தலாகாது; ஏமாற்றுவதாகவும் இருத்தலாகாது.

சில சமயங்களில் "வியாக்கியானம் செய்தல்" என்பது விமர்சிக்கப்படுகின்றது. இசையில் வியாக்கியானம் செய்தல் தேவையற்றது எனக் கருத்தும் உண்டு. குறித்துரைக்கப்பட்ட சுரவரிசைகளைக் 'கராராகப்' பின்பற்றிப் பாடவேண்டியதுதான். அதனை மீறிச் செல்லக்கூடாது என்ற அபிப்பிராயங்களும் உள்ளன. உலக இசை வரலாற்றை ஆராய்பவர்கள் இக்கருத்தை மறுதலித்து இருக்கின்றனர். ஓர் இசையாக்கத்தை வெவ்வேறு பாடகர்கள் தமது ஆளுமையினூடாகப் பாடும் போது வேறு வேறுபட்ட இசை உணர்ச்சிகளும் அழகும் தோன்றுதல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இசையின் ஆக்கச் செயல் முறையை ஆராய்வோர், ஓவியத்துக்கும், இசைக்கும் பொதுவான பல எண்ணக் கருக்களை முன் வைக்கின்றனர். வண்ணம், செம்பரவல் (Texture) புலன் ஆழம், சமநிலை, உள்ளார்ந்த இயைபு முதலியவை இவற்றுக்குச் சில எடுத்துக் காட்டுகளாகும்.

இசையும், கருத்துக்களும் மிக வலிமையாக ஒன்றிணையும் இன்றைய காலகட்டத்திலே இவ்வாறான "அடிப்படை" ஆய்வுகள் மீது கவனம் செலுத்துதல் சிறந்த படைப்புக்களை உருவாக்குவதற்குரிய ஒரு "தள அமைப்பு" வேலையாக அமையும்.

**நன்றி: வெளிச்சம்**

## எம்.ஜி.ஆரை நினைவு கூர்ந்து இசை நிகழ்ச்சிகளும் அஞ்சலிகளும்

மக்கள் திலகம் அமரர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் தாவடி திறந்த வெளியரங்கு பிள்ளையார் கோவிலடியில் நடைபெற்றுள்ளது. 'எம்.ஜி.ஆர். எமக்கு ஓர் கலங்கரை விளக்கம்' எனும் தலைப்பில் கவியரங்கமும் 'எம்.ஜி.ஆரின் நிலைத்த புகழுக்கு பெரிதும் காரணம் சினிமாவோ, அரசியலோ, கொடையோ' என்ற பட்டிமன்றமும், சிறீதேவி வில்லிசைக் குழுவினரால் 'கலியுக வள்ளல்' எனும் வில்லுப்பாட்டும், ஈழநல்லூர் அருணா இசைக் குழுவினர் வழங்கிய 'எம்.ஜி.ஆர். இரவு' இசையமுதம் நிகழ்ச்சியும் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் அறிஞர்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதைகுழி வார்ப்புகள்

**சிறுகதை**
**சாம்பவி**

எனது அறையில் கதிரைக்குள் புதைந்து ராஜம்கிருஷ்ணனின் "கனவு"க்குள் மூழ்கியிருந்த என் கவனம் மறுபடியும் கலைக்கப் பட்டது. புத்தகத்திலிருந்து விடு பட்ட எனது கண்களுக்கு முதலில் தெரிந்தது, எனது அறைவாச லோடு ஒட்டியிருந்த முன் முற்றத்தில், சற்றே எட்டிப் பார்ப் பது போல மரத்திலிருந்து சரிவாக நீண்ட கிளையில் மலர்ந்திருந்த இரு கடுமையான சிவப்பு நிறம் கொண்ட ரோஜா மலர்கள்தான். அப்போதுதான் பூத்த பொலி வோடு வெகு அழகாக... ஓடிச் சென்று அக்கொப்பையே கைக ளால் அணைத்து, மூக்கின் நுனி பூவிதழின் மென்மையைத் தொட் டுணர, நெஞ்சம் நிரம்ப் நுகர வேண்டும் என என்னுள் எழுந்த ஆசையைக் கடினப்பட்டு அடக் கினேன். வழமைபோல உணர் வுகள் இலேசாக முண்டுபிடித்தன.

"ஓடு... ஓடு... பின்னால... பிடி... பிடி..."

மீண்டும் பலபேர் சேர்ந்து கீச்சிட்டதுபோல் கத்திய பிஞ்சுக் குரல்கள் என் நினைவுகளை ஊட றுத்தன. அந்த மாலை நேரத்து அமைதியை அவை குலைக்க முயற்சித்தாலும் கோபத்துக்குப் பதிலாக வழமைபோல ஏக்கம் தான் சூழ்ந்துகொண்டது.

அப்போது எனக்குப் பத்து வயதிருக்கும். என்னைவிட இரண்டு வயது பெரியவனான என் அண்ணா பின்னேரமானதும் கிரிக்கெட் மட்டையோடு பக்கத்து வீட்டுக்குச் சென்றுவிடுவான். எனக்கும் கிரிக்கெட் விளையாட ஆசைதான். அண்ணாவைப் போல் 'போலிங்' செய்யவேண்டும், சத்தம் போட்டுக் கைகொட்டித் துள்ளிக்குதிக்க வேண்டும் போல ஆவலாக இருக்கும். ஆனால் பக்கத்துவீட்டுக்கு ஒரு பெண் பிள்ளைகளும் விளையாட வருவ தில்லை. 'யாரும் வராவிட்டால் என்ன? நான் விளையாடுவன் தானே!' என்று ஒருநாள் அண்ண னின் பின் சென்ற என்னை அவன், படலையிலே மறித்து,

"விளையாட்டுக் கிளையாட் டெண்டு பக்கத்து வீட்ட வந் தாயோ, ஆக்களெண்டும் பாரா மல் உதைச்சுத்தான் அனுப்புவன்."

என்று அடிக்குரலில் மிரட்டி யதும் அல்லாமல், அம்மாவையும் அழைத்து,

"அம்மா... இவளைக் கூப் பிட்டு உங்கை வெங்காயம் உரிக் கச் சொல்லுங்கோ. விளையாடப் போறாவாம் விளையாட" என் றான்.

முகம் கறுத்து கண்ணீர் முட்டிய என் விழிகளையும், மூக்கு விடைத்து அடிஉதடு கடித்து அழுகையை அடக்க நான் எடுத்த முயற்சிகளையும் அவதானிக்காது அல்லது அவதானிக்க விரும்பாது, அதீத அலட்சியத்துடன் பட லையை அறைந்து சாத்தியபடி வெளியேறினான் அண்ணா. ஆத ரவு தேடும் முயற்சியாக அம்மா வின் முகத்தைக் கண்ணீர் முட் டிய விழிகளோடு பார்த்தேன். அம்மா அண்ணாவைக் கூப்பிட்டு இரண்டு அடி கொடுக்கவேண்டும், அல்லது "அண்ணா சொன்னால் என்ன? அவனுக்கு என்ன தெரி யும்? நீ இங்கால் வீட்டை போய் விளையாடம்மா." என்றாவது சொல்லவேண்டும் என்று என் மனம் ஏங்கியது. ஆனால், வழக்கம் போல மென்மையான, இதமான தொனியில் அம்மா எனக்கு எதையோ விளங்கப்படுத்த முயன் றாள்.

"பொம்பிளைப் பிள்ளையள் கண்டபடி பக்கத்து வீட்டுக்கு விளையாடக் கொள்ளப் போகக் கூடாதம்மா. பிறகு நாலுபேர் நாலுவிதமா, அடக்கமில்லாத பிள் ளையெண்டு சொன்னால் நல்லா யிருக்காதெல்லோ... நீ நல்ல பிள்ளை மாதிரி இந்த கல்லைச் சுண்டி விளையாடு. அல்லது வந்து இந்தக் வெங்காயத்தையாவது உரி." என்று கூறிய அம்மாவை கரு கருவென்று ஏறிய கோபமும் கண்ணீரும் மின்னும் கண்களால் உறுத்துப் பார்த்துவிட்டு, எனது கண்ணீரை யாருக்கும் தெரியப் படுத்த விருப்பமில்லாமல் ஓடிச் சென்று அறையைத் தாழிட்டு, மெத்தையில் விழுந்து விம்மத் தொடங்கினேன். அம்மா என் னைப் புரிந்துகொள்ள முடியாமல் புதிரோடு, பரிதாபமாக நின்று கொண்டிருந்தாள்.

விளையாட்டு விடயத்தில் அன்று ஏற்பட்ட தாக்கம், பெண் என்பதால் எனக்கு மறுக்கப்பட்ட உரிமை, அந்த மனப்புண் வடு வாகி ஆழ்மனதில் பதிந்து, இன் றும் எங்காவது சிறுவர்கள் விளை யாடுவதைக் கண்டால் நின்று பார்க்கவேண்டும் போல, அவர் களுடன் சேர்ந்து சிறுபிள்ளை போல் ஓடவேண்டும் போல, பய மின்றிப் பலமாகச் சிரித்து உரத்த குரலில் கத்திக் குதிக்க, கும்மாள மிடவேண்டும் போல் தோன்று வதையும், அதைத் தொடர்ந்து என் இயலாத்தனத்தால் என்னை வேலைகளில் ஈடுபடவிடாது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சூழ்ந்துகொள்ளும் ஏக்க உணர்வினையும் உதறத்தான் முடியவில்லை.

இப்போதும், சூழ்ந்துகொண்ட ஏக்கத்தை விலக்கப் பெருமூச்சோடு எழுந்து, கையிலிருந்த புத்தகத்தை மேசைமேல் கவிழ்த்துவிட்டு, அறைவாசற் படியில் முற்றத்தைப் பார்த்து அமர்ந்துகொண்டேன். முகத்தில் வந்து மோதிய காற்று கேசத்தை அலையவைத்து இதமாக இருந்தது. நெற்றியில் விழுந்த கேசச்சுருளை ஒதுக்கியபடி, சிந்தனையை அலையவிடத் தயாரானபோது, வீட்டினுள்ளிருந்த அம்மா "பிள்ளை" என்று அழைப்பது கேட்டது. அம்மாவுக்குத் தெரியும் நான் எங்கேயிருப்பேன் என்று. எனவே பதில் குரல் அவசியமில்லை என்பது போல் அம்மாவுக்காகக் காத்திருந்தேன். தேநீர்க் குவளையோடு வந்த அம்மா, என் கையில் அதைத் தந்துவிட்டு,

"ஏன் பிள்ளை அறைக்குள்ளை ஒதுங்கியிருக்கிறாய்? முன்னுக்குப் பெரியப்பா வந்திருக்கிறார். வந்து கதையன். ஒரு சிரிப்பில்லை, சந்தடியில்லை, ஏன் பிள்ளை ஒதுங்கிப்போறாய்?"

கேட்டபடியே அம்மா உள்ளுக்குள் செல்கிறாள். அவளுக்கே தெரியும் இவை பதில் அற்ற கேள்விகள் என்று.

எனக்கு அம்மாவைப் பார்க்க சிரிப்பாக இருந்தது. அன்று... நான் பெரியவளாகி ஐந்து நாட்களாயிருக்கும். ஒரு இடமும் வெளியில் விடாமல் வீட்டினுள் அடைத்து வைத்திருந்தார்கள். வீட்டினுள்ளும் சுதந்திரமாகத் திரியவிடாது, ஒரு அறைக்குள்ளேயே இருக்கவேண்டும் என்றும் கட்டாயப் படுத்தினார்கள். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இதே பெரியப்பா அன்றும் வந்தார். அவரது குரல் கேட்டதுமே உள்ளேயிருந்த நான் துள்ளிக் குதித்துக் குதிரைப் பாய்ச்சலில் ஓடிவந்து, மேசையின் மேல் ஏறி, சப்பாணி கொட்டி அமர்ந்துகொண்டேன். முகத்தில் மகிழ்ச்சி குமிழியிட "பெரியப்பா..." என்று தொடங்கினேன்.


"விஜி..."

அம்மாவின் குரலிலிருந்த கடுமை என்னை உடனடியாகத் திரும்பிப் பார்க்க வைத்தது. அம்மாவின் கோபத்துக்குக் காரணம் எனக்கு விளங்கவில்லை. ஆனால் நான் ஏதோ பிழையைச் செய்துவிட்டது போல எல்லோரும் என்னைப் பார்த்த குற்றப் பார்வையில் நான் எனக்குள் சுருண்டுகொண்டேன்.

"கெதியா உள்ளே போ, மாடு மாதிரி வளர்ந்ததுதான் மிச்சம். ஒண்டும் தெரியாது. இன்னும் ஆட்டமும் பாட்டமும் குதிரைப் பாச்சலும்."

அம்மா எரிச்சல் தொனிக்கப் பேசி, பின் பெரியப்பாவிடம் ஏதோ நான் நடந்துகொண்ட முறை தனக்குத்தான் தண்டனை என்பதுபோல,

"நான் என்ன செய்ய? இன்னும் அவள் சின்னப் பிள்ளைக்கு நிக்கிறாள்." என்றாள். என் முகத்தை முற்றுகையிட்ட மகிழ்ச்சி தொலைந்து போக, குழப்பத்தோடும், அவமானத்தோ




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டும், அழுகையோடும் தளர்ந்து போய் என் அறையினுள் நுழைந்தேன். அதன் பின் என் கால்கள் ஓடவுமில்லை; ஆடவுமில்லை. என் முகம் சிரிப்பை மறந்தது. ஏன், அந்த அறையை விட்டு வெளியே வர நான் முயற்சிக்கவேயில்லை.

அன்று நான் குழம்பியது இப்போதும் நினைவிருக்கிறது. அண்ணா என்னைவிடப் பெரியவன். ஆனால் அவனை மட்டும் ஓடிவிளையாட, இப்போதும் மேசைமேல் உட்கார்ந்து, காலை வீசியபடி கதைக்க அனுமதிக்கிறார்கள். ஏன் என்னைமட்டும் கட்டுப்படுத்துகிறார்கள்? நான் பெரியவளாகிவிட்டேன், அடக்கமாயிருக்கவேண்டும் என்றால், அண்ணா என்னைவிடப் பெரியவனாயிற்றே? அப்படியானால் ஏன் அவனை ஒருவரும் திருத்தவில்லை.

யோசிக்க யோசிக்க அழுகைதான் வந்தது. எனக்கு ஒன்றுமே விளங்கவேயில்லை. ஒன்றுமட்டும்தான் விளங்கியது. அவர்கள் எனக்குப் பாரபட்சம் காட்டுகிறார்கள்.

அம்மம்மா சிலவேளைகளில் குழைத்துத் தரும்போதும், முதல் கவளத்தை அண்ணாவுக்குத்தான் கொடுப்பார். கேட்டால், "அவன் ஆம்பிள்ளைப் பிள்ளையடி" என்பார். இந்த ஆண் பெண் விவகாரம் எனக்கு அப்போது புரிவதில்லை.

"இவை என்னை எங்கேயோ தெரிவில்தான் கண்டு எடுத்திருக்கினம் போல. அண்ணாதான் அவைக்குப் பிறந்தவனாக்கும். அதுதான் பாரபட்சம் காட்டினம்." என்று எண்ணிக்கொள்வேன். ஆனால், இதில் மட்டுமில்லையே. முதன்முதலாகக் காட்சிவானொலி வாங்கி வந்தபோதும், அதனை இயக்கும் முறையெல்லாம் எனக்குத் தெரிந்திருந்தாலும், அண்ணாவையும் அப்பாவையும் தவிர, யாரும் அதில் கைவைக்கக் கூடாதென்று சட்டம். ஏனென்றால் நான் இயக்கினால் அது பழுதடைந்துபோய்விடுமாம். இப்படியான நிகழ்வுகள்தான் என்னை மேலும் மேலும் ஒதுங்கச் செய்தன. நான் இவர்களது சொந்தப் பிள்ளை இல்லையோ என்ற ஐயம்தான் வலுவாக அந்தப் பிஞ்சு வயதில் எனக்குள் ஊன்றத் தொடங்கியது. இவ்வுணர்வால் ஏற்பட்ட அந்நியத்தன்மை, தனிமை, உணர்வுகள் ஏற்றுக்கொள்ளப் படாமையினால் ஏற்பட்ட தாழ்வுச்சிக்கல் எல்லாமாகத்தான் என்னை ஓர் கூட்டுக்குள், ஒரு வட்டத்துக்குள் அடக்கி, எனது ஆளுமையை எனக்குள் மாத்திரமே அடக்கப்பண்ணியது.

நினைக்கும்போது நெஞ்சுக்குள் ஏதோ அடைத்துக்கொண்டது. எங்கோ வாசித்தது போல் 'நான் வளர்க்கப்படவில்லை. ஏற்கனவே சமூகத்தால் பெண்ணுக்கென அமைக்கப்பட்டிருக்கும் அச்சில் வார்க்கப்பட்டேன்.' என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. ஒவ்வொரு தடவையும் நான் எனக்குப் பிடிக்காத கட்டுக்குள் வார்க்கப்படுகிறேன் என்பதை உணரும்போதெல்லாம் உண்டாகும் சினத்தை வெளிக்காட்ட வேண்டும்; அவர்களது நியாயமின்மையை உணர்த்தவேண்டும் என்றெல்லாம் தோன்றும். ஆனாலும் இதுவரை என் உணர்வுகள் ஏற்கப்படாமையினால் விளைந்த அவநம்பிக்கையும், இதற்கும் ஏதாவது வக்கிரமமாகக் கூறி என்னைக் காயப்படுத்தி விடுவார்களோ என்ற பயமும், சுருவென்றேறும் கோபத்தை வெளிக்காட்ட முடியாத கையாலாகாத்தனத்தால் முந்திக்கொண்டு கண்ணில் கோர்க்கும் நீரும் என்னை எதுவும் பேசவிடாமல் செய்துவிடும். முடிவு... நான் தனிமைப்பட்டு மேலும் மேலும் ஒதுங்கிப் போனேன்.

இலேசாகத் தலையை உதறிக்கொண்டேன். நினைக்க நினைக்க வேதனைதான் அதிகரித்தது. உள்ளுக்குள் அடக்கப்பட்டு ஆழ்மனத்தில் உயிருடன் அமுக்கப்பட்ட உணர்வுகள், அமுக்கம் தாளாது கொந்தளித்துக் கொண்டிருந்தன. இலேசாகக் தலை பாரமாக இருப்பதுபோல் உணர்ந்தேன். தாங்கமுடியாத ஏக்கமும், எதையாவது தூக்கி வீசமாட்டோமா என்ற கோபமும் சூழ்ந்தன. யாராவது என் அருகில் வந்து இருந்து, என் கைகளைப்பற்றி, "என்னம்மா?" என்று கேட்கமாட்டார்களா, 'உனது உணர்வுகள் எனக்கும் புரிகிறது' என்று ஒத்துணர மாட்டார்களா என்றிருந்தது.

நான் ஒவ்வொரு தடவையும் அழும்போதெல்லாம் அம்மாவால் என்னைப் புதிராகத்தான் பார்க்க முடிந்தது. யாராலும் 'உன் உணர்வுகளை நான் ஏற்றுக்கொள்கிறேன். அவை நியாயமானவைதான்' என்று கூறமுடிந்ததில்லை.

"நானும் உன்னைப்போலத்தானே வளர்ந்தேன். ஏன் நீ மட்டும் புதிதாகத் துடிக்கின்றாய்?"

என்றுதான் அம்மாவால் கேட்க முடிந்தது. அப்போதெல்லாம்,

'நீங்கள் சிறைக்குள் இருப்பதால் நானும் சிறைக்குள் இருக்க வேண்டுமா? நீங்கள் புதைகுழியைச் சொர்க்கம் என்று நினைத்தால், நானும் அவ்வாறே நினைக்க எனக்கென்ன பைத்தியமா? "நான் சிறைக்குள்ளேதானே இருந்தேன். நீயும் சிறைக்குள்ளே இரேன்." என்கிறீர்களே. இது என்ன நியாயம்?'

என்று அம்மாவை உலுப்ப வேண்டும்போல் தோன்றும். ஆனால் அம்மாவின் அப்பாவித்தனமான முகத்தையும், பரிவு தோய்ந்த கண்களையும் பார்க்கும்போது பாவம் அவள்தான் என்ன செய்வாள்? அடிமைத்தனத்தையே நியாயமாக்கி 'இதுதான் உனக்கு விதிக்கப்பட்டது' என்று இந்தச் சமுதாயம் அவளின் சிந்தனையைக்கூட மழுங்கடித்துவிட்டது. சிறையையே சுவர்க்கம் என்று எண்ணும் பெரிய வலையை அவள்மேல் போட்டுவிட்டது என்று தோன்றும்போது, யார் மேல் கோபத்தைக் காட்டுவது என்று புரியாமல், அழமட்டுமே முடிந்தது. எனக்குள்ளேயே நான் புதைந்துகொண்டேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்னையறியாமலேயே வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தபோது, கருஞ் சிவப்பான ரோஜாப்பூக்கள் என்னைப் பார்த்து சிரித்துக் கொண்டன. மனத்தை இலேசாக்க முயன்றவாறு மீண்டும் 'கனவு'க்குள் புதைய எழுந்தபோது, படலை திறக்கும் சத்தம் கேட்டு, எதிர்பார்ப்போடு திரும்பிப் பார்த்தேன். நான் நினைத்தது போலவே, சிரிக்கும் கண்களில் உறுதி மிளிர, துள்ளல் நடையுடன் உலகமே தூசு என்று, ஒட்ட வெட்டிய கூந்தலுடன், இடுப்பில் இறுக்கிய பெல்ட்டின் கீழ் நீண்டிருந்த ஜீன்சுமாக 'அவர்கள் வந்துகொண்டிருந்தார்கள்' வீட்டின் பக்கவாசலில் என்னைக் கண்டதும் மென்மையாய் அரவணைப்பாய் புன்னகைத்தார்கள். அவர்களில் ஒருத்தி சிறு துள்ளலோடு ரோஜாச் செடியருகே ஓடி, இரு கைகளாலும் கொப்பைப்பற்றி மூக்கின் நுனி பூவிதழைத் தொட்டுணர, பெரிதாக முகர்ந்து, ஒரு முறை கண்களை அழுந்த மூடி அதனை அனுபவித்தாள். நான் ஆச்சரியத்தோடு அவளைப் பார்த்தேன். இவர்கள் எங்கள் பக்கத்து வீட்டுக்கு வந்ததிலிருந்து எனக்கு நிறைய ஆச்சரியங்களைக் கொடுத்துவிட்டார்கள். நான் செய்ய நினைத்ததை... எனது ஏக்கங்கள் நிறைந்த ஏமாற்றங்களை... நான் செய்யக்கூடாது, என்னால் செய்யமுடியாது என என் சுற்றத்தால் தடுக்கப்பட்ட செயல்களை அவர்கள் வெகு இயல்பாகச் செய்தார்கள். அவர்களது மகிழ்ச்சியும் துள்ளலும் அலட்டிக்கொள்ளாத, அமுங்கிப் போகாத சுபாவமும் கொஞ்சம் கொஞ்சமாக என்னையும் வெளியில் இழுப்பது உண்மைதான். இல்லையானால், இதுவரைகாலமும் நான் புரட்டிப் பார்க்கவே பயந்த, இறந்துபோயிருக்கும் என நான் நினைத்த எனது ஆழ்மன ஏக்கங்களை, நான் புதைகுழிக்குள் அமுக்கப்பட்ட வரலாற்றை இவ்வளவு இலகுவாகத் திருப்பிப் பார்க்க இயலுமா, என்ன?

நான் அமுக்கம் குறைந்ததால் ஏற்பட்ட இலேசான ஆசுவாசத்தோடு அவர்களைப் பார்த்தேன். பூவை முகர்ந்தவள் என்னருகில் வந்து, எனது கைகளைப்பற்றி,

"என்னக்கா?"

என்றாள்.

எனது மனம் சிலிர்த்துக் கொண்டது.

**நன்றி: சுதந்திரப் பறவைகள்**

## சுவையான உணவுத் தானியம்

# கம்பு



பல்வேறு பொருட்சேதம், உயிர்ச்சேதம் என்பவற்றுக்கு மத்தியில் 1990ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் தமிழ் நாட்டில் இருந்து எடுத்துவரப்பட்டது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினது தேடுதலில் முதன் முதலில் அடையாளம் காணப்பட்ட தானியமே இக் கம்புத் தானியம்.

இது வரண்ட வலய பிரதேசத்துக்கு உகந்ததாகும். குறைந்த நிலப்பரப்பு, குறைந்த முயற்சி, குறைந்த செலவு என்பவற்றுக்கூடாக கூடிய உற்பத்தியைத் தரவல்லது.

யாழ். மாவட்டத்திலும், வன்னி மாவட்டத்திலும் விரிவாக்கும் நோக்கோடு முன்னணிக் கமக்காரர்களுக்கு இத் தானிய விதை வழங்கப்பட்டது.

80, 90 நாட்களில் முதிர்ச்சி அடையக்கூடிய இத் தானியம் பெரும் போகத்திலும், மழைக்குப் பின் கார்த்திகை மாதத்திலும் சிறுபோகத்தில் பங்குனி, சித்திரை மாதங்களிலும் நடலாம்.

கம்புத் தானியத்தின் போசாக்குத் தன்மையானது குரக்கனை விடச் சிறந்தது. இத்தானியத்திலிருந்து கோதுமை மாவிலிருந்து தயாரிக்கக்கூடிய உணவு வகைகளைத் தயாரிக்கமுடியும்.

இத்தானியம் போர்க்கால நெருக்கடியில் வாழும் எமது மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரித்தானியா



ஜேர்மனி




நெதர்லாந்து



சுவீடன்

மாவீரர் தினம் 1993 உலகெங்கும் வாழும் தமிழ் மக்களால் எழுச்சிநாளாகக் கொண்டாடப்பட்டது. எமது மண்ணின் விடிவிற்காக மரணித்த மாவீரர்களின் நினைவால் நெகிழ்ந்து கூடி நிற்கும் தேசம் விட்டுப் பிரிந்த எமது மக்களால் பிரித்தானியா, ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ், சுவீடன் இத்தாலி, டென்மார்க், நோர்வே, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் எழுச்சி நாளாகக் கொண்டாடப்பட்ட மாவீரர்நாள் நிகழ்வின் சில காட்சிகளை இங்கே காண்கிறீர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 1993 மாவீரர் நாள் நிகழ்வுகள்




பிரான்ஸ்




இத்தாலி



நோர்வே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கண்டற் காடுகள் அழிப்பும் சூழலில் அதன் பாதிப்பும்

வன்னிப் பிரதேசத்தில் இருந்து குடாநாட்டினுள் விறகு எடுத்து வரமுடியாத நெருக்கடி நிலை தோன்றியமையாலும் மின்சாரத்தடை, வாயு, எரிபொருள் தடை போன்ற சிறீலங்கா அரசின் பொருளாதார முற்றுகையினாலும் ஏனைய பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்து குடாநாட்டினுள் சேரும் மக்கட் தொகையின் பெருக்கத்தாலும் விறகின் தேவை பன்மடங்காக அதிகரித்தமையால் யாழ். குடாநாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் விறகு வெட்டிகள் முன்னெப்போதும் இல்லாதவாறு, ஆதிக்குடிகளான நாகர்கள் வாழ்ந்ததைப் பறைசாற்றும் ஒரு வரலாற்றுச் சின்னமாக் விளங்குகின்ற நாகர் கோயில் பகுதிகளை முற்றுகையிட்டுக் கொண்டிருக்கின்றனர்.



இதனால் ஆர்ப்பரித்தெழும் கடல் அலைகளினால் எம் வளம் மிக்க மண் அரித்தெடுத்துச் செல்லப்படுவதை தடுத்து நிறுத்தும் களப்புக் காடுகள் அழியும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள புகழ்பெற்ற ஆலயத்தை அண்டிய பகுதிகளை வடமராட்சிக் கடனீரேரி ஊடறுத்துச் செல்கிறது. தொண்டமானாறே கடனீரேரியாக மண்டலாய் வரைக்கும் நீளுகின்றது. ஆற்றுநீரும் கடல் நீரும் கலக்கும் இக் கடல் நீரேரியை அண்டிய பகுதியே கண்டற் சூழலாகும். இக் காடுகள் களப்பு எனப்படுகிறது. இங்கு இச் சூழலுக்கே உரித்தான கண்ணா, அவினீசியா மரங்கள் அதிகளவில் காணப்படுவதால் கண்ணா காடுகள் எனவும் கண்டல் மரங்கள் பெரும் எண்ணிக்கையில் காணப்படுவதால் கண்டற் காடுகள் எனவும் அழைப்படுகின்றன.

> உலகநாடுகள் பலவும் இத்தகைய காடுகளின் முக்கியத்துவங்களை அறிந்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருவதுடன் பெறுபேறுகளை நூல்களாக வெளிக்கொணர்ந்தும் இதன் அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கீடுகளையும் செய்துவருகின்றன.

உயிரியல் நோக்கிலும் சூழலியல் நோக்கிலும் மட்டுமன்றி பொருளாதார நோக்கிலும் இக் கண்டல் காடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

கால் பதித்தால் இடுப்பிற்கும் மேலாகப் புதையக்கூடிய சதுப்பு நிலத் தரையில் தொடர்ச்சியாக நீர்தேங்கும் சூழலில் இத் தாவரங்கள் காணப்படுவது இயற்கையை நேசிக்கும் எவருக்கும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

இத்தாவரங்களில் காணப்படும் தாங்கு வேர்களினதும், மிண்டி வேர்களினதும், சுவாசவேர்களினதும் இடைப்பகுதி சிறு கடல் உயிரனங்கள் ஒளிந்து வாழச் சிறப்பான அமைவிடமாகும்.

ஆழ் கடலில் இருந்து வரும் இறால் குடம்பிகள் இத் தாவரச் சூழலில் தமது காளைப் பருவத்தை ஒளித்து வளர்ந்து கழிக்கின்றன.

பறவைகளின் பாதுகாப்பான வாழ்விடமாகவும் இது திகழ்கிறது. வேற்றுநாடுகளில் இருந்து சில குறிப்பிட்ட மாதங்களில் இக்காடுகளை நோக்கி சைபீரியா தாராக்கள் வந்து தங்கும் சரணாலயமாக இது இருந்தது.

உயிரியல் மாணவர்களின் ஆய்வுகூடமாகவும் இது அமைகிறது. இம்மரங்களில் இருந்து தீராந்தி, மீன்பிடிக் கம்புகள், கப்பல் கட்டும் பலகைகள் உறுதியான கைப்பிடிகள் போன்றவை தயாரிக்கப்படுகின்றன.

உலகநாடுகள் பலவும் இத்தகைய காடுகளின் முக்கியத்துவங்களை அறிந்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருவதுடன் பெறுபேறுகளை நூல்களாக வெளிக்கொணர்ந்தும் இதன் அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கீடுகளையும் செய்து வருகின்றன. இந்நூல் அந்நிய மொழியில் அமைந்ததாலும், மக்களுக்கு இதன் பயன்பாடுகள் தெரியப்படுத்தப்படாமையாலும், விறக்குத் தேவைக்காகவும் குடியிருப்புக்களை ஏற்படுத்தவும் இக்காடுகள் வெட்டப்படுகின்றன.

இக்களப்புக் காடுகள் தேவையற்ற பகுதியாகவோ, விலக்கப்பட்ட பகுதியாகவோ அல்லது சிறிதளவில் உதவும் பகுதியாகவோ கொள்ளக் கூடாது. இவை இயற்கை எமக்களித்த மிகவும் வளம்நிறைந்த, விலைமதிக்கமுடியாத பிரதேசமாகும்.

'ஆதாரத்'திலிருந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எமது பிரதேச மக்களின் உள், வெளி இடப்பெயர்வும் அதன் விளைவுகளும்

வளர்ந்துவரும் குடித்தொகைக்கும் வளங்களுக்குமிடையில் சமபலம் தொடராத நிலையில் மக்கள் மீள் குடிப்பரம்பலை ஏற்படுத்துவதையே குடித்தொகை இடப்பெயர்வு எனலாம். அதாவது பொருளாதார, சமூக, கலாச்சார, அரசியல் மற்றும் தனிப்பட்ட பண்புகளுடன் இணைந்த இடப்பெயர்வானது, மனிதனோ அல்லது மக்கள் குழுக்களோ தனித்தோ அன்றில் இணைந்தோ தாம் வாழும் பிரதேசத்திலிருந்து தம்முள் ஏற்படும் இழுவிசை, தள்ளுவிசைக் காரணிகளின் விளைவினால் உந்தப்பட்டு மக்கள் இடப்பெயர்வுகள் ஏற்படுகின்றன. குடித்தொகை இயக்கத்தில் கருவளம், இறப்பு போன்றவற்றை தெளிவாக அறிந்துகொள்வதுபோல இடப்பெயர்வு பற்றி அறிந்து கொள்வது சுலபமானது அல்ல. இத்தகைப் பண்புகள் எமது பிரதேசத்துக்கும் பொருந்தும். ஓர் இறைமை உள்ள நாட்டினுள் தான் விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்திற்குச் செல்வதற்கோ அன்றில் அங்கு வாழ்வதற்கோ ஒருவர் உரிமையுடையவராவர். ஓர் இறைமையுள்ள நாட்டிலிருந்து இன்னுமோர் இறைமையுள்ள நாட்டிற்கு தற்காலிகமாகவோ அன்றில் நிரந்தரமாகவோ இடப்பெயர்வினை மேற்கொள்வதையே சர்வதேச இடப்பெயர்வு என அழைப்பர். இவ்விடப்பெயர்வின் தன்மைகளும் போக்குகளும் அவ்வவ் நாடுகளின் உள்நாட்டுச் சட்டங்களினால் வேறுபட்டமைகின்றன. எவ்வாறெனில் ஒரு நாட்டிலிருந்து இன்னுமோர் நாட்டிற்கு இடப்பெயர்வினை மேற்கொள்ளும்போது அதற்கான அனுமதி அவ்வவ் நாடுகளால் வழங்கப்பட்டு வருகின்றபோதிலும் அண்மைக் காலங்களில் குறிப்பிட்ட சில உள்நாட்டுச் சட்டங்களின் சாதகமான தன்மைகளை வாய்ப்பாக்கிக் கொண்டு சட்ட விரோதமாக உள் இடப்பெயர்வினை மேற்கொண்டு வருகின்ற பண்பு அதிக அளவில் காணப்படுகின்றது.

'திரைகடலோடியும் திரவியம் தேடு' எனத் தமிழில் ஒரு முதுமொழியுண்டு. இந்த வகையில் இன்றைய உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் எமது பிரதேசத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். வரலாற்றுக் காலங்களில் இந்தியாவின் பொருளாதார, சமூக, அரசியல் பண்புகளுடன் இணைந்து மேற்படி பிரதேசம் உட்பட இலங்கையின் பல பகுதிகளில் காலத்துக்குக் காலம் பல்வேறு தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது எனலாம்.

பூர்வீகத் தமிழர் இந்நாட்டின் ஆதிக்குடிகள்; அவர்கள் வடக்கு கிழக்குப் பிரதேசத்தை தமது தாயகமாகக் கொண்டிருக்கின்றனர். மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட தமிழர்களின் தென்னிந்தியாவுக்கும் எமது பூர்வீகப் பிரதேசத்துக்கும் இடையில் காணப்படும் புவியியற் தொடர்புகளும், அரசியல் நிலைகளும், மக்கள் உள் வரவினையும் வெளியேற்றத்தினையும் ஏற்படுத்தியிருக்கின்றன எனக் கொள்ளுதல் தவறாகாது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களிலிருந்து தென்னிந்திய படையெடுப்புகளினாலும், அவர்கள் ஆட்சி அமைத்ததன் விளைவாகவும் ஏற்கனவேயிருந்த பூர்வீகத் தமிழருடன் தென்னிந்தியத் தமிழரும் இணைந்துகொண்டனர் எனக் கூறுவதில் எதுவித ஐயமுமில்லை. வீரர்களாகவும், மற்றும் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபாடு கொள்ளும் முகமாகவும் உள் வரவினை மேற்கொண்டு வடமத்திய, வடமேற்குப் பகுதிகளில் செறிவாகத் தமிழர் வாழ்ந்து வந்தமைக்குப் பல்வேறு வரலாற்றுச் சான்றுகள் காணப்படுகின்றன. இவ்வாறான வரலாற்றுக் கோலங்களின் விளைவாக, சோழர் படையெடுப்பையடுத்து சிங்கள இராசதானி தென்மேற்கு நோக்கி இடம்பெயர, தமிழர் சிதைவடைந்த அனுராதபுரம், பொலநறுவை உட்பட பல பகுதிகளில் இருந்து நோய்ப் பாதுகாப்புக் கருதி வடக்கு, கிழக்குப் பகுதிகளின் கரையோரம் சார்ந்து வாழத் தலைப்பட்டனர். இதன் விளைவினாலேயே பரந்துபட்ட தமிழரின் பாரம்பரிய பிரதேசம் குறுக்கமடைவதற்கு காலாய் இருந்துள்ளது எனலாம். மேலும் தென்னிந்தியாவில் அடிக்கடி நிகழ்ந்துவந்த வரட்சி நிலை, மக்களின் வறுமை நிலை, ஆழம்குறைந்த கடற்பரப்பு, நிலவளம், நீர்வளம் வாய்ப்பாயிருந்தமை, தென்னிந்திய அரசியல் பிணக்குகள் போன்ற பல காரணிகள் இப்பிரதேசம் நோக்கிய உள்வரவினைத் தூண்டியுள்ளன எனலாம். தமிழர் மட்டுமல்லாது முஸ்லீம்களும் வர்த்தக நோக்கம்

கார்த்திகேசு குகபாலன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருதி உள்வரவினைக் காலத்துக்குக் காலம் மேற்கொண்டிருந்ததற்கான சான்றுகளும் உண்டு.

ஐரோப்பியர், குறிப்பாக போர்த்துக்கீசர் வருகையினைத் தொடர்ந்து அவர்கள் தம் அரசியல், பொருளாதார, சமூகக் கொள்கைகளில் காணப்பட்ட அழுத்தங்களின் விளைவாக உள் இடப்பெயர்வுகள் தேவைக்கேற்ற விதத்தில் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் இறுதிப்போரில் ஈடுபட்டிருந்த போது தென்னிந்தியாவிலிருந்து படைவீரர்கள் வரவழைக்கப்பட்டதாக, வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. அத்துடன் போர்த்துக்கீசர் நாட்டின் கரையோரப் பிரதேசத்தினைக் கைப்பற்றியதன் விளைவாக மதம் பரப்புதல், பொருளாதாரத் தேட்டத்தின் பொருட்டும் அவர்களது உள்வரவும் அதிகரித்துக் காணப்பட்டது. இவர்களின் வழிவந்தோர் 20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலப் பகுதிகளில் கொழும்பு மற்றும் அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளுக்குச் சென்றுள்ளதைக் காணலாம். மேலும் போர்த்துக்கீசர் ஆட்சியில் கிறிஸ்தவ மத மாற்றத்தின் விளைவாக, அதனை விரும்பியேற்காத மக்கள் உள்நாடு நோக்கியும், உயர் கல்வி வாய்ப்பினைக் கருத்திற் கொண்டு மதமாற்றத்தை ஏற்றுக்கொண்டவர்கள் கரையோரப் பகுதிகளில் அமைந்த உயர்கல்வி நிறுவனங்கள் சார்ந்தும் இடப்பெயர்வினை மேற்கொண்டிருக்கின்றனர். இவை தவிர வர்த்தக நோக்கம் கருதி வங்காளிகள், தமிழக தெலுங்குச் செட்டிகள், தென்னிந்தியப் பரவர், மலையாளிகள், முஸ்லீம்கள் போன்றோர் எமது பிரதேசத்திற்கு, குறிப்பாக யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளுக்கு உள்வரவு மேற்கொள்ளுவதும் தம்மிடம் சேர்வதுமாக இருந்த போதிலும், இவர்களில் கணிசமானவர்கள் இப்பிரதேசங்களில் தங்கிவிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும், வன்னி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட விவசாய உற்பத்தியின் பொருட்டு யாழ்ப்பாண குடாநாட்டிலிருந்து பருவகால இடப்பெயர்வு மேற்



# இருப்பிழந்துபோன ஒருவனின் இருப்பு

என் வீட்டு முற்றத்தில்
ஏழெட்டுத் தென்னைமரம்
வானை உரசுவதால்
வளையாமல்
நீளநிற்கும்
இரவுவர நிலவு வரும்
என்வாசல் தேடி
தென்னை மரங்களிடை
நிலவு விளையாடும்
என்னுடைய காற்று
பூவாசம் வீசும்
தோள்தொட்டு முகம் வருடி
என்னோடு பேசும்
என் நிலத்தை எதிரிபடை
சூழ்ந்திட ஓர் நாளில்
எல்லாமே தொலைந்திற்று
மிஞ்சியதோ சோகம்
கொக்கு பூத்த
என் வயல் வெளியும்
குருவி பூத்த
என் மரக்கிளையும்
சாம்பல் பூத்த மேடாகி
சாந்து
மண்ணாய் போயிற்று

இவ்விரவில் இந்நேரம்
என் தென்னை மரங்கள்
இருக்கின்றனவோ
எறிகணையால் முறிந்து
எரிந்து போயினவோ...
நிலவு வந்து பார்த்து
நின்றழுகின்றதுவோ
என் காற்று என்னைத்தேடி
அலைந்து திரிகின்றதுவோ...

இதயத்தைத் தொலையவிட்டு
இருப்பிழந்து வந்தேன்
இடம் பெயர்ந்த இம்மண்ணில்
எரிகின்ற நிலவும்
ஏளனமாய்
எனைத் தட்டிப்போகின்ற
காற்றும்
நிச்சயமாய் சொல்லுகிறேன்
என்னுடையதல்ல

விவேக்

தமிழ்த்தேசிய ஆவணச் சுவடிகள்

கொள்ளப்பட்டிருக்கின்றது.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து ஆயிரக் கணக்கான அடிமைகள் கொண்டு வரப்பட்டனர் எனவும், விலைக்கு விற்கப்பட்டனர் எனவும் தெரிய வருகின்றது. அதாவது, தென்னிந் தியாவில் நிலவிய பஞ்சத்தின் விளைவாக ஒரு பிடி அரிசிக்கு ஒரு அடிமையை வாங்கக்கூடியதாக இருந்தது. இவர்களைக் கொண்டு வந்து இங்கு இலாபமாக விற்றனர் எனவும், இவர்கள் பெரும்பாலும் விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டனர் எனவும் அறியமுடிகின்றது. மேலும் இவர்க ளது ஆட்சிக்காலத்தில் விவசாய உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, வன்னிப் பிரதேசத்திற்கு மக்கள் இடப்பெயர்வினைத் தூண்டி னர். குறிப்பாக பருத்தி உற்பத்தி களை மேற்கொள்ளவும், நெசவுத் தொழிலில் ஈடுபடவும் தென்னிந் தியாவிலிருந்து மக்களைக் கொண்டு வந்து, மன்னாரிலும், யாழ்ப்பாணக் கோட்டையை அடுத்த பகுதியிலும் குடியமர்த்தியுள்ளனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அவர்கள் தம் பொருளாதார, நிர் வாகக் கொள்கைகள் முன்னையவர் களிலும் பார்க்க வேறுபட்டிருந்தன. இதன் விளைவாக இப்பிரதேசங் களில் வாழ்ந்த மக்களில் கணிசமா னோர் தொழில்வாய்ப்பு, சிறந்த வாழ்க்கைத்தரம், கல்வி விருத்தி போன்ற பல்வேறு நோக்கங்களைக் கருதி பிரித்தானியரால் பொருளா தாரத் தேட்டத்தினைப் பெற்றுக் கொள்கின்ற தென்மேற்கு, மலை யகப் பகுதியை நாடி தற்காலிக மாகவும், நிரந்தரமாகவும் இடப் பெயர்வினை மேற்கொண்டிருந்தனர். இதே போலவே சர்வதேச இடப் பெயர்வும் கணிசமான அளவு இடம்பெற்றிருந்தது. மேற்குறித்த இடப்பெயர்வினை மூன்று பிரிவு களாகப் பிரித்தல் சிறப்புடையது.


1. **வடக்கு, கிழக்கு மாகாணங் களுக்கிடையிலேயும், ஏனைய மாவட்டங்களுக்கிடையிலேயு மான இடப்பெயர்வு.**
2. **வர்த்தக நோக்கம் கருதிய இடப்பெயர்வு.**
3. **சர்வதேச இடப்பெயர்வு என்பனவே அவையாகும்.**

www.tamilarangam.net

வடக்கு கிழக்கு மாகாணங் களுக்கிடையேயும் ஏனைய மாவட்டங்களுக்கிடையேயுமான இடப்பெயர்வினைப் பொறுத்தவரை ஆங்கிலேயரின் நிர்வாகக் கொள்கை கிராமிய மட்டத்திற்குச் சென்றடைந் தமை, போக்குவரத்தின் விருத்தி, பிரித்தாளும் தந்திரம், தமிழர்கள் கல்வியில் குறிப்பாக ஆங்கிலக் கல்வியில் கொண்டிருந்த ஈடுபாடு போன்ற காரணிகள் ஊக்குவித்துள் ளன எனலாம். அத்துடன் ஆங்கி லேய நிர்வாகத்தினர் தமிழரின் திறமை, நேர்மை, முயற்சி என்பவற் றில் பெருமதிப்பு வைத்திருந்த மையும் இப்பிரதேச மக்களின் இடப்பெயர்வுக்குக் காரணமாக இருந்துள்ளன.

1871ம் ஆண்டு குடிக்கணிப்பு மேற்கொள்ளப்பட்ட காலத்திலிருந்து தேறிய இடப்பெயர்வினைக் கருத்திற் கொள்ளும்போது, 1931-1946ஆம் ஆண்டுக்கிடைப்பட்ட காலப்பகுதி தவிர்ந்த ஏனைய காலப்பகுதிகளில், அதிகரித்த குடித்தொகையைக் கொண்ட யாழ்ப்பாண மாவட்டம் பாதக நிலையையே கொண்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. 1881-1891ஆம் ஆண்டு இடைவெளியில் இம் மாவட்டம் 10281 மக்களை இழந் துள்ளது. இத்தகைய இழப்புக்கு கொழும்பு, திருகோணமலை மாவட் டங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட இடப்பெயர்வு ஒருபுறமிருக்க, அறுவ டைக் காலங்களில் தொழில்வாய்ப் புக் கருதி வன்னி மாவட்டங்களுக்கு மேற்கொண்ட இடப்பெயர்வினா லும் மக்களை இழந்துள்ளது. குறிப் பாக அறுவடைக் காலங்களிலேயே குடிக்கணிப்பும் மேற்கொள்ளப்பட்டு வந்தமையால், தற்காலிக இடப் பெயர்வே அதிகமாக இருந்திருக்க வாய்ப்புண்டு. இதேபோலவே 1953ஆம் ஆண்டு வரையும் இதனை அவதானிக்க முடிந்தது. இவை தவிர 20ஆம் நூற்றாண்டின் முதல் காற் பகுதிகளில் யாழ்ப்பாணம், திரு கோணமலை, மட்டக்களப்பு போன்ற நகரங்களிலிருந்து கல்வி அறிவு பெற்றவர்களும் உயர் குழாத் தைச் சேர்ந்தோரும் கொழும்பு, மற்றும் தொழில் வாய்ப்புள்ள இடங்களுக்கு இடப்பெயர்வினை மேற்கொண்டிருந்தனர்.

1950களின் பின்னர் அரசு குடியானவர் குடியேற்றத் திட்டங் களை அறிமுகப்படுத்தியதன் விளை வாக, அதிகரித்த குடித்தொகை காணப்படும் பிரதேசங்களிலிருந்து புதிய குடியேற்றத் திட்டப் பகுதி களுக்கு மக்கள் இடப்பெயர்வினை மேற்கொள்வதில் நாட்டம் கொள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளப்பட்டது. இதன் விளைவாக யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பகுதியிலிருந்து வன்னி மாவட்டங் களுக்கு, விவசாயத்துடன் தொடர்பு டைய மற்றும் விவசாயக் கூலிகளும் இடப்பெயர்வு மேற்கொள்ள, சேவைத் தொழிலின் விருத்தியின் விளைவாக அத்தொழில்களில் ஈடு பாடு கொள்ளவும் மக்கள் இடப் பெயர்வு மேற்கொள்ளப்பட்டு வந் துள்ளது. மேலும் குடியேற்றத்திட்ட அறிமுகத்தின் விளைவாக வடமாகா ணத்தின் எல்லைப் பகுதிகளிலும் கிழக்கு மாகாணத்தின் பெரும் பாலான பகுதிகளிலும் திட்டமிட்ட முறையில் சிங்கள மக்களைக் குடிய மர்த்தியதன் விளைவாக, இனரீதியி லான குடித்தொகைப் பண்புகள் பாதிக்கப்பட்டதுடன், தமிழர் தம் பாரம்பரியக் கோட்பாட்டிற்குச் சவாலாக அமைந்துவிட்டதும் குறிப் பிடத்தக்கது.

மாவட்டரீதியாக உள், வெளி இடப்பெயர்வினைக் கருத்திற் கொள்ளும் போது யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வெளி இடப் பெயர்வு மேற்கொள்ளப்பட்டு வரு கின்ற போதிலும், உள் வரவு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. குடாநாட்டுப் பகுதி குடிநெருக்க மான பகுதியிலிருந்து தொலைவி லிருப்பது, தமிழ்பேசும் மக்களல்லா தவர்களால் வர்த்தகம் மற்றும் சேவைத் தொழிலினை அமைப்ப தற்கு பொருத்தமற்ற பண்புகள் காணப்படுகின்றமை, அதாவது நிரந் தரமற்ற தன்மையினைக் காலத் துக்குக் காலம் உணர முடிந்தமை, குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்தக் கூடியளவிற்கு நிலப்பற்றாக்குறை, தமிழரின் அரசியல் நிலைப்பாட் டினை இறுக்கமாக பேணும் பகுதி யாகக் காணப்படுகின்றமை போன் றன உள்வரவினைக் கட்டுப்படுத் துவனவாக அமைந்துள்ளன.

வன்னி மாவட்டங்களான கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்கள் பெருந் தோட்டத்துறையில் ஈடுபட்டிருந்த இந்தியத் தமிழரிடையே ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூகத் தாக்கங்களின் விளைவாக அவர்க ளது கவர்ச்சிப் பிரதேசமாக மாறி வருகின்றன. அத்துடன் சேவைத் தொழிலில் ஈடுபடும் பொருட்டும் இப்பிரதேசங்களைத் தெரிவுசெய் துள்ளனர். மேலும் திட்டமிட்ட ரீதியில் வடமாகாணத்தின் எல் லைப் பகுதிகளில் பெரும்பான்மை இனத்தவர்களைக் குடியமர்த்தும் பணி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. மணலாற்றுப் பிரதேசம், வவுனியாவின் வடபகுதி, மன்னார் மாவட்டத்தில் கொண்டச்சி, சிலா வத்துறை ஆகிய பிரதேசங்களில் விவசாய விஸ்தரிப்பு என்ற போர் வையிலும் முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களின் கடற்கரையோரப் பகுதிகளில் மீன்பிடித் தொழில் விருத்திக்காகவும் பெரும்பான்மை மக்களினைக் குடியமர்த்தும் பணி, அரசினாலும் அரசு சார்பற்றும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. பொது வாக யாழ்ப்பாண மாவட்டத்தின் தேறிய இடப்பெயர்வு பாதகமாகக் காணப்பட, வன்னி மாவட்டங்கள் சாதகமாக காணப்படுகின்றமைக்கு, அப்பிரதேசங்களில் அண்மைக் காலங்களில் ஏற்பட்டுவரும் விருத்தி நிலையே காரணமாக இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை இன ரீதியிலான பண்புகளில் மாற்றத்தினை ஏற் படுத்தி, தமிழர் பாரம்பரியப் பிரதேசத்தினைச் சிதைவடையச் செய்வதில், அரசும் அரசசார்பற்ற நிறுவனங்களும் ஈடுபாடு கொண் டுள்ளன. குறிப்பாக திருகோண மலை மாவட்டத்தில் துறைமுக விருத்தி, கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்கள், பாரிய, சிறியளவிலான குடியேற்றத் திட்டங்கள், புனிதப் பிரதேசத் திட்டங்கள், படைகளின் பிராந்திய அமைப்புக்கள், பன்முகப் படுத்தல் என்ற போர்வையில் தலை மைச் செயலகங்களை அமைத்தல் போன்றவற்றின் மூலமாகவும்; அம் பாறை மாவட்டத்தில் கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் வாயி லாக திட்டமிட்ட சிங்களக் குடி யேற்றங்கள், பிரதேச இணைப்புகள், காணி சுவீகரிப்பு, புதைபொருள் ஆராய்ச்சி, நிர்வாக எல்லைகளை மாற்றம் செய்தல், புனித பிரதேசப் பிரகடனம், விவசாய நில ஆக்கிர மிப்பு என்ற போர்வையிலும்; மட்டக்களப்பு மாவட்டத்தில் திட்ட மிட்ட குடியேற்றத் திட்டங்களை நிறுவுவதன் வாயிலாகவும் பெரும் பான்மை மக்களைக் குடியேற்று வதால், இன ரீதியிலான பண்புகள் மாற்றமுற்று வருகின்றன. குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் 1921ஆம் ஆண்டு மொத்தக் குடித் தொகையில் சிங்களவர்கள் 4.2 வீதத்தினராகவிருந்து, 1981ஆம் ஆண்டு 33.6 வீதத்தினராக உயர்வ




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டைந்து சென்றுள்ளமை, இத்தகைய உள்வரவு அதிகரித்தமையினால் விளைந்த விளைவேயாகும்.

இவர்கள் தவிர வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து வர்த்தக நோக்கம் கருதி ஆரம்ப, இடைத்தரக் கல்வி கற்றவர்கள் கொழும்பு மற்றும் தென்னிலங்கைப் பகுதிகளுக்கு இடப்பெயர்வினை மேற்கொண்டிருந்தனர். இவர்கள் எண்ணிக்கையில் கணிசமாகவிருந்த போதிலும் இவர்களது ஆரம்ப இடத்திலும், சேரிடத்திலும் குறிப்பிடத்தக்க சமூக, பொருளாதாரத் தாக்கத்தினைக் காண முடிகிறது. அதாவது பொருளாதார ரீதியில் வசதி படைத்திருந்தபடியால் சமூகத்தில் முன்னுரிமை பெற்றிருந்தனர். எனினும் நாட்டில் காலத்துக்குக் காலம் இடம்பெற்ற இனக்கலவரங்களினால் அவ்வவ் பிரதேசங்களில் நிலைத்திருக்க முடியாது போயிற்று.

ஐரோப்பியர் காலத்தில் குறிப்பாக பிரித்தானியர் காலத்திலிருந்து, வடக்கு கிழக்கு பிரதேசங்களிலிருந்து உள்நாட்டு இடப்பெயர்வும், சர்வதேச இடப்பெயர்வும் நிகழ்ந்திருக்கின்றன. பிரித்தானியர் உலகில் பெரும்பாலான பிரதேசங்களைத் தமது குடியேற்ற நாடாக வைத்திருந்தமை, இப்பிரதேசங்களிலிருந்து சர்வதேச இடப்பெயர்வு அதிகரிப்பதற்குரிய காரணிகளில் ஒன்றாகும். இலங்கையின் பெருந்தோட்டத் துறைகளில் நிர்வாக உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றி மலாயாவுக்கு மாற்றலாகிச் சென்ற பிரித்தானிய உயரதிகாரிகள், இங்கு அவர்களின் கீழ் கடமையாற்றிய தமிழர்பால் விசுவாசம் கொண்டவர்களாக இருந்தமையால் மலாயாவுக்கு அழைத்துச் சென்றனர். 1875ஆம் ஆண்டு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வைத்திலிங்கம் என்பவரே முதன் முதலாக சிங்கப்பூர் சென்றவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து இப்பிரதேசத்தவர்கள் தொடர்ச்சியாக மலாயா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளனர். 1911ஆம் ஆண்டு மலாயாவின் குடிக்கணிப்பு அறிக்கையின்படி 6003 தமிழர்கள் அங்கு வாழ்ந்துள்ளதாகக் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவர்களின் சங்கிலித்தொடர் இடப்பெயர்வு அதாவது அண்ணன்-தம்பி, தகப்பன்-மகன், மாமன்-மருமகன், கணவன்-மனைவி என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் அந்நாடுகளில் பெருந்தோட்டத்துறையிலும், அரச நிறுவனங்களிலும் உயர்தர, இடைத்தர பதவிகளை வகித்தனர். 2ஆம் உலக மகாயுத்த காலம்வரை இவ்விடப்பெயர்வாளரில் கணிசமானோர் நாடு திரும்பினர்; ஏனையோர் அங்கேயே தங்கிவிட்டனர். நாடு திரும்பியோர் தம்மைச் சமூகத்தில் உயர்ந்தவர்களாகக் கருதிக்கொண்டது மட்டுமல்லாது, கணிசமானோர் தமது பிள்ளைகளுக்கு ஆங்கிலக் கல்வியுடன் கூடிய உயர் கல்வியினைப் போதித்து மேற்குலக


## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கடல்வளப் பகுதியினரின் கடனடிப்படையில் மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் திட்டம்



இராணுவக் கெடிபிடிகளாலும், முற்றுகைகளாலும் பெரும் பாதிப்புக்குள்ளாகிய கடற்தொழிலாளர்கள் பலர் தமது அன்றாட சீவியத்திற்கு வழியற்று ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்நிலையை கருத்திற்கொண்டு அவர்களின் வாழ்க்கையை முன்னேற்றும் வகையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனக் கடல்வள அபிவிருத்திப் பகுதியினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஒவ்வொரு கடற்தொழிலாளருக்கும் சுமார் 5000 ரூபா பெறுமதியான கடற்தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் பெறுமதியை 20 மாதங்களில் மீளப் பெற்று சுழற்சி முறையில் புதிய பயனாளிகளுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்குவதற்கான ஒழுங்குகளைச் செய்து வருகின்றனர்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நாடுகளுக்கு அனுப்பியுள்ளமையை அறிய முடிகிறது. மலாயாவுக்கான இடப்பெயர்வில் இழுவிசைக் காரணிகளுடன் தள்ளுவிசைக் காரணிகளும் செயற்பட்டிருந்தன எனலாம். குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்பட்ட நிலப் பங்கிடு, சீதன வழக்கு ஆகியவற்றி னூடான தள்ளுவிசையுடன் அதிக ரித்த வருமானம், குடும்ப கௌரவம் போன்ற இழுவிசைக் காரணிகளும் இடப்பெயர்வுக்கு முக்கிய காரணங் களாக அமைந்திருந்தன. மேலும், 2ஆம் உலக மகாயுத்தத்தின் பின்னர் இப்பிரதேசங்களிலிருந்து மேற்படி நாடுகளுக்கு இடப்பெயர்வினை மேற்கொண்டவர்கள் நிரந்தர இடப் பெயர்வாளர்களாகிவிட்டனர். அத்து டன் படிப்படியாக தமது பண்பாட் டுக் கோலங்களில் மாற்றத்தினை ஏற்படுத்தி வருவதை, அண்மைக் காலங்களில் அவதானிக்க முடிகின் றது. 1947ஆம் ஆண்டுக் கணிப்பீட் டின்படி, இலங்கையில் பிறந்து மலாயாவில் வாழ்பவர்கள் 38.0 வீதத்தினராக இருந்துள்ளனர். இவர்கள் தவிர பர்மா நாட்டுக்கும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கணிசமானோர் இடப்பெயர்வினை மேற்கொண்டிருந்தாலும், அந்நாட் டின் கெடுபிடியினால் நாடு திரும்ப வேண்டியேற்பட்டது. மேலும், தென்னிந்தியப் பகுதியிலிருந்து இப்பிரதேசமுட்பட இலங்கைக்கு வரவை மேற்கொண்டிருந்த போதி லும் மேற்படி பிரதேசங்களிலிருந்து தென்னிந்தியா நோக்கிய இடப் பெயர்வு மிகவும் கட்டுப்படுத்தப் பட்டதாகவே இருந்துள்ளது. பிரி த்தானியா உட்பட மேற்கு நாடுக ளுக்கான இடப்பெயர்வினைப் பொறுத்தவரை உயர் கல்வியினைப் பெறுதற் பொருட்டே சென்றாலும், தமது நோக்கம் நிறைவேறவே மீண்டும் உள்வரவினை மேற்கொண் டுள்ளனர். இவர்களில் கணிசமா னோர் சட்டத்துறையிலும், அரசியல் துறையிலும் ஈடுபாடு கொண்டிருந் தனர்.

1940களிலிருந்து மேற்குலக நாடுகளில் கைத்தொழில் விருத்தியும் பொருளாதார வளர்ச்சியும் ஏற் பட்டு மூலதனப்பெருக்கம் அதிகரிக் கவே, அந்நாடுகளில் மூளைசாலி களான மனிதசக்தியின் தேவை அதிகரித்தது. இலங்கையின் சுதந் திரத்தைத் தொடர்ந்து அந்நிய மொழியான ஆங்கிலத்திற்குப் பதி லாக தாய்மொழிக் கல்வி, அம் மொழிகளில் கற்றவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை, பெரும் பான்மை இனத்தவர்களின் மொழி அரசகரும மொழியாதல் போன்ற வற்றின் அமுலாக்கத்தின் விளை வால், தொழில்நுட்ப, மருத்துவ, மற்றும் உயர்தொழிலில் ஈடுபாடு கொண்ட இப்பிரதேசத்தினைச் சார்ந்தோர், வளர்ந்த மற்றும் எண்ணெய் உற்பத்தி நாடுகளுக்கு இடப்பெயர்வினை மேற்கொண்ட னர். காலப்போக்கில் இவர்கள் மேற்கு நாடுகளிலேயே நிரந்தர இடப்பெயர்வாளர்களாகிவிட்டனர். 1950களிலும் 1960களிலும் மேற்குல நாடுகளுக்கு இடப்பெயர்வினை மேற்கொண்டவர்களில் பெரும்பா லானோர், பொருளாதார ரீதியாக வும், தொழில் ரீதியாகவும் வசதி யாக வாழ்பவர்களாகவுள்ளனர் என்பதை நேரடி அவதானிப்பின் போது அறிந்துகொள்ள முடிந்தது. எனினும் அவர்கள்தம் பிள்ளைகள் தாய்மொழியை மறந்தவர்களாக காணப்படுவதிலிருந்து, எதிர்காலத் தில் அவர்களது தாய்மொழிப்பற்று எவ்வாறாக இருக்கும் என்பதை ஊகிக்க முடிகிறது. 1960கள் வரை மூளைசாலிகளின் வெளியேற்றமா னது இப்பிரதேசங்களில் பெரியளவி லான குடித்தொகை மாற்றத்தினை ஏற்படுத்தக்கூடியளவில் இருந்திருக்க வில்லை. பொதுவாக சர்வதேச இடப்பெயர்வுக்கான தரவுகள் தேசிய ரீதியில் கணிக்கப்பட்டுள்ள தால் இப்பிரதேசத்துக்கான சரியான புள்ளிவிபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. எனினும் மருத்துவர்கள், பொறியியலாளர், கணக்காளர், தொழில்நுட்பவிய லாளர், பட்டதாரிகள் போன்றோரே அதிகமாக சர்வதேச இடப்பெயர் வாளர்களாக இருந்துள்ளனர் என்பது வெளிப்படை.

1960களிலிருந்து ஆபிரிக்க நாடு கள் தமது கல்வி வளர்ச்சியினை முன்னெடுத்துச் செல்வதன் பொருட்டு வளர்முக நாடுகளிலி ருந்து ஆசிரியர்கள், கல்வியதிகாரி கள் பலரை வரவழைத்தன. பொது வாக இந்தியர்களே இந்நாடுகளுக்குச் சென்றிருந்த போதிலும் இப்பிரதே சத்திலுள்ளவர்கள், குறிப்பாக பட்டதாரிகளில் சிலர் அந்நாடுக ளுக்கு இடப்பெயர்வினை மேற் கொண்டிருந்தனர். அந்நாடுகளில் உழைத்த பணத்தின் ஒரு பகுதியை பெரிய பிரித்தானிய வங்கிகளில் இட்டுவிட்டு இலண்டனுக்குச் சென் றவர்கள், இவர்களில் கணிசமா னோர்களாகவுள்ளனர் என்பது, நேரடி ஆய்வின் மூலம் கண்டறியப் பட்டது. 1970களின் பின்னர் இடைத்தர, ஆரம்ப அறிவினைப் பெற்றவர்களும் சர்வதேச இடப் பெயர்வில் ஆர்வம் கொள்ளத் தொடங்கினர். நாட்டில் காணப் பட்ட வேலையில்லாப் பிரச்சினை, தமிழர் பிரதேசத்தின் சமூகநிலை, குறிப்பாக சீதனமுறை, இறுக்கமான குடும்ப உறவுமுறை, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உயர்கல்வி பெறு வதற்கான வாய்ப்புகள் மட்டுப் படுத்தப்பட்டிருந்தமை, சர்வதேச போக்குவரத்து முறைமைகள் சுலப மாக்கப்பட்டிருக்கின்றமை போன்ற பல்வேறு காரணிகள், இக்கால சர்வதேச இடப்பெயர்வைத் தூண்டு பவையாக அமைந்திருந்தன. இத்த கைய இடப்பெயர்வுகள் அரபு நாடு கள், ஆபிரிக்க நாடுகள் மற்றும் மேற்கு ஜேர்மனி போன்ற நாடு களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. எனினும் இந்நாடுகளில் படிப்படி யாக ஊதியத்தினைக் குறைத்து வழங்கியமையால் பெரும்பாலா னோர் நாடு திரும்பிவிட்டனர்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

**மாவீரர் நினைவு மண்டபம்**

**சங்கானை பிரதான வீதியில் பிரமாண்டமான முறையில் மாவீரர் நினைவாக மாவீரர் நினைவு மண்ட பம் அமைக்கப்பட்டுள்ளது.**

**சங்கானை வலிமேற்கு வர்த்தகர் சங்கத்தினரால் அமைக்கப்பட்ட இம் மாவீரர் நினைவு மண்டபத்தில் 93 மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபம் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன். தியாகம் அவர்களால் திறந்துவைக் கப்பட்டுள்ளது.**

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடுகள்

www.tamilarangam.net

# தமிழீழம் எதிர்கொள்ளும் சதிப் போர்

தமிழீழ தேசிய சுதந்திரப் போராட்டம், இந்திய, சிறிலங்கா அரசுகளின் 'சதிப்போரை' இன்று எதிர்கொண்டு நிற்கின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தைச் சீர்குலைத்து அழிக்க இந்திய, சிறிலங்கா அரசுகள் எடுத்த முயற்சிகள் உருக்குறுதி வாய்ந்த தேசியத் தலைமையின் உறுதியான முன்னெடுப்புக்களால், போராளிகளினதும் மக்களினதும் சளைக்காத போராட்டத்தினால், நெஞ்சைக் கனக்க வைக்கும் அற்புதமான தியாகங்களினால் முறியடிக்கப்பட்டு வருவது வரலாறு.

அதிகார மிரட்டலுக்கும், நயவஞ்சகப் பேச்சுக்கும் மசியாமல், வளையாமல் நின்று, தமிழர்களின் வீரகாவியத்தைப் படைத்துநிற்கும் தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரனின் வரலாற்றுத் தோற்றம் தமிழின எதிரிகளைக் கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது வெளிப்படையானது. தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை, தமிழர்களின் வீரபராக்கிரமத்தை, திறமையை, இராணுவ, அரசியல், இராஜதந்திர நுட்பத்தை உலகிற்கு வெளிச்சம்போட்டுக் காட்டிய தலைவனை, தமிழின எதிரிகள் விருப்புடன் நோக்குவர் என்பது இயற்கைக்கு முரணானது. தமிழ் மக்களின் போராட்டத்தின் திசையை, அவர்களின் விடுதலை வேட்கை என்னும் ஆவேசக் கொந்தளிப்பை வழிநடத்திச் செல்லுகின்ற தலைவன், எதிரிகள் விரும்பியோ விரும்பாமலோ அவர்களின் அரசியல் உறுதிப் பாட்டையும், அரசியல் தலைவிதியையும் தீர்மானிக்கின்ற ஆளுமையுள்ள, வலுவான சக்தியாக உருவெடுத்திருக்கின்றார் என்பது எதிரிகளாலேயே ஒப்புக்கொள்ளப்படுவது.

அத்தகைய ஒரு தலைமையை மாற்றி மிதவாத, வளைந்துகொடுக்கும் தலைமையை உருவாக்குவதன் மூலம், அல்லது உறுதியான தலைமையை அழிப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழித்து, தமிழ் மக்களின் சுதந்திரத்தை மறுக்க ஆதிக்க சக்திகள் எடுக்காத முயற்சிகள் இல்லை. இந்தத் தொடர் முயற்சியின் தற்கால வெளிப்பாடே, "மாத்தையா" சம்பந்தப்பட்ட சதி நடவடிக்கை. சந்தேகத்தை தோற்றுவிக்காத வகையில் மேல்மட்டத்துடன் நன்கு திட்டமிட்டுப் பின்னப்பட்ட இச்சதி நடவடிக்கை விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறையினரால் உரிய நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டு முறியடிக்கப்பட்டுள்ளது. இந்திய உளவுத்துறையான "RAW" திட்டமிட்ட இச்சதித்திட்டத்தில், "மாத்தையா" உட்பட மூவர் சம்பந்தப்பட்டுள்ளனர். இதற்கு சிறிலங்கா அரசும் உடந்தையாக இருந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சதித்திட்டம் வெற்றிபெறும்போது, அல்லது இயக்கத்திற்குள்ளும் மக்கள் மத்தியிலும் பாரிய குழப்பத்தை தோற்றுவிக்கும் போது பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு தமிழர் பகுதிகளை ஆக்கிரமிப்பதே சிறிலங்காவரசின் திட்டமாக இருந்துள்ளது. அவர்களின் எந்த எதிர்பார்ப்பும் வெற்றிபெறாத நிலையில், உரிய முறையில் அவை முறியடிக்கப்பட்ட நிலையில், முயற்சியின் எச்சசொச்ச நடவடிக்கைகளாக வெளிநாடுகளில் குறிப்பாக தமிழர்கள் வாழும் நாடுகளில் மக்கள் மத்தியில் குழப்பத்தை மேற்கொள்ள இந்திய, சிறிலங்கா அரசுகள் முயற்சித்து வருகின்றன. அவற்றிற்கு, தத்தமது கூலிகளாகச் செயற்படும் தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்களை மேற்படி ஆதிக்க சக்திகள் பயன்படுத்துகின்றன. குழப்பமான பேர்வழிகளும், வியாபாரிகள் சிலரும் தமிழினத்துக்கெதிரான இத்தகைய ஈனச்செயலைச் செய்ய விலைபோயுள்ளனர். விடுதலைப் போராட்டம் வேகமாகவும் வீறுடனும் வெற்றியை நோக்கி விரைகின்ற வேளை இத்தகைய இடர்பாடுகளும், தடைகளும் எழுவது இயற்கையானது. எமது விடுதலையை எப்படியாயினும் நசுக்கிவிட வேண்டும் என்ற துடிப்புடன் எதிரி முயற்சிப்பான் என்பதும் இயல்பானது. ஆனால் இரத்தமும் சதையும் ஈந்து, உயிரை ஆயுதமாக்கி, சத்தியத்தைத் துணைகொண்டு, போர்க்கோலம் பூண்டுநிற்கும் எமது தேசிய இனம் விடுதலைக் கனியை வென்றெடுக்கும். என்பது மறுக்கப்பட முடியாத உறுதியான உண்மை.

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு-பிரான்ஸ் விடுத்த அறிக்கை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிலத்தை உடைத்துப் பீறும் நெருப்பாற்றை கைகளால் போத்தலாம் என்றா நினைத்தாய்?

மின்னாமல் ஒரு இடி
எதிரியின் மடியிலே விழுந்தது
பகைவனின்
சிம்மாசனத்தின் பட்டுத்துணியில்
போத்தல் விழுந்தது.
கண்டியில்
எண்கோண மண்டபத்தின்
சுவர்கள் வெடித்துச் சிதறிக்கொண்டன.
ஜெயவர்த்தனபுரத்தின்
பாராளுமன்றப் படிக்கற்கள்
மந்திரிகளின் பாதம்படுவதற்கு
கண்டனம் தெரிவித்தன.
'இலங்கை இராணுவம்
அணிவகுப்புக்கு மட்டும் அழகானது'
சிங்கள மக்கள் தெரிந்துகொண்டனர்.

"சிசில்" வெறும் விசில் என்பதை
பூநகரிக்குள்ளே புலிகள் புகுந்தபோது
கூலிப்படைகள் குறித்துக் கொண்டன.
சனாதிபதியின் மாளிகைவாசலில்
ஆடாது நிற்பானே ஒருவன்
அவனெங்கே?
குஞ்சத்தொப்பி, சிவப்புச் சட்டை
கையில் ஏந்திய கட்டியப் பொல்லு
தோளிற் தரித்த கறுப்புப் பட்டி
தாங்கிய ஒருவன் வாசலில் நிற்பான்
அவனெங்கே?
மேன்மை தங்கிய சனாதிபதியின்
மேதகு நிலையை உணர்த்தும் காவலன்
இன்று அவனைக் காணவில்லையே?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏனவன் வேலைக்கு வரவில்லை
மானஸ்தன் போலும், மறைந்து விட்டான்.
நேற்றுவரை
நாகதேவன் துறை
படுகோலைப் படகுகளின் துறைமுகம்
தமிழரின் குருதிபடிந்த வெட்டரிவாள்கள்
இங்கேதான் சாணைபிடிக்கப்பட்டன.
கடாரம் வென்ற இனத்தின் முதுகில்
காற்றுக் கோதுங்கிய கால்கள் படுவதா?
வன்னியின் மண்ணில் அந்நியன் வந்து
வரலாறெழுதிட எப்படி முடியும்?
எப்படி முடியும்?
எப்படி முடியும்?
எங்களின் மண்ணிதை எப்படிப் பொறுக்கும்?
"பூநகரிப் பாதையின் போக்குவரத்துக்கு
பேச்சுவார்த்தை" என்றவனே!
"பிரபாகரனை மேசைக்கு அழைத்து
பேசுவோம்" என்றவனே!
யார்? யாருடன் பேசுவது?
எங்கள் தலைவனின் பெயரைச் சொல்ல
எப்படி உனக்குத் துணிச்சல் வந்தது?
விடிவுக்காக எழுந்த சூரியனை
விளையாட்டுப் பொம்மை என்றா நினைத்தாய்?
நேற்று
நள்ளிரவு
நிலவு அற்ற வானத்தில்
மழைமேகம் மட்டும் சதிராடிய நேரத்தில்
உன்னைப் போல்
ஈசல்கள் மட்டும் பறந்துகொண்டிருந்தன.
நடக்கப்போவது அறியாமல்
உந் தளபதிகளைப் போல...
சில்வண்டுகள் மட்டும் பாடிக்கொண்டிருந்தன.
அறிந்து கொண்ட 'தவளைகள்' மட்டும்
அலறிக் கொண்டிருந்தன.
உன்னை நோக்கி..
உன் முகாமின் திசை பார்த்து
எங்கள் "பிள்ளைகள்" நகரத் தொடங்கினர்.
புயலாகப் புகுந்த புலிகளைக் கண்டு
பூநகரி புல்லரித்துக் கொண்டது
பிரபாகரனை பேச்சுக்கழைப்பேன் என்றவனே!
போட்டது போட்டபடி எங்கே ஓடினாய்?
நாகதேவன்துறையில் கட்டியிருந்த
வேகப்படகுகளையும் விட்டுவிட்டு
எங்கே ஓடினாய்?
இது தமிழன் பூமி
இது எங்கள் தலைவனின் காலம்
இது எமக்கு வெற்றிகள் வேர்விடும் வேளை
பூநகரி மட்டுமா உன்னைவிட்டுப் போனது?
இல்லை.
அடுத்தடுத்து நீ இழக்கப் போகும்
அனைத்தினதும் ஆணிவேர்களுமல்லவா
அறுபட்டுப் போனது.
பூநரிப் பாதைக்காக பேச நினைத்தவனே
இனிப் பேசுவோம் வா
தமிழீழத்தின் எல்லைகள் எது என்று
பேசிமுடிக்கலாம்
வருக.

புதுவை இரத்தினதுரை






பூநகரியில் களம் கண்ட வரலாற்று நாயகர்கள் 158 பேரினதும் முகங்களைத் தாங்கி வெளிவந்திருக்கும் நூலின் பின் அட்டையில் பிரசுரமாகியிருந்த புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிதை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலகின் தலைசிறந்த கெரில்லாத் தலைவர் பிரபாகரன்
# இந்திய இராணுவத் தளபதி புகழாரம்



“காவியப் புகழ் பூத்த திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனால் வழி நடத்தப்படும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தற்கால உலகின் தலைசிறந்த கெரில்லா இராணுவமா? எவ்வித தயக்கமுமில்லாமல் ஆம் என்று சொல்லிவிடலாம்.” இவ்வாறு கூறுகிறார், மேஜர் ஜெனரல் அசோக். கே. மேத்தா என்ற இந்திய இராணுவத் தளபதி. இவர் முன்பு இந்திய அமைதிப்படையில் தமிழீழத்தில் கடமை புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் மேலும் தெரிவிக்கையில், “சிறீலங்கா அரசபடைகளை அடிபணிய வைத்த திறமும், பராக்கிரமம் நிறைந்த இந்திய அமைதிப்படையை விஞ்சிவிடும் வகையில் போர்புரிந்த விதமும் தமிழீழ விடுதலைப் புலிகளை மாசேதுங் போன்ற புரட்சியாளர்களின் வரிசையில் இணைத்துவிட்டன.”

“அதிகாலையில் பூநகரி இராணுவத்தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதல், பிரபாகரனின் போர்த்தந்திரத்தை வெளிப்படுத்துவதாக இருந்ததென்றால், தாக்குதலுக்கான நேரத்தேர்வு அரசியல் நுட்பத்தைப் பிரதிபலித்தது. தமிழீழத்துக்கு மாற்றான இணைப்பாட்சித் தீர்வை ஆராயத் தயார் என்று புலிகள் அறிவித்தது, அவர்களது இராணுவப் பலவீனம் காரணமாக அல்ல என்பதை இது புலப்படுத்தியது. அசாதாரண துணிச்சல், அசுரத்தனமான வீரம், யுத்த தந்திரம் ஆகியவற்றிற்கு, ‘பூநகரி’ வெற்றியானது ஒரு டசின் விக்ரோறியா விருதுகளைப் பெறவேண்டும்.”


“கடந்த சில ஆண்டுகளில் விடுதலைப் புலிகள், பல்வேறு கள அனுபவங்களை வரித்துக் கொண்ட, உயர்ந்த கட்டுப்பாடும், அதி திறமையும் வாய்ந்த கெரில்லாப் படையாக வளர்ந்துவிட்டார்கள். சமகால கெரில்லா இயக்கத் தலைவர்களுள், பிரபாகரன் மிகச் சிறந்தவர் என்பதை நிச்சயமாகச் சொல்லிவிடலாம்.”

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஓவியம்: தமிழ்நாட்டைச் சேர்ந்த புதுப்பா எனும் ஓவியர்
சத்தியமூர்கன்



www.tamilarangam.net



# மீட்டு உருவாக்குவோம்

சிங்கள முட்டாள் தீ
யாழ் நூலகம் சென்றது
இனிய தமிழ் மொழி
தெரியாமல்,
புரியா எரிச்சலால்
எரித்தது அரிய நூல்களை.
யாழ் நூலகம்
பாழ் ஆனது.
இருள் மனச் சிங்களர்
தமிழ் நூல் எரித்து
வெளிச்சம் தேடினரோ....
தமிழ் நூல் படித்தாலே
இருள் மனம் நீங்குமே.

முன்னாளில்
தமிழ் ஓலைச்சுவடிகள்
நூலோரால்
"அனல் வாதம்"
"புனல் வாதம்"
எனும் பெயரால்
அழிக்கப் பட்டனவாம்
இப்படியாக...
தமிழனின் இழப்புகள்
பலப் பல
கச்சத்தீவு உட்பட.

"முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ
தென்னிலங்கையிலே"
இவையிரண்டும்
கதையென்றறிகையிலே
ஐயகோ... ஐயகோ இப்போது
யாழ் நூலகம் எரிந்தது
உண்மையிலே.

மக்கள் எரிந்தனர்
வீடு எரிந்தது
தேசம் எரிந்தது
இதோ...
இதோ...
இப்போது தமிழ் நூல்களும்
நாமினி
"தூங்கும் புலியைப் பறை
கொண்டெழுப்பினோம்
தூய தமிழரைத் தமிழ்
கொண்டெழுப்பினோம்"
என்ற பாவேந்தரின்
பா வரிக்கிணங்க
எரிந்த சாம்பலைத் தூவி
இறந்த தமிழரை
அழிந்த நூலகத்தை
இழந்த நாட்டை
எழுப்புவோம்
மீட்டுருவாக்குவோம்
மீட்போம்.

புதுவை சீனு தமிழ்மணி, தமிழ்நாடு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு விடுதலை வேங்கையின் வீரமரணம்



தமிழீழ விடுதலைப் புலிகளின் கெரில்லா வீரர்களுக்கும் சிங்கள இராணுவத்தினருக்கும் மத்தியில் அண்மையில் நடைபெற்ற சமர் ஒன்றில் புலி இயக்கத்தின் முக்கிய தளபதிகளில் ஒருவரான ப. இரவீந்திரன் (பண்டிதர்) வீரமரணம் அடைந்தார். இந் நிகழ்ச்சி ஜனவரி 9ம் திகதியன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அச்சுவேலி என்னும் கிராமத்தில் நடைபெற்றது.

அச்சுவேலியிலுள்ள எமது கெரில்லாத் தளமொன்றைப் பெருந் தொகையான சிங்கள இராணுவப் படையினர் திடீரென முற்றுகையிட்டனர். இதனைத் தொடர்ந்து அத்தளத்திலிருந்த எமது விடுதலை வீரர்களுக்கும் இராணுவத்தினருக்கும் மத்தியில் பயங்கரச் சண்டை மூண்டது. நீண்ட நேரமாக நடைபெற்ற இச்சண்டையில் கப்டன் இரவீந்திரன் இறுதிவரை போராடி விடுதலை இலட்சியத்திற்காக தனது உயிரைத் தியாகம் செய்தார். கப்டன் இரவீந்திரனுடன் நான்கு இளம்புலிகள் வீரமரணம் அடைந்தனர். ஏனைய போராளிகள் முற்றுகையை உடைத்துக்கொண்டு தப்பினர்.

கப்டன் இரவீந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மத்தியகுழு உறுப்பினராவார். அத்துடன் புலி இயக்கத்தின் நிதியமைப்பிற்கும் ஆயுதப் பராமரிப்புக்கும் பொறுப்பாக இருந்தார். வல்வெட்டித்துறைக்கு அருகேயுள்ள கம்பர்மலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவருக்கு வயது 24. 1977ம் ஆண்டு புலிகள் இயக்கத்தில் சேர்ந்து இயக்க வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். கடமையுணர்வு, கடும் உழைப்பு, இலட்சியப்பற்று ஆகிய சிரிய பண்புகள் நிறைந்த கப்டன் இரவீந்திரன் விடுதலைப் போராளிகளின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமாக விளங்கினார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு மிகவும் வேண்டியவராக, அவரது வலது கையாகத் திகழ்ந்தார். இயக்க நிர்வாகப் பொறுப்புக்களைச் சுமந்து வந்ததோடு மட்டுமல்லாது, கெரில்லாத் தாக்குதல் நடவடிக்கைகளிலும் இவர் பங்குபற்றி வந்தார். ஈழத் தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காக தனது உயிரை அர்ப்பணித்துக் கொண்ட இந்த வீர மறவனுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைச் செலுத்துகின்றனர்.

அச்சுவேலித் தாக்குதல் சம்பந்தமாக சிங்கள அரசு விஷமத்தனமான பொய்ப்பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. புலி இயக்கத்தின் இராணுவத் தலைமையகத்தை அழித்துவிட்டதாகவும் வெற்றி முரசு கொட்டி வருகிறது. இந்தப் பிரச்சாரத்தில் எவ்வித உண்மையுமில்லை. இதை நாம் திட்டவட்டமாகக் கூற விரும்புகிறோம். புலி இயக்கத்தின் இராணுவ அமைப்பின் பெரிதும் சிறிதுமாக ஏராளமான கெரில்லாத் தளங்கள் தமிழீழத்தில் உள்ளன.

அச்சுவேலியிலுள்ள சிறிய கெரில்லாத் தளமொன்றே இம்முற்றுகைக்கு இலக்காகியது. அதுவும் 500க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கனரக ஆயுதங்களுடன் எமது 15 கெரில்லா வீரர்களைத் திடீரென எதிர்பாராமல் சூழ்ந்துகொண்டனர். இந்தச் சண்டையில் 10 புலிக் கெரில்லா வீரர்கள் வீரமுடன் போராடி முற்றுகை அரண்களை உடைத்துக்கொண்டு மீண்டது பெரிய போர்ச்சாதனை என்றே சொல்லவேண்டும். கெரில்லா வீரர்களைக் கைநழுவ விட்ட இராணுவத்தினர் அச்சுவேலிக் கிராமத்திலுள்ள 50 அப்பாவி இளைஞர்களைக் கைதுசெய்து அவர்களுக்கு பயங்கரவாதிகள் என்ற முத்திரை குத்தி "வெற்றிவாகை" சூடிக்கொண்டனர். சிறிலங்கா அரசின் இந்தப் பொய்ப்பிரச்சாரமானது தமிழ் மக்களின் மனவுறுதியை தளர வைத்து சிங்கள ஆயுதப்படைக்கு ஊக்கத்தை அளிக்கும் நாசகார நோக்கத்தைக் கொண்டது. வெறும் பொய்ப்பிரச்சாரத்தின் மூலம் தமிழரின் சுதந்திரப் போராட்டத்தை நசுக்கிவிட முடியாது என்பதை சிங்கள அரசுக்கு நாம் உணர்த்தப் போகும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

நன்றி: விடுதலைப் புலிகள்(சித்திரை-1986)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சகிப்பு மீறியெழும்

நிச்சயமாக
மூவாயிரம் அடிக்குமேல்
முகில்களுக்கிடையில் ஊளையிடும்
விமானங்களில்
கொலைகாரர் திரிகிறார்கள்.
காலவரையற்ற ஊரடங்குச் சட்டங்களிலும்
போர்ப்பிரகடனங்களுக்குள்ளும்
சிக்குண்ட இந்தநாட்களில்
ஒரு நல்ல கவிதை...
அதை யாராவது எழுதட்டும்
ஆனால் இது இப்போது மிகமுக்கியமானது.



நான் உழைக்கிறேன்
இந்தக் கோடையிலும்
எதிர் காற்றிலும்
நீயும் நன்றாக வேலை செய்கின்றாய்
எனது உழைப்பால்
வீடும்
எப்பொழுதும் சோலையான
தோட்டமும் எங்களுக்கிருந்தது
பனையெல்லாம் நுங்கு தள்ளி......
சோளகம் வீசிய அந்த நாளொன்றில்
எங்கள் வீடும் தோட்டமும்
இரக்கமின்றி அழிக்கப்பட்டது
நாங்கள் விரட்டப்பட்டோம்
நாங்கள் ஓடிவரும்போது
எங்களின் பூனைக்குட்டிகள்
இடிபாடுகளுக்குள் ஈனமாகக் கத்திக்கேட்டது
அந்தவேளையில்
பார்வை குறைந்த அம்மாவின்
மூக்குக் கண்ணாடியைக் கூட எடுக்க முடியாமற்
போயிற்று.
துக்கமாகவும்
கடுங்கோபத்துடனும்
இந்த நிகழ்ச்சியை நான் சொல்லும்போது
பலரும் சொல்கிறார்கள்
தங்களுக்கும் இப்படி நிகழ்ந்ததென்று
இன்றைக்கும்
இராணுவத்தின் மணம்
மூக்கை அரிக்கிறது
அதன் காட்டுமிராண்டிக் கூச்சல்
காதுகளைக் கிழிக்கிறது
மாறி மாறி குண்டுகளைப் போட்டுச்செல்லும்
விமான ஓட்டிகளை
கோபம் பொங்கியெழ
வெறுமனே திட்டுவதையும்
முஸ்டியை ஓங்கிக் குத்துவதையும்
இனியும் நான் விரும்பவில்லை
பறிக்கப்பட்ட
எனது வீடு எனக்கு வேண்டும்
அந்த வீட்டையும் தோட்டத்தையும்
நான் பெறவேண்டும்
உணவு
உடை
உறையுள் என்பவற்றுடன்
பாதுகாப்பும் மிகமிக அவசியமாகிவிட்டது
கவிதையின் அனுபவிப்பு
சினிமாவின் ரசனை; ஓவியத்தில் ஈடுபாடு
என்பதெல்லாம் இதனுள் அடங்குகிறது
அந்தப் பூனைக்குட்டிகளின்
ஈனக் குரலை
என்னால் சகிக்க முடியவில்லை.

-கருணாகரன்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மரணத்தின் வாசலில் ஓர் சாதனை


இலங்கைத் தீவின் ஒரு பகுதியாக இருந்த எமது மண் இன்று, உலகத்தின் கண்களில் தமிழீழமாகத் தோன்றத் தொடங்கியிருக்கின்றது. இந்த மாற்றம், வெறும் ஒலிபெருக்கி முழக்கங்களினாலும், அச்சடித்த காகிதங்களாலும், வாய்ச் சவடால்களாலும் கொண்டுவரப்பட்டதல்ல. ஒற்றைத் துப்பாக்கியோடு, உறுதியும், கட்டுப்பாட்டுடனும் ஆரம்பித்த எமது இயக்கத்தின் எண்ணற்ற வீரர்கள் செய்த தியாகங்களினாலும், சிந்திய இரத்தத்தாலும், கண்ட சாதனைகளாலும் உருவானதுதான் இன்றைய தமிழீழம். இதற்கு நாம் கொடுத்த விலை சொல்லில் அடங்காது. வீட்டைப் பிரிந்து, படிப்பைத் துறந்து... கைகளில் துவக்கோடும், கழுத்தில் சயனைட்டோடும் களத்தில் இளம்புலிகள் எத்தனே பேர்! அவர்களது வேட்கையும், வீரமும், விவேகமும்தான் விடுதலைப்போரின் உயிர்மூச்சு. இவர்களது வெற்றிகளின் பின்னால் வேதனைகள், எத்தனையோ வீரமரணங்கள். மண்ணில் கலந்த குருதி நாளைய அரசியல் சாசனமாக உருமாறும். இவர்கள் களம்கண்ட கதையை தலைமுறைகளிற் கூடாக காலம் எப்போதும் சொல்லிக்கொண்டிருக்கும்.

அந்த வரலாற்று நாயகர்களில் ஒருவன் ஜெயம். இயற்பெயர் கந்தையா அபிமன்யு. வல்வெட்டித்துறைக்கு அருகேயுள்ள இலந்தைக் காட்டைச் சேர்ந்தவர். இயக்கத்தின் உறுப்பினரான இவர், பல போராட்டங்களைச் சந்தித்தவர். இரவு பகல் பாராது புரியும் இவரது கடுமையான உழைப்பையும், எப்போதும் உற்சாகமாகத் திரியும் சுபாவத்தையும் நண்பர்கள் இன்றும் நினைவுகூர்கின்றனர். உழைப்பின் பயனாகவும் இனிய சுபாவத்தாலும் கிராம மக்களிடையே ஆதரவையும் செல்வாக்கையும் பெற்றிருந்தார். அதுவே அவரை ஒரு பகுதியின் பொறுப்பாளராக உயர்த்தியது. அரசியல் ரீதியாகவும் மக்களை விழிப்படையச் செய்வதில்



மிகுந்த அக்கறையுடன் செயலாற்றிக்கொண்டிருந்தார்.

அந்த விடுதலை வேங்கை எல்லார்க்கும் ஆதர்ச வீரனானார். ஒரு நாள் 09.05.1985 அது அவரது கடைசி நாள். ஆனால் அவருக்கு மட்டுமல்ல.....







1) 09.05.1985 உடுப்பிட்டி கிராமம், இன்னும் துயில் கலையாத அதிகாலை. ஆனால் விடுதலைப் புலிகளின் தளம் ஒன்றில் தன் மக்களை, தோழர்களை பாதுகாப்பதற்காகக் கண்விழித்துக் காத்திருக்கிறான் ஜெயம்.

2) கிராமத்தின் நிச்சலனம் பீரங்கிகளின் இடியொலிகளில் சிதறுகிறது. வல்வெட்டித்துறைப் பகுதியில் அரச படைகளின் அட்டூழியம்.

3) ஆபத்தை உணர்ந்துகொண்ட ஜெயம் அவதானமாக செயல்படலானான். கிராமத்தினுள் நுழையும் இராணுவத்தினர் தமது தளத்தையும் சுற்றிவளைக்க முற்படலாம் என்ற முன்னெச்சரிக்கையுடன் தனது தோழர்களைத் தயார்படுத்தினான்.







4) தன் தோழர்களை விழிப்படையச் செய்த ஜெயம் மக்களுக்கு ஏதும் நேர்ந்துவிடுமோ என்ற அச்சத்துடன் இராணுவத்தின் நடமாட்டத்தை அறிந்துவர அங்கிருந்து புறப்பட்டான்.

5) சூழலை சுற்றுமுற்றும் அவதானித்தவாறே கிராமத்தின் எல்லையை நோக்கி விரைந்தான்.


6) ஆனால் இதற்கு பல மணி நேரத்திற்கு முன்பே கிராமத்தினுள் நுழைந்த இராணுவத்தினர் உடுப்பிட்டி பஸ் நிலையத்திற்கருகேயும், அதனுள்ளும் தம்மை நிலைப்படுத்திப் பதுங்கியிருந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



7) பஸ் நிலையத்தில் இராணுவத்தினரைக் கண்ட மறுவினாடியே மின்னெலெனச் செயல்பட்டான்....



8) .....இடுப்பிலிருந்த வெடிகுண்டுகளை நோக்கி விரைந்தன கைகள்.




9) அதற்குள் இராணுவத்தினரின் துப்பாக்கிகள் தொடங்கிவிட்டன.



10) ஜெயத்தைச் சுற்றிலும் குண்டுகள் சீறிப்பறந்து கொண்டிருந்தன .... ஒன்று மார்பைத் துளைத்தது.



11) நெஞ்சில் குண்டு பாய்ந்த பிறகும் கையில் வெடிகுண்டோடு எதிரியை நோக்கி ஓடினான் அந்த மாவீரன்.



12) இறுதி மூச்சுவரை உறுதி தளராமல், வெடிகுண்டை இராணுவத்தினரை நோக்கி வீசினான்.



13) குறி தவறவில்லை. குண்டும் பொய்க்கவில்லை. இடிமுழக்கத்துடன் வெடித்துச் சிதறியது.



14) மேஜர் மெண்டிஸ் (பலமுறை தமிழர்களை வேட்டையாடும் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கிய இனவெறியன்) மற்றும் ஐந்து இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே மரணமடைந்தனர்.



15) அக்காட்சியைக் கண்ட ஜெயத்தின் கண்கள் அதன் பின் இமைக்கவில்லை. அமரத்துவம் அடைந்தான் தோழர்களின், மக்களின் நெஞ்சங்களில்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சாந்தன்

# சனம்

இந்த வெளி எப்போதுமே அற்புதமானது. மாரியோ, கோடையோ, இரவோ, பகலோ எப்போதும். ஆனால், முன்னிலவு வேளைகளில் வலு விசேஷம். தெரு, கிழக்கிலிருந்து மேற்கே ஓடுகிறது. ஒரே நேர். அப்படி வருகிறபோது, இருந்தாற்போல ஓரிடத்தில் வேலி அடைத்த வளைவுகள் நின்றுவிடும். இரண்டுபக்கமும் வெளிவிரியும். படாரென்று கட்டொன்றை அவிழ்த்துவிட்டது போல் விட்டாத்தியாயிருக்கும். முகத்திற் படுகிற புதுக் காற்றுப் போல் மனதிலும் வீசும்....

வெளி தொடங்குகிற இடத்திலிருந்து ஒரு முப்பதடி வந்ததும், தெருவின் தார் கழன்று நீள் வட்டமாய்க் கிடக்கிற அந்தக் கிடங்கைத் தாண்டுகிற கையோடு, இடதுபக்கம் திரும்பி, வெளி விளிம்பின் தென்னை நிரைகளுக்கு மேலே பார்த்தால், பத்திரகாளி கோவில் கோபுரம் தெரியும். ஒன்று அல்லது இரண்டு கணந்தான், மோட்டார் சைக்கிளா, சைக்கிளா என்பதைப் பொறுத்து. மரங்களின் இடைவெளி அவ்வளவுதான் காட்டும். இன்றைக்கும், இந்தா, மாலை வெய்யிலில் மஞ்சளாய்...

கால் மைலுக்கும் கூடவரும் வெளியின் நீளம். அகலமும் கிட்டத்தட்ட அவ்வளவு. நட்டநடுவில் தெரு. பக்கத்துப் பாத்திகளிலும் தெரு உயரம். புகையிலை வைக்கிற காலங்களில் வெளி நிறைந்து கடல் போலிருக்கும். பயிர் வளர, பச்சைக் கடல் உயரும்... மற்றைய காலங்களில், அங்கொரு துண்டில் குரக்கன், இங்கொன்றில் மரவெள்ளி அவரவருக்கு வாலாயம் போல. வெளிச்சம் இருக்கிற எந்த நேரத்தில் வந்தாலும், எங்கோ, யாரோ, ஏதோ செய்து கொண்டிருக்கிற உயிர்த்துடிப்பு...

இந்தத்துண்டில், கண்ணு உழுந்து போட்டிருக்கிறான். உழுந்தா, பயறா? இன்னும் வடிவாய்த் தெரியவில்லை. இவ்விரண்டு இலைகளோடு நிற்கிற பயிர். இன்றுதான் இறைத்த ஈரத்துக்கிடையில் மதாளித்துப் படர்ந்திருந்த பசளிக்கீரை. மெல்லிய நீலம் பரவிய பச்சை. மடித்தால், இலைகள் டிக்கென்று ஒடியுமென்று இங்கிருந்தே உணர முடிகிறது.

சோழகம், கொஞ்ச நாட்களாகவே இப்படி ஒரு வாடைக் குளிரோடு வீசுகிறது. எங்காவது மழையா? இங்கென்றால், வானம் வெளுத்துக் கிடக்கிறது. மேற்கில் மட்டும் சில சிவப்பு முகில்கள்.

என்ன இது?

ஒருவரையும் காணவில்லை! தெரு நீளம் ஒரு காகக்குருவியும் இல்லை! என்ன சங்கதி? இந்த நேரத்தில் இந்தத் தெருவில் எவ்வளவு சனம் போகும்? என்ன நடந்தது?...

தோட்டங்களைத் திரும்பிப் பார்த்தான். வலது பக்கம் தெருவோடு ஒரு குரக்கன் பாத்தி. அங்கு வெருளி மட்டும். அதன் கையிலிருந்த சவுக்கு நுனி காற்றில் பறக்கிறது. இடது பக்கம் அதுகூட இல்லை. இதென்ன? கொடியேற்றுகிற பெடியள் எல்லாம் எங்கே போனார்கள்? காற்று எவ்வளவு நல்லாய் அடிக்கிறது! அதற்கிடையிலா வலித்துக்கொண்டு போயிருப்பார்கள்? நேற்றுக்கூட இரவிரவாக ஒரு எட்டுமூலை விண்கூவியது....

அசைவேயில்லை. ஒரு வாகனம், வண்டில், சைக்கிள்? நடப்பவர்கள் கூட! என்ன நடந்தது, எல்லோருக்கும்? இறைப்பவர்கள், விறகுக்கு அலப்பில் தேடுபவர்கள், எருப் பொறுக்குபவர்கள், எதையோ விதைப்பதற்காக கொத்துபவர்கள், புல் பிடுங்குபவர்கள், மாட்டைக் கலைப்பவர்கள், இவர்களோடு கதைப்பவர்கள், சண்டை பிடிப்பவர்கள், வரம்பால் நடந்து தவறணைக்கு போகிறவர்கள், வரும்போது வரம்பில் தள்ளாடுபவர்கள், பராக்குப் பார்க்கும் குழந்தைகள், குறுக்கே பாயக்கூடிய சிறுவர்கள்...? எல்லோரும் எங்கே? என்ன இது, இன்று?

நேரே... வெளி முடிந்துங் கூட, தெரு நேரே போகிறது. ஒரு முன்னூறு யார் அப்படிப் போய்த்தான் பிறகு டானாவாக வலப்பக்கம் திரும்பும். இங்கிருந்து அந்த முடக்கும் தெரிகிறது. அங்கும் ஒரு மனுக்கணமும் இல்லை! வெளி முடிவில் வருகிற கனகராசா கடை, தள்ளியிருக்கிற சலூன், பிறகு சந்தி... ஓரிடத்திலுமா ஆட்களில்லாது போவார்கள்?

காற்று, தெற்கிலிருந்து வந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தெருவைத் தாண்டி வடக்கே பறந்தது. பொலித்தீன் பையொன்று, பூப்போல், கடற்சொறி போல், பரசூட்போல்.... இந்த வெயிலிலும், காற்று குளிராய்த்தானிருந்தது.

என்னாயிருக்கும், இங்கே? ஏதும் பிரச்சினையா? அப்படி என்ன? சத்தங்கூடக் கேட்காமல்.... பயமா, இது? பரபரப்பா? சைக் கிளை உழக்கினான்.

பத்து வருஷம்! எண்பத்து மூன்று ஜூலை. ஒரு காலை விடிந்த போதே வித்தியாசம் தெரிந்தது.

சக்தி வந்து மெல்லக் கூப்பிட் டான்.

"சந்தையடியிலே ஏழெட்டுப் பேரை ஆமி சுட்டுப் போட்டிருக் காம்! வாறியா, என்னெண்டு பாத்திட்டு வருவம்?"

வழியில் கண்ட எவரோ ஊரடங்கு என்றார்கள். வடிவாயுந் தெரியவில்லை. ஊரே கெலித்து ஒடுங்கிக் கிடந்தது.

"நேற்றிரவு தின்னவேலியிலை நடந்ததுக்குப் பழிவாங்கலாம், இது."... காற்றோடு கதைகள்.

சந்தையடியில் சிறு கும்பல் நின்றது. நின்றவர்கள், காதுகளையும் கால்களையும் தயாராய் வைத்தபடி நின்றார்கள்.

எப்போது எங்கிருந்து வருவான் களென்று தெரியாத பதகளிப்பு. பூட்டியிருந்த கடைகளின் விறாந் தைகளில் வளர்த்தியிருந்த சடலங் கள்... எல்லாம் இளந்தாரிகள். பள்ளிக்குப் போன பெடியன்களும்.... கடவுளே!

இடது கன்ன மேட்டில் துவா ரம் தெளிவாய்த் தெரிய மல்லாந்து குடந்த முகமொன்று..... தாங்க முடியாமல், "வா, போவோம்" என்று சக்திதாசனை இழுத்தபடி வெளியே வந்தான்.

எங்காவது ஜீப்போ, ட்ரக்கோ இரைகிறதா என்று புலன்களைக் குவித்தபடி ஒழுங்கைகளூடாகத் திரும்பிக்கொண்டிருந்தபோது, சக்தி சொன்னான்:

"மச்சான், பதின்மூண்டு சிங்கள வர்களைக் கொண்டதெண்டு சொல் லுவாங்கள்.... ஆனா, இது உண்மை யிலேயே இலங்கை இராணுவமாக இருந்திருந்தால்..."

சக்தி 'இலங்கை' என்றதை அழுத்திச் சொன்னான்

".....இந்தப் பதின்மூண்டிலை, மூண்டாவது தமிழாக இருந்திருக் குமே!"

இந்தத் தெருவால் வந்து கே.கே.எஸ். வீதிச் சந்தியையும் பார்க்கலாமென்றான் சக்தி. வந்தார் கள். இடையில் ஏதோ இரைந்த மாதிரி சத்தம். சோழகமா, வாக

# மூத்த எழுத்தாளர்

ஈழத்தின் சிறுகதைத் துறைக்கு வழிகாட்டிய முதல்வர் என்கிற பெருமையை சம்பாதித்தவர் அமரர் சி. வைத்திலிங்கம். சோ. சிவபாதசுந்தரம், சி. வைத்திலிங்கம், இலங்கையர் கோன், சம்பந்தன் ஆகியோர் ஈழகேசரிக் காலத்தினர். இவர்களில் இலங்கையர் கோன் மறைந்து பல ஆண்டுகளாகிவிட்டன. சோ. சிவபாதசுந்தரமும், சம்பந்தனும் தற்போது லண்டனில் வாழ்ந்து வருகிறார்கள்.

சி. வைத்திலிங்கம் அண்மையில் லண்டனில் காலமானார்.

ஏழாலை மேற்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட சிவப்பிரகாசம் வைத்திலிங்கம் கொழும்பு மாநகரசபையில் எழுதுவினைஞராகி இளைப்பாறியவர். 1931-1980 வரை அவர் கொழும்பில் வாழ்ந்தார். இளைப்பாறிய பின்னர் சிலகாலம் ஏழாலையில் வசித்துப் பின்னர் லண்டன் சென்றார். அன்னார் 15 வயதில் ஈழகேசரியில் சிறுகதைகளையும், ஆங்கில மொழிபெயர்ப்புக்களையும் எழுதினார். கலைமகளில் 15 சிறுகதைகள் வரை எழுதினார். ஆனந்தவிகடன், கலைமோகினியிலும் இவரது படைப்புக்கள் வெளிவந்துள்ளன. இவரது கதைகள் யாவும் 'ரவீந்திரன்' என்ற புனைபெயரிலேயே எழுதப்பட்டன. ரூசிய நாவலான `On the eve' என்பதை 'மாலை வேளை' என மொழிபெயர்த்துள்ளார்.

அல்லயன்ஸ் பதிப்பகத்தார் வெளியிட்ட ஈழத்துச் சிறுகதைத் தொகுதியில் 'மூன்றாம் பிறை' என்ற இவரது சிறுகதையும் இடம்பெற்றது. ஈழகேசரி வெள்ளிவிழா மலரில் 'உள்ளப் பெருக்கு' என்ற சிறுகதை வெளிவந்த பின்னர் அவர் எதுவும் எழுதியதாகத் தெரியவில்லை.

சி. வைத்திலிங்கம் அவர்கள் தமது 81வது வயதில் மரணமானார். அன்னார் மரணமாவதற்குச் சில நாட்களுக்கு முன்னர்தான் அவரது சிறுகதைத் தொகுதி "கங்கா கீதம்" வெளிவந்தது. சோ. சிவபாதசுந்தரம் அவர்களின் உதவியுடன் சிவகங்கை அன்னம் பதிப்பகம் 'கங்கா கீத'த்தை வெளியிட்டுள்ளது.

புகழ் பூத்த எழுத்தாளர் 'இலங்கையர் கோன்' இவரது மைத்துனர். இருவரும் கொழும்பில் ஒரு வீட்டில் நீண்ட காலம் தங்கியிருந்த போது இருவருமாக ஆங்கிலத்திலிருந்து பல மொழிபெயர்ப்புக்களைச் செய்தார்கள்.

ஈழத் தமிழ் இலக்கிய சிறுகதை மன்னராகத் திகழ்ந்த சி. வைத்திலிங்கம் ஈழத் தமிழ் இலக்கியம் உள்ளவரை வாழ்வார்.

சி. வைத்திலிங்கம் "புத்தொளி"

www.tamilarangam.net




னமா என்று கூட யோசிக்க முடியாத அந்தரத்தில் அமத்திக் கொண்டு பறந்த போதும், இந்த வெளி இப்படித்தானிருந்தது!

அன்றாவது பரவாயில்லை; சக்தி கூட வந்தான். ஆனால் ஒரு நாலு வருஷத்துக்குப் பிறகு இந்த இடத்தை அப்படித் தாண்ட நேரிட்டபோது, இவன் தனியேதான் வந்தான். சைக்கிள்தான்.

தோட்டவெளியைச் சுற்றி அரண் கட்டிநிற்கிற பனங்கூடலெங்கும் இந்தியன் ஆமி நிற்கக் கூடும்..... இவன் ஆர், இப்படித் தன்னந்தனியே என்று... ஊரைச் சுற்றி வளைத்தபோது இப்படித்தான் ஏழெட்டுப்பேரை... ஏன் இங்கு வந்தேன்? இருந்தது போல் மாமா வீட்டில் இருந்திருக்கலாம்.... இப்போ வீடு பார்க்க என்ன அவசரம்?

சுற்றி வளைத்து, அந்தக் குறிச்சியின் சனமெல்லாவற்றையும் ஒரே வீட்டில் அடைத்து வைத்த அந்த ஒரு கிழமை. அவன்கள் விட்டதும் விடாததுமாய் வீட்டுக்குப் போய் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு பட்டணத்துக்கு நடந்தே போய் மாமா வீட்டிலிருந்த மூன்று கிழமை. இந்த ஒரு மாதமும் வீடு ஏதோ இருந்திருக்கும் தானே.

முதல்நாள் மகாலிங்கத்தைக் கண்டபோது, இரண்டுதரம் போய்த் தனது வீட்டைப் பார்த்துவிட்டு வந்ததாகச் சொன்னான். அவன் கதையைக் கேட்டு வெளிக்கிட்டது பிழை. அதுவும் தனியே! அவனோடாவது வந்திருக்கலாம்.... ஆரும் கூட இருந்திருந்தால் பரவாயில்லை.... தடுத்து வைத்தபோதுதான் என்னவெல்லாம் செய்தான்கள்.... ஆனால், ஊரெல்லாம் அப்போது ஒருமிக்க இருந்தது....

மழைகாலம். எங்கும் பச்சை. பனையடி மூலையில் மாடுகள் கூட்டமாக மேய்ந்துகொண்டிருந்தன. பசு மாடுகள். வீடுகளை விட்டு வெளிக்கிட்டபோது புத்தியாய் அவிழ்த்துவிட்டவர்களின் மாடுகள். பிறகு, அவன்களும் கட்டுகளில் நின்றதுகளை அறுத்து விட்டதாய்ப் பறைந்தார்கள்.... எப்படியோ, கட்டைகளில் நின்ற மாடுகள் மந்தையாய்ப் போயின!

தடுப்பு முகாமில் இருந்தபோதே இந்த மந்தை உருவாகிவிட்டது. ஒரு பிற்பகல், அந்த வீட்டைத் தாண்டி அது தெருவால் போனது. அவன் வீட்டு மாடும் அதில். கன்னி நாகு. மாடுகள், அந்த வீட்டிலிருந்த மனிதர்களைக் கவனித்ததாய்த் தெரியவில்லை. அவர்கள் கட்டில் நின்றார்கள். அவை சுதந்திரமாய்ப் போயின! வீட்டைத் தாண்டியதும், பள்ளமாய்க் கிடந்த தெருக்கரையில் தேங்கிநின்ற வெள்ளத்தை வாய் வைத்து உறிஞ்சின. அதைக் கண்ட கந்தையர் அழுவார் போலிருந்தார். அவைகளுக்கு வித்தியாசமே இல்லைப் போலும். நல்லகாலம், மாரியாயிருந்தது.

அதே மந்தைதான். அவன் மாடும் அதில் நிற்குமா? ஏதோ, தப்பிப் பிழைத்திருக்கும்.... அதையெல்லாம் பார்க்கிற நிலையில்லை, இது.....

வீட்டுக்குப் போனது, பார்த்தது, திரும்பியதெல்லாம் வெளி நினைவில் மங்கிப் போயின.

இன்றைக்கும் வெளி அதே மாதிரி?

முடிவில் வருகிற அதே மின்கம்பம்.... முதலி வீட்டு வேலியோடு வெளி முடிகிறது. கண்கள் கூர்ந்து முன்னால் தேடின....

கனகராசா கடை திறந்துதான் இருக்கிறது. அதற்கும் சலூனுக்கும் இடையில் இருக்கிற ஓடையில் இரண்டு சைக்கிள்கள். கடையில் ஓர் ஆள். சலூனுக்குள்ளும் கண்ணாடிக் கதவினூடு தெரியும் அசைவுகள்...

இடதுபக்கம் திரும்புகிற ஒழுங்கை முகப்பில் வாசிகசாலை. திறந்திருந்தது. எட்டுப்பத்துச் சைக்கிள்கள் எதிர்வேலி நிழலோடு நின்றன. சனங்களும் கனபேர். குரல்கள் பெரிதாய் ஒலிக்கின்றன...

சைக்கிளை, ப்ரீவீலில் விட்டான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# அக்கறைப்பூக்கள்

எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,

கடந்த கிட்டண்ணாவின் சிறப்பிதழான சுறவம் 1994 எரிமலையின் முன் அட்டைப்படம் எம்மையெல்லாம் நல்லூரின் சனத்திரள்களுக்கிடையில் அழைத்துச் சென்றது. மெய்சிலிர்க்க வைத்தது.

ஜெகன்
ஜெர்மனி.

❋

எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,

சுறவத் திங்கள் எரிமலை சுவைத்தேன். தரமாக இருந்தது. கிட்டு அண்ணாவின் நினைவுகளுடன் மலர்ந்திருந்தது. அட்டைப்படம், முன்னாள் யாழ்மாவட்டத் தளபதியின் வீர சாகசங்களுக்குள் அழைத்துச் சென்றது.

புனிதன்
பாரிஸ்.

❋

எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,

எங்க நெடுக நினைக்கிறதுதான். இந்த இயந்திர வாழ்க்கைக்குள்ள ஓரிரு நிமிசம் ஓய்வாய் இருந்து எழுதுறதுக்கு நேரம் கிடைக்கிறது என்பது முயல்கொம்பே. இருந்தும் தங்களின் எரிமலை இதழைப் படிப்பேன். அது என்னோட பேசும். எனது நாட்டின் நினைவுகளைச் சொல்லும். ஏன் இங்கு இன்னும் இருப்பான் என்று எண்ணவும் வைக்கும்.

தில்லை
பாரிஸ்.

❋

எரிமலை குழுவினருக்கு வணக்கம்,

எரிமலை பற்றி என்ன சொல்லக்கிடக்கு. இவ்விதழ் எமக்கு ஒரு அரிய வரப்பிரசாதமே. மாதங்களைத் தூய தமிழ்வழக்கில் கொண்டுவந்திருக்கிறீர்கள். பழக்கத்துக்கு வர கொஞ்சம் கஸ்ரமாகவே இருக்கிறது.

சிவா
சுவிஸ்.

❋

எரிமலை இதழுக்கு,

ஓவியத்தை எம்மத்தியில் ரசனைக்குரியதாக்கவும் கவனிப்புக்குரியதாகவும் தாங்கள் எடுத்துவருகின்ற முயற்சியை பாராட்டுகின்றேன். பின் அட்டைப் படத்தில் காத்திருக்கின்ற விழியோடு கரை நின்று கண்ணீர் விடுகின்ற நெய்தல் நிலப்பெண்ணின் பிரிவுத் துயர் பேசும் ஓவியம் நன்று.

கலா
ஜேர்மனி.

❋

எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,

'என்னைப்போல அநாதைகளாக யாரும் இருக்கக்கூடாது' என்று தலைவரிடம் காந்தரூபன் கேட்டுக்கொண்டதையும், அவனின் வேண்டுகோள் 'காந்தரூபன் அறிவுச்சோலை'யாக தோற்றுவிக்கப்பட்டதையும் எரிமலையில் படித்தறிந்தபோது எமது தேசியத்தலைவரை எண்ணிப் பெருமிதமடைந்தேன்.

மணி
பரிஸ்.

❋

அன்புள்ள ஆசிரியருக்கு,

திடீரெனத் தமிழ்த் திங்களுடன், 1994ம் ஆண்டின் முதல் எரிமலையைத் தொடக்கி எம்மைத் திணறடித்துவிட்டீர்கள். இத்தகு 'தடபுடல்' மாற்றம் வாசகர்கள் இடையே குழப்பத்தையே ஏற்படுத்தும். மக்களுக்குப் பழக்கப்பட்ட முறைகளில் இருந்து படிப்படியாகவே மாற்றத்தைக்கொண்டு வரவேண்டும் என்று கருதுகிறேன். மேலும் இத்தகு மாற்றங்கள் தமிழரின், தமிழ்மொழியின் விடுதலையை முன்னெடுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீட அங்கிகாரம் பெற்றதோ என்பதும் தெரியவில்லை. காரணம், தமிழீழத்தின் தொலைக்காட்சி நிகழ்வுகளைத் தாங்கிவரும் ஒளிவீச்சு ஒளிஇழை நாடாவில், யூன், யூலை என்ற ஆங்கில மாதங்களே குறிக்கப்பட்டுள்ளன. எனது கருத்தைக் கவனத்தில் எடுப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

கிறிஸ்ரி
பாரிஸ்.

❋

## ஆசிரியக் குறிப்பு:-

**தமிழ்த் திங்களை, நாங்கள் அறிமுகம் செய்யும் நோக்குடனும், அம்மாற்றம் மக்கள் மத்தியில் எழுப்பும் பிரதிபலிப்புக்களை அறியும் நோக்குடனுமே, தமிழ்த் திங்கள் எமது 1994ம் ஆண்டின் முதல் இதழில் குறிக்கப்பட்டது. உலகின் முதல் 'கலண்டர்' தமிழர்களுடையது என்பது ஆய்வாளர்களின் கருத்து மாத்திரமல்ல; அறிவுக் களஞ்சிய நூல்களிலும் காணப்படும் செய்தி. நாமே உருவாக்கிய நாள்க் கணிப்பிற்கு வடமொழிச் சொற்களை ஏன் பயன்படுத்தி வருகிறோம்; தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தினால் எவ்வாறிருக்கும் என்ற ஓர் ஆய்வாகவே இம் மாற்றம் நிகழ்ந்தது. மேலும் நாம் தூய தமிழ் இயக்கத்தை நடத்தவில்லை என்றும் இங்கு கூறிக் கொள்ள விரும்புகிறோம். அத்தகு தூயதமிழ் இயக்கம் சாத்தியமில்லை என்பதையும் நாம் அறிவோம். விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகம் இவ்வாண்டு வெளியிட்ட நாட்காட்டியில் தமிழ்த் திங்கள்கள், நாள்கள் குறிக்கப்பட்டு வந்ததே எமது இப்பரிசீலனைக்குத் தூண்டுதலாய் அமைந்தது. இத்தகு மாற்றம் மக்களின் பழக்கத்தில் வரவேண்டிய அவசியத்தை விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்திற்கு அறிவித்துள்ளோம்.**

**அத்தகு, நெறியான, சிறந்த ஆய்வுத் தெளிவின் அடிப்படையிலான நிலையான மாற்றம் மக்களுக்கு விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தால் அறிமுகப்படுத்தும் வரை, பழைய முறையையே பின்பற்றுவதாகத் தீர்மானித்துள்ளோம்.**

**ஆசிரியர் குழு**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**தமிழகத்திலிருந்து வெளிவரும் "இனி" சஞ்சிகையின் தை, 1994 மாத இதழில் வெளியாகியிருந்த கட்டுரையை இங்கே மறுபிரசுரம் செய்கிறோம்**

# ஈழமும் பாலத்தீனமும் ஒன்றா?

யாராக இருந்தாலும் சரி... தமிழீழ விடுதலைப் போருக்கு உதவாவிட்டாலும்... அப்போரைக் கொச்சைப்படுத்தாமலாவது இருங்கள்... போதும்.

நீங்கள் அச்சம் உள்ள கோழைகளாக இருக்கலாம். அதற்காக அச்சம் இல்லா வீரர்களைத் தூற்றவேண்டியதில்லை.

உங்கள் கடைகளில் சரக்கில்லை என்றால்.. கடையை இழுத்து மூடுங்கள். வணிகம் ஓயாது நடக்கும் அடுத்தவன் கடையை எதிர்த்துப் பேசுவதையே உங்கள் 'வியாபாரம்' ஆக்காதீர்கள்.

தமிழீழப் போரையும் பாலத்தீனப் போரையும் ஒப்பிட்டு, தமிழீழக் கோரிக்கை கைவிடப்பட வேண்டும். அராபாத்தைப் போல் 'சுயாட்சி' பெற்றால் தமிழீழத்துக்குப் போதும், என்கிறீர்களே... எந்தத் தராசில் இரண்டையும் ஒன்றாக வைக்கிறீர்கள்?

பாலத்தீனர்கள் தாயகத்தை
முற்றாக இழந்துவிட்டு... தங்கள்
ட்டுக்கு வெளியே நின்று
ாடுகிறார்கள்... தமிழீழ மக்கள்
தாயகத்திலேயே நின்று
'சிக்குக் களம் காண்
அராபாத்துக்கு தாய
பெறுவதும் அதன்
ாடுவதும் முதல்
இருக்கலாம்.
ன சுயாட்
தீனர்கள்
ஒரு
என்ற
பலாம்.
அப்படியா?

தூ...
சுற...
தா...
வந்தேறு...
வீட்டி...
வீடு ப...
சுற்ற...
குறிச்சியி...
ஒரே வீட்ட...
அந்த ஒரு

அவர்கள் தங்கள் மண்ணிலேயே வாழ்கிறார்கள். அவர்களுக்குத் தங்கள் மண்ணின் எல்லை வகுக்கவோ... உலகைக்கொண்டு அதை உறுதி செய்யவோ ஒரு சுயாட்சி தேவை இல்லை.

அது மட்டுமல்ல...

இப்போதே அபுநிடால் போன்ற பாலத்தீன தலைவர்கள் பலர் அராபாத்தின் உடன்படிக்கையை எதிர்த்துக் களத்தில் இறங்கிவிட்டார்கள். பாலத்தீனர்கள் முற்றுமுழுதாக அராபாத்தின் 'பற்றாக்குறை பாலத்தீனத்தை' ஏற்றுக்கொள்ளவில்லை.

அராபாத் சுயாட்சியை ஏற்றுக் கொண்டாராம். ஆயுதங்களை ஒப்படைப்பாராம். தமிழீழ மக்களும் அராபாத்தைப் பின்பற்ற வேண்டுமாம்.

பாலத்தீனமும் தமிழீழமும் ஒன்றா?

பாலத்தீனர்கள் அரபுத் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள். அரபுத் தேசிய இனத்துக்கு உலகில் எத்தனை நாடுகள். எகிப்து, சிரியா, ஜோர்தான். ஈராக், சவுதி அரேபியா, குவைத் இப்படி...

பாலத்தீனப் போராளிகள் இன்று உடன்படிக்கையை ஏற்று ஆயுதங்கள் அனைத்தையும் ஒப்படைத்தாலும் நாளை இசுரேல் அரசால் ஏமாற்றப்படும் நிலைவந்தால் புதிதாக... உடனடியாக ஆயுதம் தூக்க அவர்களால் முடியும். அத்தனை அரபு நாடுகளும்.... அரசுகளும் அவர்களுக்கு ஆயுதம் வழங்குவார்கள். ஆனால் தமிழீழ மக்கள் சிங்கள அரசுக்குக் கீழான ஒரு சுயாட்சி உடன்படிக்கையை ஏற்று.. ஆயுதங்களை ஒப்படைத்த பின், ஏற்கனவே பலமுறை ஏமாற்றிய சிங்கள அரசால் மீண்டும் நாளை ஏமாற்றப்பட்டால்... சுயாட்சி கலைக்கப்பட்டால்... புதிதாகப் போரைத் தொடங்க தமிழர்கள் ஆயுதத்துக்கு எங்கே போவார்கள்? தமிழீழ மக்களுக்கு ஆயுதம் தர இன்னுமொரு தமிழர் அரசு உலகில் எங்கேனும் உண்டா?

தமிழீழப்போரை இன்னொரு கோணத்தில் பார்த்தால் நாம் தட்டிக்கழிக்க முடியாத மற்றுமோர் உண்மை தெளிவாகும்.

தமிழீழம் ஏற்கனவே எல்லைகள் கொண்டுள்ள நாடு மட்டுமல்ல... அரசு கொண்டுள்ள நாடும் ஆகும்.

உலகம் இன்னும் ஒப்புக்கொள்ளவில்லையே தவிர... தமிழீழத்தின் பெரும் பகுதியில் நடந்த மூன்று ஆண்டுகளாக தமிழர் அரசு நடக்கிறது என்பதுதான் உண்மை.

தன் நாட்டுக்கு வெளியே நாடும் இல்லாமல் அரசும் இல்லாமல் நிற்கும் அராபாத்துக்கு 'சுயாட்சி' தற்காலிக வெற்றியாக அமையலாம். ஆனால் தன் நாட்டில் நாடும் தனதாய்... தன் நாட்டின் ஒரு பகுதியில் அரசும் தனதாய்க் கொண்டுள்ள தமிழீழ மக்களுக்கு 'சுயாட்சி' தோல்வியாகுமேயன்றி எவ்வகையில் வெற்றியாய் அமையும்.

"மாநில சுயாட்சி கேட்ட முஜிபுர் ரகுமான் வங்காள தேசத்துக்கு 'தனி அரசு' பெற்றுத் தந்தாரே... அப்படித் தமிழீழப் போர் அமைய வேண்டும்." என்றுகூற வேண்டியவர்கள்... "'தனி அரசு' கேட்ட அராபாத் சுயாட்சி பெற்றாரே... தமிழீழ மக்கள் போர் இப்படியல்லவா அமைய வேண்டும்" என்று கூறுவது மாபெரும் துரோகமாகும்.

இவர்கள்... தமிழீழப் போராளிகளின் பிணங்களை ஏறி மிதிக்கிறார்கள். அந்த வீரர்கள் சிந்திய குருதியில் எச்சிலைக் கலக்கிறார்கள். உயிர்க் கொடையால் எழுதப்படும் தமிழீழ வரலாற்றுக்கு நெருப்பு வைக்கிறார்கள்.

எத்தனை கொடுமை.

தமிழனுக்கு உலகிலோர் தனி அரசு அமைவதற்கு தமிழனே தடையாகிறான்.

'சுயாட்சி'தான் சரியாம்.... சொல்கிறார்கள் சுரணையற்றவர்கள்.

'உங்கள் வாய்களை பூட்டிக் கொள்ளுங்கள்' என்று உரத்துச் சொல்லத் தோன்றுகிறது.

இங்கே உள்ள உங்கள் நாற்காலிகளுக்காக நீங்கள் அங்கே உள்ள பகைவனின் பாடையைப் பயன்படுத்தவேண்டாம்.

நாம் தான் நாதியற்றுப் போனோம்.

அவர்களையாவது விடுங்கள்; நிமிரட்டும்.

வீரமுத்து

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# வீர வணக்கம்

லெப் கேணல் அற்புதன்
( குகன் )




உயிருக்கு சாவு உண்டு!
வீரமறவர்களே !
நீங்கள் வித்தியாசமானவர்கள்!
உங்கள் சாவுக்கு உயிர் உண்டு

7ம்
ஆண்டு
நினைவு
நாள்



14.2.94



கவர் ( நகுலேஸ்வரன் )
குமணன் ( மோகனலிங்கம் )
தேவன் ( வசந்தகுமார் )
அக்பர் ( லோகநாதன் )



லெப். சித்தார்த்தர் ( வசீகரன் )
2வது லெப் பரன் ( அர்ச்சுணன் )
காப்டன் வாசு ( சுதாகர் )
யோகேஷ் ( பாலன் )
மேஜர் கேடில்ஸ் ( திலீபன் )

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்